# 1

# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு

உண்மைப் பொருளாதார வளர்ச்சி தளர்ப்புற்று 2017இல் பல ஆண்டு தாழ்வினைப் பதிவுசெய்த போதிலும் கடந்த இரு ஆண்டுகளாக மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்பாட்டிற்கான கொள்கை வழிமுறைகள் குறிப்பிடத்தக்களவு மேம்பாடுகளிற்கு வழிகோலின. 2015இன் இறுதியிலிருந்து படிப்படியாக இறுக்கமாக்கப்பட்ட மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடு மத்திய வங்கியின் முதன்மைக் கொள்கை வட்டி வீதங்களை 2017 மாச்சில் 25 அடிப்படைப் புள்ளிகளினால் உயர்த்தியதன் மூலம் மேலும் இறுக்கமாக்கப்பட்டது. அதிகரித்து சென்ற சந்தை வட்டி வீதங்கள் உயர்ந்த மட்டங்களில் உறுதியடைவதற்கு அனுமதிக்கப்பட்டன. இருப்பினும் அரச பிணையங்கள் சந்தையுடன் தொடர்புபட்ட முன்னேற்றங்கள் 2015 மற்றும் 2016இல் நிலவிய சில பிறழ்வுகளைத் திருத்திய அரச பிணையங்களின் விளைவுகளின் கணிசமான வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. இதனால் ஆண்டின் இறுதியில் சில சந்தை வட்டி வீதங்கள் மீது கீழ் நோக்கிய தாக்கத்தினைச் செலுத்தின. உயர்ந்த பெயரளவு மற்றும் உண்மை வட்டி வீதங்கள், ஆதரவான பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளுடன் இணைந்து 2017இல் நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சியில் ஒரு படிப்படியான மெதுவடைதலை ஏற்படுத்தியது. இந்த மெதுவடைதலானது மிகத் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளினூடாக மத்திய வங்கி உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மையைப் பொருத்தமான மட்டங்களில் பேணுவதனூடாக அடையப்பட்டிருந்தது. வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களின் மத்திய வங்கியின் தேறிய கொள்வனவுகளினால் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் விரைவாகக் கட்டியெழுப்பப்படுவதன் தாக்கத்தினை எதிரீடு செய்வதற்காக மத்திய வங்கியின் அரச பிணையங்களின் இருப்பு கணிசமானளவு குறைக்கப்பட்டது. குறுங்கால வட்டி வீதங்களை, குறிப்பாக வங்கிகளுக்கிடையிலா அழைப்புப் பணம் சந்தை வீதத்தை விரும்பப்பட்ட மட்டங்களில் பேணிக் கொள்வதற்குத் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் துணைபுரிந்த வேளையில் வழங்கல்பக்க தடங்கல்களால் உந்தப்பட்ட எதிர்பார்க்கப்பட்டதனை விட உயர்ந்த முதன்மைப் பணவீக்கத்திற்கு மாறாக பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதற்கு மேம்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை தொடர்பூட்டல் உபாயம் துணைபுரிந்தது.

இவ்வாண்டுக் காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை ஆழப்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இத்தகைய வழிமுறைகள், நாணய மாற்று வீதத்தில் மிதமிஞ்சிய தளம்பலை உருவாக்காமல் ஒரு கணிசமானளவு வெளிநாட்டுச் செலாவணியை உள்நாட்டுச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்வதற்கு மத்திய வங்கிக்கு துணைபுரிந்துள்ள வேளையில் பேரண்டப் பொருளாதார அடிப்படைக் கூறுகளுடன் ஒத்திசைவான சந்தையை அடிப்படையாகக் கொண்ட நாணய மாற்று வீதத்திற்கு வசதியளிக்கின்றன. இதன் விளைவாக, ஒரு பண்புசார் முன்னேற்றத்துடன் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 8.0 பில்லியனுக்கு அதிகரித்தன. நிதியியல் கணக்கிற்கான கணிசமான உட்பாய்ச்சல்களின் இன்னொரு விளைவாக இரண்டு ஆண்டுகளாக பற்றாக்குறையிலிருந்து சென்மதி நிலுவையின் திரண்ட நிலுவை ஐ.அ.டொலர் 2.1 பில்லியன் மிகையொன்றினைப் பதிவுசெய்தது. படுகடன் மூலதனமாகக் கணிசமானளவு உட்பாய்ச்சல்கள் அவதானிக்கப்பட்ட வேளையில் முன்னேற்றமடைந்துவரும் முதலீட்டாளர்களின் மனோபாவத்தினால் ஆதரவளிக்கப்பட்டு வெளிநாட்டு நேரடி முதலீடு 2017இல் வரலாற்றிலேயே அதியுச்ச உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்துள்ளது. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் மிக

1

மட்டங்களிற்கு அதிகரித்த போதிலும் வரட்சியுடன் தொடர்புபட்ட பெற்றோலிய மற்றும் அரிசி இறக்குமதிகள் மற்றும் தங்க இறக்குமதிகளிலிருந்து எழுந்த இறக்குமதிகளின் அதிகரிப்பு விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறைக்கு காரணமாகின. சுற்றுலா உட்பட்ட பணிகள் இறக்குமதிகளின் பேரிலான உட்பாய்ச்சல்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்புதல்கள் விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையின் தாக்கத்தினை குறிப்பிட்டளவில் தொடர்ந்தும் ஈடுசெய்துள்ள போதிலும் நடைமுறைக் கணக்கு இவ்வாண்டில் மொ.உ.உற்பத்தியின் 2.6 சதவீதமானதொரு பற்றாக்குறையைப் பதிவுசெய்தது. ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக இலங்கை ரூபா இவ்வாண்டு காலப்பகுதியில் 2.0 சதவீதம் தேய்வடைந்துள்ள வேளையில் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீத சுட்டெண்களும் தேய்வடைந்து நாணயத்தின் போட்டித்தன்மையை உயர்த்தியுள்ளது. உண்மை நியதிகளின் இத்தகைய நியாயவிலையிடப்பட்ட நாணயம் அடுத்துவரும் காலங்களில் சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையின் படிப்படியான சீராக்கத்தினை இயலச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச நிதியின் தொடர்பில், அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத்திரட்சி நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அதிகரித்த வரியரசிறைக்கும் வட்டியல்லாத செலவினங்களுக்கிடையிலான வேறுபாட்டினைப் பிரதிபலிக்கின்ற ஆரம்பக் கணக்கு மீதி 1992ஆம் ஆண்டிலிருந்து முதல் தடவையாகவும் 1955ஆம் ஆண்டிலிருந்து இரண்டாம் தடவையாகவும் மிகையொன்றிற்கும் வழிகோலியுள்ளது. இருப்பினும், அரசிறைச் சேகரிப்பு எதிர்பார்க்கப்பட்டதனைவிட தாழ்ந்ததாக இருந்த அதேவேளையில் மோசமான வானிலை நிலைப்பாடுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியிருந்தமையினாலும் உயர்வடைந்து சென்ற வட்டிக் கொடுப்பனவுகளினாலும் அரச செலவினம் பாதிக்கப்பட்டது. இது மொ.உ.உற்பத்தியின் 5.5 சதவீதமா முழுமொத்த வரவுசெலவுத் திட்டப்பற்றாக்குறை விரிவடைவதற்கு வழிகோலியது. ஆரம்பக் கணக்கு மிகை ஒரு குறிப்பிட்டளவில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசாங்கத்தின் படுகடன் குறைவதற்கு வழிவகுத்த வேளையில் உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து ஒப்பீட்டளவில்) அரச பிணையங்கள் சந்தையில் உயர்ந்த உண்மை வட்டி வீதங்கள் பொதுப்படுகடன் பிரமாணங்களில் மேலும் சாதகமான திருத்தத்தினை மட்டுப்படுத்தியது. தொடர்ச்சியான உயர்ந்த ஆரம்ப மிகைகளின் உருவாக்கம் அதிகரித்த உண்மை மொ.உ.உற்பத்தி மற்றும் மிதமான உண்மை வட்டி வீதங்களுடன் இணைந்து விரைந்த வேகத்தில் எதிர்காலத்தில் சாதகமான பொதுப்படுகடன் இயக்கவாற்றலை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பாதகமான வானிலை நிலைமைகளும் அவற்றின் கசிவுத் தாக்கங்களும் உண்மைப் பொருளாதார செயற்பாட்டினை தொடர்ச்சியாக பாதித்ததுடன் பொருளாதாரமானது உண்மை நியதிகளில் 3.1 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்து கீழ்நோக்கிய எதிர்பாராத அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது இலங்கையின் அதிகாரிகள் மற்றும் பன்னாட்டு முகவராண்மைகளின் எறிவுகளைவிட கணிசமானளவு கீழேயுள்ளது. தாழ்ந்த உண்மை மொ.உ.உற்பத்திக்கு மாறாக பொருளாதாரமானது போதுமான தொழில்வாய்ப்புக்ககளை உருவாக்கி ஆண்டு காலப்பகுதியில் தொழிலின்மை வீதத்தினை 4.2 சதவீதத்திற்கு மேலும் குறைத்துக் கொள்வதனைத் தூண்டியது. செலவினங்களின் நியதிகளில் 2017இல் வளர்ச்சியானது நுகர்வு மற்றும் முதலீட்டு செலவினம் இரண்டிலுமான விரிவாக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்ட அதேவேளையில் தேறிய வெளிநாட்டுக் கேள்வி தொடர்ந்து வளர்ச்சியில் எதிர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டிருந்தது. மொத்தப் பெறுமதி கூட்டலில் கூட்டாக 92.4 சதவீதத்திற்கு வகைகூறிய பணிகள் மற்றும் கைத்தொழிலுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் 4.0 சதவீதத்திற்கும் கீழான வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்தன. 2017ஆம் ஆண்டில் நான்காம் காலாண்டிற்கான மதிப்பீடுகள் ஒரு மீட்சியினை குறித்து நின்ற போதிலும் வேளாண்மையுடன் தொடர்புடைய செயற்பாடுகள் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாகவும் எதிர்க்கணிய வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

முதன்மைப் பணவீக்கம் இவ்வாண்டு காலப்பகுதியில் 2017 மாச்சில் முதலாவது உச்சத்தையும் 2017 ஒத்தோபரில் இரண்டாவது உச்சமாக இரட்டை உச்சங்களையும் பதிவுசெய்ததுடன் இரட்டை இலக்கத்திலான உணவுப் பணவீக்கத்தின் காரணமாக அநேகமான மாதங்களில் விரும்பப்பட்ட நடு ஒற்றை இலக்கங்களுக்கு மேலாகத் தொடர்ந்தது. எனினும், பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக நாணயக் கொள்கை வழிமுறைகள் தாக்கம் செலுத்தியதனால் மையப்பணவீக்கம் ஆண்டுகாலப்பகுதியில் படிப்படியாக மிதமடைந்தது. உணவுப் பணவீக்கத்தின் மிதமடைதலுடன் 2018 முதல் காலாண்டளவில் முதன்மைப் பணவீக்கம் கணிசமமானளவு மிதமடைந்ததுடன் சாதகமான பணவீக்கம், பணவீக்கத் தோற்றப்பாடு மற்றும் பலவீனமான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி போன்றவை 2018 ஏப்பிறலில் கொள்கை வட்டி வீத வீச்சின் மேல்எல்லையை 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்தன் மூலம் இறுக்கமான நாணயக் கொள்கை சுழற்சியின் முடிவொன்றினை சமிஞ்சை செய்வதற்கு ஊக்கமளித்து.

இதேவேளை, நிதியியல் துறை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு நிதியியல் சந்தைகளையும் தொடர்புபட்ட உட்கட்டமைப்பினையும் வலுப்படுத்துவதற்கும் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குமுறைகளுக்கு மத்தியில், ஒரு சில சிறிய வங்கியல்லா நிதி நிறுவனங்கள் நீங்கலாக, நிதியியல் துறை சிறப்பாகச் செயலாற்றியது. குறிப்பாக வங்கியல்லா நிதி நிறுவனங்கள் மற்றும் அரச பிணையங்களின் முதனிலை வணிகர்கள் தொடர்பில் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பில் சட்ட உரிமையை நடைமுறைப்படுத்தாதிருப்பதற்கான சாத்தியத்தினை

*கட்டுப்படுத்தும் பிரிவில் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒழுங்குவிதிகளுடன் இணங்காமைக்கெதிராக நேரகாலத்துடனான நடவடிக்கையை எடுப்பதற்காக வலுவான நடைமுறைக்கிடல் பொறிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விதிகளை அடிப்படையாகக் கொண்டதும் வெளிப்படைத்தன்மையினை கொண்டதுமான அரச பிணையங்களுக்கான ஏல முறைமை வட்டி வீதங்களில் தளம்பலை குறைப்பதற்கு துணைபுரிவதுடன் உள்நாட்டுப் படுகடன்கள் ஒரேநேரத்தில் முதிர்ச்சியடைவதனை சுமூகமாக்குவதிலும் துணைபுரிந்துள்ளது. புதிய தீவிர பொறுப்பு முகாமைச் சட்டம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு படுகடன் இரண்டிலும் எதிர்கால ஒரே நேரத்திலான முதிர்ச்சியை முனையச் செய்வதில் பெருமளவு நெகிழ்ச்சித்தன்மையை வழங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.*

*மேலும், தேறிய வெளிநாட்டு ஒதுக்குகள், அரசின் ஆரம்பக் கணக்கு மீதி மற்றும் பணவீக்கம் தொடர்பிலான ஆண்டிறுதி இலக்குகளை பொருளாதாரம் அடைந்து கொண்டதுடன் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டம் முன்னேற்றமடைந்தது.*

*முன்னோக்கிச் செல்கையில் தேவையான வளர்ச்சி ஆதரவு சீர்திருத்தங்களை நடைமுறைபடுத்துவதன் மூலம் பொருளாதாரத்தின் பலயீனமான செயலாற்றத்தினை கட்டுப்படுத்துவதற்கு முக்கியமான விடயமாக இருக்கும். 2017 இலங்கை ஐ.அ.டொலர் 4,065 தலா வருமானத்தினை அடைவதற்கு படிப்படியாக முன்னேற்றமடைந்து நடுத்தர வருமானமுள்ள பொருளாதாரமொன்றாக தன்மை நிலைப்படுத்தியுள்ளது. எனினும், உயர்ந்த பொதுப்படுகடன்களில் நீண்ட கால நோக்குடன் கொள்கை உருவாக்கம் பகுத்தறிவானதாகவுள்ள வேளையில் குறுகியகால அரசியல் ஆதாயங்களினால் உள்ளடக்கப்படுகின்ற கொள்கை ஊசலாட்டத்தினைக் குறைத்தால் மாத்திரமே நாடு மேலும் முன்னேற்றமடையும் ஆதலால் முன்மொழியப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் அவற்றின் நிலைபெறுகின்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கமைய அமைப்பு முறைக்குட்பட்டுள்ளது. அதிகளவில் சவாலாகிவரும் உலக மற்றும் உள்நாட்டு நிலைப்பாடுகளின் கீழ், நாட்டின் தடைகளற்ற முன்னேற்றத்தினை இயலச்செய்யும். இந்தவகையில் உள்நாட்டரசிறைச் சட்டத்தின் அமுலாக்கம், தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டமும் வெளிநாட்டுச் செலாவணிச்சட்டமும் இயற்றப்பட்டமை, மத்திய வங்கியின் சுயாதீனத் தன்மையை முன்னேற்றுவது மற்றும் நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடலை நோக்கி நகர்வதற்கு வசதியளித்தல் தொடர்பில் ஒருமித்த கருத்து அடையப்பட்டுள்ளமை. 2020 அளவில் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட பணவீக்க இலக்கிடலை நோக்கி நகர வசதியளிக்கும். அரச நிதி முகாமைத்துவத்தினை வலுப்படுத்துதல் மற்றும் பிணிப்பான இறை விதிமுறைகளைக் கையாளுவதன் மூலம் இறையின் நிலைத்திருக்கும் தன்மையினை உறுதிப்படுத்தல் நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியினை உயர்த்தக்கூடியதும் உலக உற்பத்தி வலையமைப்புக்களில் இலங்கைப் பொருளாதாரத்தை வினைத்திறனாக இணைக்கின்ற வர்த்தகம் மற்றும் முதலீட்டு வசதிப்படுத்தல் கட்டமைப்பினை நிறைவேற்றுதல் தொடர்பிலும் இன்னமும் அதிகம் செய்யப்படவேண்டியுள்ளது. கொள்கை உருவாக்கம் மற்றும் நிறைவேற்றம் போன்றவை தோல்வியடைந்த கொள்கைப் பரீட்சிப்புக்கள் அதிகமாக பாதிப்படைகின்ற வறுமையான சமூகம் என்பதால் சனத்தொகையின் பாதிப்படையக் கூடிய பிரிவுகளின் மீது இத்தகைய கொள்கைகளின் தாக்கம் பற்றியும் கவனம் செலுத்தவேண்டும்.*

## 1.2 2017இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புக்கள்

### உண்மைத் துறை அபிவிருத்திகள் மற்றும் பணவீக்கம்

**தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட உத்தியோகபூர்வமான தரவுகளின் படி, இலங்கையின் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2016ஆம்[1] ஆண்டில் பதிவாகிய 4.5 சதவீத வளர்ச்சியிலிருந்து 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் 3.1 சதவீதத்திற்கு மேலும் மெதுவடைந்தது.** பொருளாதார செயற்பாட்டிலான ஒரு மெதுவடைவு பணிகள் மற்றும் கைத்தொழில் ஆகிய இரு துறைகளிலும் அவதானிக்கப்பட்ட வேளையில், 2016ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்த மோசமான வானிலை நிலைமைகளின் பின்னணிக்கு எதிராக 0.8 சதவீதமான ஒரு சுருக்கத்தை வேளாண்மை தொடர்பான செயற்பாடுகள் பதிவுசெய்தன. வேளாண்மையின் உப செயற்பாடுகளின் மத்தியில் எண்ணத்தன்மையான பழங்கள், மரக்கறிகள் மற்றும் அரிசியின் வளர்ச்சிகள் எதிர்கணியமான வளர்ச்சி வீதத்தை அறிக்கையிட்டன. எவ்வாறாயினும் காடாக்கல் மரந்தறிப்பு, பழவகைகள் மற்றும் தேயிலை போன்றவற்றின் வளர்ச்சி வேளாண்மை நடவடிக்கைகளில் சுருக்கத்தினை மட்டுப்படுத்துவதற்கு ஓரளவிற்கு உதவியது. உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 26.8 சதவீதமாக பங்களிப்புச் செய்த கைத்தொழில் சார்ந்த நடவடிக்கைகள் 2017இல் 3.9 சதவீதமாக அதிகரித்தன. கைத்தொழில் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு உற்பத்தி நடவடிக்கைகள், கட்டடவாக்க நடவடிக்கைகள் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் போன்றவை பிரதானமாக துணைபுரிந்தன. எவ்வாறாயினும், யுத்தத்திற்கு பின்னரான முழு

1 மத்திய வங்கி ஆண்டறிக்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி பகுப்பாய்வானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அலுவல்சார் தகவல்களை அடிப்படையாக கொண்டது. இது தொடர்பில், 2017ஆம் ஆண்டிற்கான தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தின் மாகாண வளர்ச்சி மதிப்பீடுகளானது. மத்திய வங்கி, பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பொருளாதார பகுப்பாய்வுகளுடன் தொடர்பான ஏனைய முகவர் நிறுவனங்கள் போன்றவற்றின் வளர்ச்சி எறிவுகளுக்கு குறைவாகவே காணப்படுகின்றன. 2017ஆம் ஆண்டுக்கான, மாகாண வளர்ச்சி மதிப்பீடுகளுக்கும், பொருளாதார செயற்பாடுகளில் முக்கிய குறிகாட்டிகளுக்கும் இடையில் தொடர்பின்மை அவதானிக்கப்பட்டுள்ளது. மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளின் எதிர்வரும் மீளாய்வுகள் மற்றும் எதிர்கால வெளியீடுகளில், மொத்த உள்நாட்டு உற்பத்தி தொகுப்பில் தரவு உள்ளடக்கம் மற்றும் தரத்தினை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் தொடர்ந்தும் மேம்படுத்தும்.

1

அட்டவணை 1.1
பேரண்டப் பொருளாதார செயலாற்றம் (2013-2017)

| குறிகாட்டி | அலகு | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | 2017 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (இ)** | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 3.4 | 5.0 | 5.0 (அ) | 4.5 (ஆ) | 3.1 |
| நடைமுறை சந்தை விலையில் மொ.உ.உ. | ரூ.பில் | 9,592 | 10,361 | 10,951 (அ) | 11,907 (ஆ) | 13,289 |
| தலைக்குரிய மொ.உ.உ. (ஈ) | ஐ.அ.டொ. | 3,609 | 3,821 | 3,842 (அ) | 3,857 (ஆ) | 4,065 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -10.2 | -10.4 | -10.4 | -10.9 | -11.0 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -3.4 | -2.5 | -2.3 | -2.1 | -2.6 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | 985 | 1,369 | -1,489 | -500 | 2,068 |
| வெளிநாட்டு அலுவர்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 7,495 | 8,208 | 7,304 | 6,019 | 7,959 |
| **இறைத்துறை (இ) (உ)** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.7 | -1.2 | -2.3 | -0.6 | -0.7 |
| முதன்மை நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.8 | -1.5 | -2.9 | -0.2 | 0.0 |
| திரண்ட நிலுவை | மொ.உ.உ. இன் % | -5.4 | -5.7 | -7.6 | -5.4 | -5.5 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 70.8 | 71.3 | 77.7 | 78.8 | 77.6 |
| **நாணயத்துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (எ) | % | 16.7 | 13.4 | 17.8 | 18.4 | 16.7 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஊ) | % | 7.5 | 8.8 | 25.1 | 21.9 | 14.7 |
| ஆண்டுச்சாராசரிப் பணவீக்கம் (ஊ) | % | 6.9 | 3.3 | 2.2 | 4.0 | 6.6 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தின் 2010 தள ஆண்டை அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள்
(ஈ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் 2018 மார்ச்சு 20 கிடைக்கப்பெற்ற 2015 மற்றும் 2016ற்கான திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலானவை
(ஊ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(எ) 2014 வரையிலான தரவுகள் கொ.நு.வி.சு (2006/07=100) அடிப்படையாக கொண்டதுடன் 2015ற்குப் பின்னரான தரவுகள் கொ.வி.சு. (2013=100) அடிப்படையாகக் கொண்டவை
மொ.உ.உ - மொத்த உள்நாட்டு உற்பத்தி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

காலப்பகுதியிலும் சகல பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிந்த கட்டடவாக்க செயற்பாடுகளின் வளர்ச்சி, 2015 ஆண்டு தவிர்ந்து, 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் மிதமடைந்திருந்தது. நிதியியல் பணி நடவடிக்கைகள், மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் ஏனைய தனியாள் சேவை நடவடிக்கைகள் போன்றவற்றின் விரிவாக்கத்தினால் உந்தப்பட்டு ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில், உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 56.8 சதவீதமாக பங்களிப்புச்செய்த பணி நடவடிக்கைகள் 2017இல் 3.2 சதவீதமாக அதிகரித்தன. வேறுவிதமாக கூறின், இவ்வாண்டு காலப்பகுதியில் சகல பொருளாதார வளர்ச்சியில் மிதமடைதலை நோக்கி போக்குவரத்து செயற்பாடுகளில் மெதுவடைவு பங்களிப்புச் செய்திருந்த வேளையில், அரச நிருவாகம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒரு சுருக்கத்தைப் பதித்ததுடன், பணிகள் துறை வளர்ச்சியை தளர்வுறச் செய்தது.

**உற்பத்தி மதிப்பீடுகளின் மொத்த உள்நாட்டு செலவீன அணுகுமுறையின் படி, 2017இன் முதலீட்டு செலவினம் மற்றும் நுகர்வு ஆகிய இரண்டின் விரிவாக்கத்தினால் பெயரளவு நியதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரியப்பட்டது.** பொருளாதாரத்தின் மொத்த செலவினத்தின் மொத்த பங்கிற்காக பங்களிப்பு செய்கின்ற நுகர்வோர் செலவினமானது, 2016ஆம் ஆண்டின் 3.1 சதவீதமான மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெயரளவு நியதிகளில் 9.0 சதவீதமான ஒரு வளர்ச்சியை பதிவாக்கி இருக்கிறது. நுகர்வோர் செலவினத்தின் உயர் வளர்ச்சி உத்வேகமானது, அரச மற்றும் தனியார் செலவினம் ஆகிய இரண்டினதும் விரிவாக்கத்தின் ஒரு விளைவாக இருந்தது. இதேவேளையில், மூலதன செலவீனமானது, பெயரளவு நியதிகளில் 16.6 சதவீதமான ஒரு விரிவாக்கத்துடனான வளர்ச்சிக்கு தொடர்ச்சியாக துணைபுரிந்தது. எவ்வாறாயினும், 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டட நடவடிக்கைகளின் வளர்ச்சியிலான மெதுவடைவு, 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மூலதன செலவினத்தில் தாழ்வடைந்து செல்கின்ற வளர்ச்சி உத்வேகத்திற்கு பங்களிப்புச்

வரைபடம் 1.1
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு நடவடிக்கை வாரியான பங்களிப்பு




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

அட்டவணை 1.2

நடைமுறை சந்தை விலைகளில் கூட்டுக் கேள்வியும் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியும் (அ)(ஆ)

| விடயம் | ரூ.மில்லியன் | | வளர்ச்சி (%) | | மொ.உ.உ இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2016 (இ) | 2017 | 2016 (இ) | 2017 | 2016 (இ) | 2017 |
| 1. உள்நாட்டு கேள்வி | 12,781.0 | 14,247.7 | 8.5 | 11.5 | 107.3 | 107.2 |
| 1.1 நுகர்வு | 8,616.2 | 9,393.5 | 3.1 | 9.0 | 72.4 | 70.7 |
| தனியார் | 7,601.4 | 8,262.8 | 3.1 | 8.7 | 63.8 | 62.2 |
| பொது | 1,014.7 | 1,130.7 | 3.0 | 11.4 | 8.5 | 8.5 |
| 1.2 முதலீடு (தேறிய உள்நாட்டு மூலதன உருவாக்கம்) | 4,164.9 | 4,854.2 | 22.0 | 16.6 | 35.0 | 36.5 |
| 2. தேறிய வெளிநாட்டு கேள்வி | -874.3 | -958.2 | -6.0 | -9.6 | -7.3 | -7.2 |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி | 2,540.0 | 2,914.3 | 10.4 | 14.7 | 21.3 | 21.9 |
| பொருட்களினதும் பணிகளினதும இறக்குமதி | 3,414.3 | 3,872.5 | 9.2 | 13.4 | 28.7 | 29.1 |
| 3. மொத்த கேள்வி (மொ.உ.உ.) (1+2) | 11,906.8 | 13,289.5 | 8.7 | 11.6 | 100.0 | 100.0 |
| 4. உள்நாட்டு சேமிப்புகள் (3-1.1) | 3,290.6 | 3,896.0 | 27.1 | 18.4 | 27.6 | 29.3 |
| தனியார் | 3,362.3 | 3,992.1 | 18.5 | 18.7 | 28.2 | 30.0 |
| பொது | -71.7 | -96.2 | 70.9 | -34.1 | -0.6 | -0.7 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் (ஈ) | -321.3 | -356.3 | -16.9 | -10.9 | -2.7 | -2.7 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்கள் | 939.8 | 963.0 (ஈ) | 11.6 | 2.5 | 7.9 | 7.2 |
| 7. தேசிய சேமிப்புக்கள் (4+5+6) | 3,909.1 | 4,502.7 | 23.8 | 15.2 | 32.8 | 33.9 |
| 8. சேமிப்பு முமலீடு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டு சேமிப்புக்கள் - முதலீடு (4-1.2) | -874.3 | -958.2 | | | -7.3 | -7.2 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7-1.2) | -255.8 | -351.5 | | | -2.1 | -2.6 |
| 9. வெளிநாட்டு நடைமுறை கணக்கு நிலுவை (2+5+6) (ஈ) | -255.8 | -351.5 | | | -2.1 | -2.6 |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தின் 2010 தள ஆண்டை அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) திருத்தப்பட்டது

(ஈ) சென்மதி நிலுவை மதீப்பீடுகளின் வேறுபாடுகளிற்கு தொகுப்பில் ஏற்படுகின்ற காலதாமதமே காரணமாகும்

மொ.உ.உ. - மொத்த உள்நாட்டு உற்பத்தி

மூலங்கள் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

செய்திருந்தது. இருப்பினும், பெயரளவு நியதிகளில் 2016ஆம்[2] ஆண்டின் 35.0 சதவீதத்துடன் ஒப்பிடும்போது 2017ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினது சதவீதமாக முதலீடானது 36.5 சதவீதமாக உயர்வடைந்திருந்தது. 9.6 சதவீதமான (உண்மை நியதிகளில் 35.6 சதவீதம்) வெளிநாட்டு கேள்வியின் தேய்மானத்தின் மத்தியில் 11.5 சதவீதத்தால் (உண்மை நியதிகளில் 6.8 சதவீதம்) உயர்வடைந்திருந்த உள்நாட்டு கேள்வியினால் 2017ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரியப்பட்டது. 2016ஆம் ஆண்டில் 27.6 சதவீதத்திலிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உந்தப்பட்ட தனியார் மற்றும் உள்நாட்டு சேமிப்புக்கள் 2017ஆம் ஆண்டில் 29.3 சதவீதமாக அதிகரித்தது. உலகின் ஏனைய பகுதிகளிலிருந்து தேறிய நடைமுறை மாற்றல்கள் முன்னைய ஆண்டின் 7.9 சதவீதத்திலிருந்து 2017ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.2 சதவீதமாக குறைவடைந்து இருந்தபோதிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.2 சதவீதமாக குறைவடைந்து இருந்தபோதிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2016ஆம் ஆண்டில் 32.8 சதவீதத்தில் இருந்து 2017 ஆம் ஆண்டில் 33.9 சதவீதமாக இவ்வாண்டு காலப்பகுதியில் உயர்வடைந்து இருந்தது. இதன்படி உள்நாட்டு சேமிப்பு முதலீட்டு இடைவெளி மற்றும் தேசிய சேமிப்பு முதலீட்டு இடைவெளி ஆகியன 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் முறையே 7.2 சதவீதமாகவும் 2.6 சதவீதமாகவும் இருந்தது. பொருளாதாரம் வெளிநாட்டுத் துறையில் தங்கியிருப்பதனை பிரதிபலித்தது.

2 தொகைமதிப்பு புள்ளிவிபரத்திணைக்களத்தின் செலவின அணுகுமுறைகளை அடிப்படையாக கொண்ட 2016 மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான கடுமையான மீளாய்வானது அவதானிக்கப்பட்டுள்ளது. இதன்படி, மீளாய்வுகளின் மிகப் பிந்திய சுற்றுக்களில் 2016 இற்கான பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நுகர்வுகள் (இறுதி நுகர்வுச்செலவுகள்) 76.2 சதவீதத்திலிருந்து 72.4 சதவீதத்திற்கு திருத்தப்பட்ட வேளையில், பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) 31.5 சதவீதத்திலிருந்து 35.0 சதவீதத்திற்கு திருத்தப்பட்டது.

வரைபடம் 1.2

சேமிப்புகள், முதலீடு மற்றும் சேமிப்பு-முதலீடு இடைவெளி (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

1

**வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளின் பெறுமதி கூட்டப்பட்ட வளர்ச்சி முன்னைய ஆண்டைப் போல 2017ஆம் ஆண்டிலும் மோசமான வானிலை தாக்கத்தால் வீழ்ச்சிடைந்தது.** 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில், நெல், மரக்கறிகள், ஏனைய உணவுப் பயிர்கள் மற்றும் தெங்கு போன்ற முக்கிய வேளாண்மைப் பயிர்களின் விளைச்சலானது, பிரதானமாக இவ்வாண்டில் நிலவிய வரட்சியின் காரணமாக குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. 2016/17 பெரும்போகம் மற்றும் 2017 சிறுபோகங்களான இரண்டு நெல் உற்பத்தி காலங்களில் 2,383 மில்லியன் கிலோகிராமிற்கு 46.1 சதவீதத்தால் மொத்த நெல் உற்பத்தி குறைவடைந்ததன் விளைவாக கடந்த தசாப்த காலத்தில் மிகக் குறைந்த உற்பத்தியாக பதிவாகியதுடன் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தது. அதன் விளைவாக, 2017இல் அரிசி உற்பத்தியானது உள்நாட்டுக் கேள்வியில் 8 மாதங்களை மட்டுமே பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இருந்தது. இந்த அரிசியின் சில்லறை விலைகளின் உயர்வானது அரிசி இறக்குமதியின் மீதான தீர்வை குறைவதற்கு அரசாங்கத்தைத் தூண்டுகின்றது. அதனடிப்படையில், விலை அழுத்தங்களின் உயர்வு மற்றும் உள்நாட்டு உற்பத்திகளின் குறைபாடுகளை பூரணப்படுத்துவதற்கு இவ்வாண்டில் அரிசி இறக்குமதியானது அதிகரிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிலிருந்து தொடர்ந்த தெங்கு உற்பத்திகூட வரண்ட காலநிலைகளால் பாதிக்கப்பட்டது. உற்பத்தி வீழ்ச்சிக்கு மத்தியில் உடன் தேங்காயின் சில்லறை விலை சராசரியாக ரூ.67.40 இற்கு 47.1 சதவீதத்தாலும் தேங்காய்கள் 2,450 மில்லியனுக்கு 18.7 சதவீதத்தாலும் இந்த ஆண்டு அதிகரித்தது. மரக்கறிகள் மற்றும் ஏனைய உணவுப் பயிர்கள் இரண்டினதும் உற்பத்தி மோசமான காலநிலையில் பாதிக்கப்பட்டும் 2016/17 பெரும்போகக் காலம் மற்றும் 2017 சிறுபோகக் காலத்தில் மரக்கறி உற்பத்திகளும் குறைந்திருக்கின்றன. அதேவேளை, உச்ச விலையால் ஊக்குவிக்கப்பட்ட தேயிலைத் தயாரிப்பு, அண்மைக் காலமாக வீழ்ச்சியடைந்து வருகின்றது. 2017இல் சாதகமான வேளாண்மை காலநிலையால் பெருந்தோட்ட தேயிலைச் செய்கை முன்னேற்றம் கண்டதுடன், குறிப்பாக இரண்டாம் அரையாண்டில் அதிகரித்த இயலளவில் தொழிற்சாலைகள் தொழிற்பட்டன. இவ்வாண்டில் கால்நடைத்துறை கூட பால், முட்டை மற்றும் பலவகையான இறைச்சிகளின் அதிகரித்த வெளியீட்டுடன் ஒரு சாதகமான செயலாற்றத்தினை பதிவுசெய்தது. எவ்வாறாயினும், உள்நாட்டு மீன் உற்பத்தியின் அதிகரிப்பினை கடல் மீன் உற்பத்தியின் வீழ்ச்சி எதிரீடு செய்ததன் விளைவாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் மீன் உற்பத்தியை மாற்றமடையாமல் இருந்தது. மக்களின் ஒட்டுமொத்த நலன்களின் அடிப்படையில் வேளாண்மைத் துறையின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் அத்துறைக்கு அதிகரித்த உதவியை வழங்கியது.

**கைத்தொழில் நடவடிக்கையின் வளர்ச்சியானது, 2017 ஆண்டு காலப்பகுதியில் கட்டடவாக்கம், சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் போன்ற நடவடிக்கைகளின் வளர்ச்சியிலான மெதுவடைவினால் குறைவடைந்தது.** போருக்குப் பின்னான சகாப்த காலப்பகுதியில் பொருளாதாரத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் கணிசமானளவு உதவியாகவிருந்த கட்டடவாக்கத்துறை 2016ஆம் ஆண்டின் 8.3 சதவீதத்தின் ஒரு விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 3.1 சதவீதமான ஒரு வளர்ச்சியை மெதுவடைவாக பதிவு செய்தது. இதேவேளை, சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் தொழிற்பாடுகள், முன்னைய ஆண்டில் பதிவாயிருந்த 14.4 சதவீதமான விரிவாக்கத்திலிருந்து 2017ஆம் ஆண்டின் 5.9 சதவீதத்திற்கான வளர்ச்சியில் ஒரு மெதுவடைவினை சான்றுபகன்றது. மின்வலு, நீர், கழிவகற்றல், நடவடிக்கையிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட பங்களிப்பு, 2016ஆம் ஆண்டின் 10.1 சதவீதத்திலிருந்து இவ்வாண்டு பகுதியில் 3.9 சதவீதமாக கணிசமானளவு மெதுவடைந்தது. எவ்வாறாயினும் 2017ஆம் ஆண்டின் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 15.7 சதவீதமாக பங்களிப்பு செய்த உற்பத்தி நடவடிக்கைகள், 2016ஆம் ஆண்டின் 3.2 சதவீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் 3.9 சதவீதமான ஒரு வளர்ச்சியினால் அதன் வளர்ச்சி உத்வேகத்தில் ஓர் மேம்பட்டை பதிவுசெய்தது. ஆடை, இறப்பர், பிளாத்திக்கு போன்ற ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் உணவு மற்றும் ஏனைய உலோகமல்லாத கணிம உற்பத்திகள் போன்ற உயர் உள்நாட்டு சந்தை சார்ந்த கைத்தொழில்களிலான சாதகமான அபிவிருத்திகள், உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கு துணைபுரிந்தன. 2017ஆம் ஆண்டுகாலப்பகுதியில் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் தனியார் துறையின் பங்கேற்பினூடாக நாட்டின் கைத்தொழில் திறனை உயர்த்துவதன் மீது கவனம் செலுத்தியது.

**உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 56 சதவீதத்திற்கு மேலாக பங்களிப்பு செய்த பணிகள் நடவடிக்கையின் வளர்ச்சி வீதமும் 2017ஆம் ஆண்டு காலப்பகுதயில் மிதமடைந்திருந்தது.** 2016ஆம் ஆண்டில் 4.7 சதவீதமாக பதிவாகியிருந்த பணிகள் நடவடிக்கையின் வளர்ச்சியானது, போக்குவரத்து நடவடிக்கைகளின் மெதுவடைவு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அரச நிர்வாகத்தின் காரணமாக 2017ஆம் ஆண்டில் 3.2 சதவீதமாக மெதுவடைந்திருந்தது. இதன்படி, 2017ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 10 சதவீதத்திற்கும் மேலாக பங்களிப்பு செய்த போக்குவரத்து நடவடிக்கைகள் 0.9 சதவீதத்தால் சிறியளவில் உயர்வடைந்திருந்தது. இருப்பினும், பணிகள் செயற்பாடுகளிலான வளர்ச்சியானது 2017 காலப்பகுதியில் நிதியியல் பணிகளில் ஏற்பட்ட 9.4 சதவீத அவதானிக்கத்தக்க வளர்ச்சியின் மூலம் ஆதரவளிக்கப்பட்டது. மேலும், முறையே 3.8 சதவீதமாகவும் 3.2 சதவீதமாகவும் வளர்ச்சியடைந்த

அட்டவணை 1.3

### நிலையான விலைகளில் (2010) கைத்தொழில் மூலத்தின்படி மொத்தத் தேசிய வருமானம் (அ)(ஆ)

| பொருளாதார நடவடிக்கை | பெறுமதி ரூ.மில்லியன் | | மொ.உ.உ இன் பங்கு (%) | | மாற்றத்தின் வீதம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2016 (உ) | 2017 | 2016 (உ) | 2017 | 2016 (உ) | 2017 | 2016 (உ) | 2017 |
| **வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடி** | **644,262** | **639,273** | **7.1** | **6.9** | **-3.8** | **-0.8** | **-6.6** | **-1.8** |
| வேளாண்மை மற்றும் காடாக்கல் | 525,433 | 521,030 | 5.8 | 5.6 | -5.0 | -0.8 | -7.1 | -1.6 |
| மீன்பிடித்தொழில் | 118,829 | 118,243 | 1.3 | 1.3 | 1.6 | -0.5 | 0.5 | -0.2 |
| **கைத்தொழில்** | **2,399,285** | **2,492,286** | **26.6** | **26.8** | **5.8** | **3.9** | **34.0** | **33.1** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 218,587 | 231,516 | 2.4 | 2.5 | 14.4 | 5.9 | 7.1 | 4.6 |
| தயாரழிப்பு | 1,403,905 | 1,459,071 | 15.5 | 15.7 | 3.2 | 3.9 | 11.1 | 19.6 |
| மின்வலு,எரிவாயு,நீா மற்றும் கழிவு கையாளல் | 130,861 | 135,952 | 1.4 | 1.5 | 10.1 | 3.9 | 3.1 | 1.8 |
| கட்டடவாக்கம் | 645,933 | 665,747 | 7.1 | 7.1 | 8.3 | 3.1 | 12.7 | 7.0 |
| **பணிகள்** | **5,124,016** | **5,289,227** | **56.7** | **56.8** | **4.7** | **3.2** | **59.3** | **58.8** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம், போக்குவரத்து மற்றும் களஞ்சியப்படுத்தல், குடியிருப்பு மற்றும் உணவுப்பணிகள் நடவடிக்கைகள் | 2,083,262 | 2,135,987 | 23.1 | 22.9 | 4.0 | 2.5 | 20.8 | 18.8 |
| தகவல் மற்றுமு் தொடர்பூட்டல் | 52,827 | 58,203 | 0.6 | 0.6 | 8.0 | 10.2 | 1.0 | 1.9 |
| வதிவிட உரிமை உள்ளடங்கலாக நிதியில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து நடவடிக்கைகள் | 1,163,600 | 1,245,261 | 12.9 | 13.4 | 9.2 | 7.0 | 25.5 | 29.0 |
| தொழிற்தகமை பணிகள் மற்றும் ஏனைய தனியார் பணிகள் நடவடிக்கைகள் | 1,037,514 | 1,072,260 | 11.5 | 11.5 | 0.9 | 3.3 | 2.5 | 12.4 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு, கல்வி, மனித நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 786,812 | 777,516 | 8.7 | 8.3 | 4.9 | -1.2 | 9.5 | -3.3 |
| **அடிப்படை விலையில் மொத்த பெறுமதி கூட்டல்** | **8,167,563** | **8,420,786** | **90.4** | **90.4** | **4.3** | **3.1** | **86.8** | **90.1** |
| மானியங்கள் நீங்கலாக உற்பத்தி மீதான வரி | 866,727 | 894,702 | 9.6 | 9.6 | 6.3 | 3.2 | 13.2 | 9.9 |
| **சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **9,034,290** | **9,315,488** | **100.0** | **100.0** | **4.5** | **3.1** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மை வருமானம் | -239,263 | -252,040 | | | -11.4 | -5.3 | | |
| **சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம்** | **8,795,027** | **9,063,448** | | | **4.3** | **3.1** | | |

(அ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தின் 2010 தள ஆண்டை அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திருத்தப்பட்டது

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் மற்றும் ஏனைய தனியாள் பணிகள் நடவடிக்கைள், பணிகள் துறையின் வளர்ச்சியை நோக்கி சாதகமாக பங்களிப்புச் செய்தது.

**2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் வேலையின்மை வீதம் முன்னைய ஆண்டில் 4.4 சதவீதத்திலிருந்து 4.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழிலின்மை வீதம் குறைவாக இருந்தபோதும், இளைஞர், கல்வி கற்றோர் வர்க்கம் மற்றும் பெண்களுக்கிடையே தொழிலின்மை உயர்வாக இருக்கின்றமை நாட்டில் நிடித்து நிலவுகின்ற ஒரு பிரச்சினையாக இருந்துவருகின்றது.** இருப்பினும், 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெண் மற்றும் இளைஞர் மத்தியிலான தொழிலின்மையில் ஒரு வீழ்ச்சி இருந்தது. தொழிலற்ற ஆண்கள் வீதம் 2.9 சதவீதமாக மாற்றமடையாதிருந்த போது 2016ஆம் ஆண்டில் 7.0 சதவீதத்திலிருந்து 2017ஆம் ஆண்டு 6.5 சதவீதத்திற்கு தொழிலற்ற பெண்கள் வீதம் வீழ்ச்சியடைந்தது. மேலும், முன்னைய ஆண்டில் 21.6 சதவீதத்திலிருந்து 2017ஆம் ஆண்டு 18.6 சதவீதத்திற்கு 15 தொடக்கம் 24 வயதிற்கிடையிலான தொழிலற்ற இளையோர் தொகை வீழ்ச்சியடைந்து அதிகரித்த தொழிற்படை பங்கேற்பு வீதத்தின் மத்தியில் விசேடமாக பெண்களுக்கிடையில் தொழிலின்மை வீதத்தில் வீழ்ச்சியேற்பட்டது. பெண்களுக்கிடையே தொழிற்படை பங்கேற்பு வீதம் 2016ஆம் ஆண்டில் 35.9 சதவீதத்திலிருந்து 2017ஆம் ஆண்டில் 36.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. எவ்வாறாயினும், ஆண் தொழிற்படை பங்கேற்பு வீதம் முன்னைய ஆண்டில் 75.1 சதவீதத்திலிருந்து 2017இல் 74.5 சதவீதத்திற்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. அதேநேரம், பிரதானமாக கைத்தொழில் மற்றும் சேவைகளில் வேலைவாய்ப்பு அதிகரித்ததன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 2017ஆம் ஆண்டில் 3.3 சதவிதத்தினால் தொழிலுள்ளோரின் எண்ணிக்கை அதிகரித்தது. அரச பணிகள் அளவு பெருமளவில் மாற்றமடையாது இருந்த போதிலும், வேலைவாய்ப்பின் அதிகரிப்பானது, ஒரு உயர்ந்த கட்டுப்பாட்டு இறைச் சூழலில் தொழில் உருவாக்கத்திற்கான நீடித்து நிலைத்திருக்கும் பாதையை அமைத்திருப்பதுடன் தொழில் வாய்ப்பின் கடந்தகால போக்குகளில் ஒரு மாற்றத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

வரைபடம் 1.3

### தொழிலின்மை




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்

**எவ்வாறாயினும், வேளாண்மைத் துறையில் ஈடுபட்ட தொழிலிலுள்ளோரின் எண்ணிக்கையானது, வேளாண்மை நடவடிக்கைகளின் குறைந்த செயலாற்றத்தின் காரணமாக 2017ஆம் ஆண்டில் 26.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.** வெளிநாட்டு தொழில் வாய்ப்பிற்காக புறப்படுகின்ற புலம்பெயர் தொழிலாளர்கள், மத்திய கிழக்கு பொருளாதாரத்தினது புவிசார் அரசியல் நிச்சயமற்ற தன்மைகளின் காரணத்தினால் ஏற்படுகின்ற எதிர்கணியமான சமூக தாக்கம் மற்றும் தொழிலாளருக்கான குறைந்த கேள்வி போன்றவற்றை கருத்திற் கொண்டு தேர்ச்சி பெறாத பெண் புலம்பெயர்ந்தோரை குறைப்பதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகளின் காரணமாக 2017ஆம் ஆண்டில் 12.6 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. ஒட்டுமொத்தமாக, ஆண்டின் முதல் மூன்று காலாண்டு பகுதி காலத்தில் சிறியளவில் குறைவடைந்திருந்தது. அத்துடன் ஏனைய துறைகளுடன் ஒப்பிடுகையில் வேளாண்மை துறையினது உற்பத்தித்திறன் நிலையானது குறிப்பிடத்தக்க குறைந்த நிலையில் தொடர்ச்சியாக இருந்தது.

பொருளாதாரத்தின் வருமான வேறுபாடு சிறிதளவு முன்னேற்றத்தை காட்டிய வேளை, வறுமை மட்டங்கள் வீழ்ச்சியடையத் தொடங்கியது. தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2016ஆம் ஆண்டுக்கான குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின் ஆய்வின் பெறுதிகளின் அடிப்படையில் வறுமை முதன்மை எண்ணிக்கை வீதம் (2012/13) இற்கு முற்பட்ட அளவீட்டுக் காலத்தில் 6.7 சதவீதத்திலிருந்து 4.1 சதவீதமாக குறைவடைந்தது. வறுமை மட்டங்களின் மேம்பாடானது, நகர, கிராமிய மற்றும் பெருந்தோட்ட துறைகளில் முறையே 1.9 சதவீதம், 4.3 சதவீதம் மற்றும் 8.8 சதவீத வறுமை முதன்மை எண்ணிக்கை வீதத்துடன் துறைகள் முழுவதிலும் கண்டறியப்பட்டது. வறுமை நிலைகள் நிலையான வீழ்ச்சியடைந்திருந்தும் இயற்கை அனர்த்தங்கள் மற்றும் வியாதிகள் போன்ற எதிர்பாரா நிகழ்வுகளை எதிர்கொள்வதில் தங்களுடைய பாதிப்பினை தெரியப்படுத்துகின்ற ஓர் கணிசமான குடித்தொகை பகுதி வறுமை நிலையின் ஆரம்ப கட்டத்திற்கு சற்று மேலாகவே இருந்து வருகிறது. எனவே, முக்கியமாக இருக்கின்ற திறன்மிக்க சமூகப் பாதுகாப்பு வலைகள் மற்றும் வலுவூட்டலூடாக சிறந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதனை நோக்கிய முயற்சிகள் தொடரப்பட்டுள்ளன. அதேவேளையில், கினி குணகத்தினை அடிப்படையாகக் கொண்ட குடியிருப்பாளர் வருமான சமமின்மையானது, 2012/13 குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின அளவீட்டில் 0.48 இலிருந்து 2016 குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவீன அளவீட்டில் 0.45 ஆக கணிசமான அளவு மேம்பட்டது.

**ஆண்டின் பிற்பட்ட காலப்பகுதியில் மையப்பணவீக்கமானது நிலைப்படுத்தப்பட்டு விரும்பப்பட்ட மட்டங்களில் இருந்தபோது முதன்மை பணவீக்கமானது 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலக்கு மட்டத்திற்கு மேலாகவிருந்தது.** மத்திய வங்கியினால் இறுக்கமான நாணயக் கொள்கை நிலை பேணப்பட்ட போதிலும், வானிலைசார் வழங்கலின் தடைகளால் பாதிக்கப்பட்ட உணவுப் பணவீக்கத்தின் சீரான முடுக்கமானது முதன்மைப் பணவீக்கத்தில் எதிர்பாராத மேல்நோக்கிய அசைவுகளினை வெளிப்படுத்தியது. பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மற்றும் தேசிய கட்டுமான வரியை திருத்துதல் மற்றும் உலக சந்தையில் பண்டத்தின் உயர் விலை போன்றனவும் பணவீக்க உயர் நிலைகளில் பங்களிப்பு செலுத்தின. அதன்படி, முதன்மைப் பணவீக்கமான, 2017ஆம் ஆண்டின் முதற் காலாண்டின் ஆரம்பத்திலும் அதன் பின்னர் இறுதிக் காலாண்டின் ஆரம்பத்திலும் தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (தே.நு.வி.சு, 2013=100) மற்றும் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (கொ.நு.வி.சு, 2013=100) ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்ட முதன்மைப் பணவீக்கமானது இரட்டை உச்சத்தை அனுபவித்தது. எவ்வாறாயினும், விலை அதிகரித்தலை கட்டப்படுத்துவதற்கு அரசாங்கத்தின் முயற்சிகளால் பகுதியளவில் துணை புரியப்பட்ட உணவுப் பணவீக்க மெதுவடைதலானது ஆண்டின் இறுதிக் காலத்தில் பணவீக்கம் மெதுவடைவதற்கு உதவியது. 2017ஆம் ஆண்டு மாச்சில் 8.6 சதவீதமாகவிருந்த தேசிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு முதன்மை பணவீக்கமானது, 2017ஆம் ஆண்டு ஒத்தோபரில் 8.8 சதவீதத்தின் ஒரு உச்சத்தை அடைவதற்கு முன்னர் படிப்படியாக மெதுவடைந்தது. 2017ஆம் ஆண்டின் இறுதியில் 7.3 சதவீதமாக மிதமடைந்தது. அதேபோன்றதொரு போக்கினை தொடர்ந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2017ஆம் ஆண்டு ஒத்தோபரில் 7.8 சதவீதமாக உச்சமடைந்தது. 2017 மாச்சில் 7.3 சதவீதமாக அதிகரித்ததுடன் 2017ஆம் ஆண்டின் இறுதியில் 7.1 சதவீதமாக வீழ்ச்சியடைவதற்கு முன்னர் வருடாந்த சராசரி அடிப்படையில், 2016ஆம் ஆண்டு இறுதியில் பதிவாகிய 4.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டின் 6.6 சதவீதமாக கொழும்பு

வரைபடம் 1.4

முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

நுகர்வோர் விலைச் சுட்டெண் உயர்வடைந்தது. போது 2016ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாகிய 4.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டின் இறுதியில் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மை பணவீக்கம் 7.7 சதவீதமாக உயர்வடைந்தது. எவ்வாறாயினும், உணவு பணவீக்கத்தின் ஒரு சீரான வீழ்ச்சியிலிருந்தான நன்மையடைதலினால், ஆண்டுக்கு ஆண்டு முதன்மை பணவீக்கமானது 2018ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுப் பகுதியில் அதன் மிதமடைதலை தொடர்ந்தது. அதன்படி, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 2018ஆம் ஆண்டு மாச்சில் 4.2 சதவீதமாக பதிவாகியிருந்த போது தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு முதன்மை பணவீக்கம் 2018ஆம் ஆண்டு பெப்புருவரியில் 3.2 சதவீத்தால் மெதுவடைந்திருந்தது. அதேவேளையில், மத்திய வங்கியின் இறுக்கமான நாணயக் கொள்கை நிலையினூடாக கேள்வி அழுத்தங்கள் மட்டுப்படுத்தப்பட்டதன் தாக்கத்தினால் 2017ஆம் ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மையப்பணவீக்கமானது குறைவாகவே இருந்தது. தேசிய நுகர்வொர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கமானது, 2016 ஆண்டின் இறுதிப் பகுதியில் 6.7 சதவீதமாகவிருந்தது. 2017ஆம் ஆண்டின் இறுதியில் ஆண்டுக்கு ஆண்டு 2.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கமானது, 2016ஆம் ஆண்டின் இறுதியில் 5.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டு இறுதியில் 4.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு மையப்பணவீக்கம் 2018 மாச்சில் 3.4 சதவீதமாக மெதுவடைந்திருந்த போது 2018ஆம் ஆண்டு பெப்புருவரியில் 2.0 சதவீதமாக பதிவாகியிருந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு மையப் பணவீக்கத்துடன் 2018ஆம் ஆண்டு ஆரம்பத்தில் ஒரு மேலதிக மெதுவடைவு அவதானிக்கப்பட்டிருந்தது.

## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

**நடைமுறைக் கணக்கில் பின்னடைவுகள் இருந்தபோதிலும், நிதியியல் கணக்கிற்கான உயர்ந்த வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலுடன் 2017இல் இலங்கையின் வெளிநாட்டுத் துறை படிப்படியாக முன்னேற்றங்கண்டது.** ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + (ஜி.எஸ்.பி+) வசதியின் மீள்கிடைப்பனவு மற்றும் உறுதியான நிறுவன மற்றும் கொள்கை உதவி என்பன, 2017இல் வணிகப் பண்டங்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஒரு குறிப்பிடத்தக்க இரட்டை எண் வளர்ச்சியை பதிவுசெய்வதற்கு, பகுதியளவில் உதவின. தடங்கலான வானிலை நிலைமைகளின் தாக்கத்தினை முகாமை செய்வதற்கு, குறிப்பாக எரிபொருள் மற்றும் அரிசி இறக்குமதிகள் உட்பட இறக்குமதிச் செலவினங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாக காணப்பட்டமை அதேபோன்று

வரைபடம் 1.5
சென்மதி நிலுவை




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

தங்கத்தின் இறக்குமதி என்பன ஆண்டுகாலப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையில் விரிவாக்கத்தினை ஏற்படுத்தின. நேரடி முதலீட்டு நிறுவனங்களால் வருவாய் மீள்முதலிடப்பட்டமை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளிலான அதிகரிப்பு என்பன பிரதானமாக முதன்மை வருமானக் கணக்ககளின் பற்றாக்குறையை ஆண்டுகாலப்பகுதியில் விரிவுபடுத்தியது. போக்குவரத்து மற்றும் கணனிப் பணிகளில் ஆரோக்கியமான வளர்ச்சி பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை அதிகரிப்பதற்கு பங்களித்த போதிலும், டெங்கு தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும், ஓடுபாதை மீளத்தளமிடலுக்கும் பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையம் பகுதியளவில் மூடப்பட்டு காணப்பட்டமையினால் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் மிதப்படுத்தல் என்பன பணிகள் கணக்கின் எதிர்பார்க்கப்பட்ட உட்பாய்ச்சல்களின் விரிவாக்கத்தை குறைவடையச் செய்தன. 2017இல் பெரும்பாலான மாதங்களில் நிலவிய ஒப்பிட்டளவில் குறைவான பெற்றோலிய விலைகள் மற்றும் நிச்சயமற்ற புவியியல்சார் நிலைமைகளைத் தொடர்ந்து மத்திய கிழக்கு பொருளாதாரங்களின் மந்தமான வளர்ச்சியானது பகுதியளவில், 2017ஆம் ஆண்டில் தொழிலாளர்களின் பணவனுப்பல்களையும் குறைவடையச் செய்தது. வர்த்தக, பணிகள் மற்றும் முதன்மை மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளின் ஒருங்கிணைக்கப்பட்ட தாக்கம் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை 2016இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.1 சதவீதத்திலிருந்து 2017இன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.6 சதவீதத்திற்கு விரிவடையச் செய்தது. இதற்கு முரணாக நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் எப்போதும் இல்லாதவாறான உயர்வான வருடாந்த உட்பாய்ச்சல், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மற்றும் அரச பிணையங்கள் சந்தையிலான வெளிநாட்டு முதலீடுகள், பதினொராவது நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வருமானத்தின் பெறுவனவு, வெளிநாட்டு நாணய தவணை நிதியிடல் வசதிகள், பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து சிறப்பு எடுப்பனவு திட்டத்தின் இரண்டு கட்டங்கள் மற்றும் அரச மற்றும் தனியார் துறைக்கான ஏனைய வெளிநாட்டு நாணய உட்பாய்ச்சல்கள் என்பவற்றுடன் குறிப்பாக ஆண்டின் கடைசி மூன்றாம் காலாண்டுப் பகுதியில்

1

சென்மதி நிலுவையில் நிதியியல் கணக்கு கணிசமமானளவு முன்னேற்றமடைந்தது. இந்த அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2017இல் சென்மதி நிலுவையில் திரண்ட நிலுவை ஐ.அ.டொலர் 2.1 பில்லியன் மிகையினைப் பதிவுசெய்தது. வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குபடுத்தல்கள் வடிவிலான குறுகிய காலப் பொறுப்புக்கள் 2016இன் இறுதியில் ஐ.அ.டொலர் 2.5 பில்லியனிலிருந்து 2017இன் இறுதியளவில் 1.5 பில்லியனாக குறைக்கப்பட்ட வேளையில், அளவு மற்றும் பண்பு இரண்டு அடிப்படையிலும் மொத்த அலுவல்சார் ஒதுக்கு நிலைமை 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 0.6 பில்லியனிலிருந்து 2017 இறுதியளவில் ஐ.அ.டொலர் 8.0 பில்லியனுக்கு முன்னேற்றமடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை மேலும் விரிவுபடுத்த மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகளுடன் வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள் மேம்படுத்தப்பட்டமை இலங்கை மத்திய வங்கி சந்தையை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதக் கொள்கையை பின்பற்ற வசதியளித்தது. அதற்கிணங்க உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 1.7 பில்லியன் ஈர்த்துக்கொள்ளப்பட்டதுடன் இலங்கை ரூபாவில் வெளிநாட்டுப் பெறுமதி தொடர்ந்தும் ஒப்பீட்டளவில் நிலையாக 2017இல் ஐ.அ.டொலருக்கெதிராக 2.0 வீதத்தினால் மட்டும் தேய்வடைந்தது.

**ஆண்டுகாலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினை விட இறக்குமதிச் செலவினங்கள் அதிகரித்தமையினால் வர்த்தக நிலுவை விரிவடைந்தது.** இது ஏற்றுமதிகளிலிருந்தான கணிசமமான அதிகரிப்பிலும் மேலோங்கிக் காணப்பட்டது. வர்த்தக நிலுவை 2016இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 8,873 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 9,619 மில்லியனாக விரிவடைந்தது. வர்த்தக நிலுவை மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முன்னைய ஆண்டின் 10.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 11.0 சதவீதமாகக் காணப்பட்டது.

**2000ஆம் ஆண்டில் மொ.உ.உற்பத்தியின் 33.3 சதவீதத்திலிருந்து 2016ஆம் ஆண்டில் 12.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து மந்தமான செயற்றிறனைக் பிரதிபலித்து 2017 காலப்பகுதியில் ஏற்றுமதிகள் வருவாயின் அடிப்படையில் வரலாற்றில் உயர்ந்த பெறுமதியினைப் பதிவுசெய்தது.** அதற்கிணங்க, ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள் 10.2 சதவீதத்தினால் 2017இல் ஐ.௫.டொலர் 11,360 மில்லியனுக்கு அதிகரித்தது. ஏற்றுமதியிலான அதிகரிப்பானது ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைகளின் முறைமை வசதிகளின் மீள்கிடைப்பனவு, வெளிநாட்டு கேள்வியிலான மீட்சி, ஏற்றுமதியுடன் தொடர்புபட்ட கைத்தொழில்களினான முதலீட்டின் விரிவாக்கம், பன்னாட்டுச் சந்தையில் பொருட்களின் விலை அதிகரிப்பு, மத்திய வங்கியினால் பேணப்பட்ட நெகிழ்ச்சியான செலாவணி வீதக் கொள்கையின் சாதகமான தாக்கம் மற்றும் உறுதியான நிறுவனம்சார் ஆதரவுடன் இணைந்த உகந்த வெளிநாட்ட வர்த்தக கொள்கைகள் என்பனவற்றினால் உதவப்பட்டது. ஆண்டுகாலப்பகுதியில் ஏற்றுமதியில் செயலாற்றம் அதிகரித்தமைக்கு பிரதானமாக, தேயிலை (20.5 சதவீதம்), புடவைகளும் ஆடைகளும் (3.0 சதவீதம்), பெற்றோலிய உற்பத்திகள் (51.4 சதவீதம்) மற்றும் வாசனைத்திரவியங்கள் (28.1 சதவீதம்) என்பனவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களின் அதிகரிப்பு பங்களித்தது. புடவைகள் மற்றும் ஆடைகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், மொத்த ஏற்றுமதியில் அண்ணளவாக 44 சதவீதத்திற்கு வகைகூறி வரலாற்றில் முதற்தடவையாக ஐ.அ.டொலர் 5 பில்லியனை முறியடித்தது. எவ்வாறாயினும், சில துறைகளில் குறிப்பிடத்தக்க செயலாற்றுகையின் மத்தியிலும் தெங்கு (-4.9 சதவீதம்), இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் (-6.0 சதவீதம்) மற்றும் தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணிகள் (-4.4 சதவீதம்) என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 2017ஆம் ஆண்டுகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது. 2017இல் இலங்கையின் ஏற்றுமதிகளின் தனியான பாரிய கொள்வனவாளராக ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்து காணப்பட்டது. இது மொத்த ஏற்றுமதியில் 25.6 சதவீதத்திற்கு வகைகூறியது. அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியம் (9.1 சதவீதம்), இந்தியா (6.1 சதவீதம்), சேர்மனி (4.8 சதவீதம்) மற்றும் இத்தாலி (4.6 சதவீதம்) காணப்பட்டன. ஏற்றுமதியிலிருந்தான வருவாய்களில் அதிகரிப்புடன் தொடர்புபடும் வகையில் ஒட்டுமொத்த ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 7.6 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் ஐ.அ.டொலர்களிலான ஏற்றுமதி விலைச் சுட்டெண் 2.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

**2017இல் இறக்குமதிகள் மீதான செலவீனங்கள் கணிசமான அளவு அதிகரித்ததற்கு, சீரற்ற வானிலை நிலைமைகளுடன் தொடர்புபட்ட உயர் இறக்குமதிகள் மற்றும் பன்னாட்டு பண்டங்களின் விலைகளின் நிலைப்படுத்தல் என்பனவே காரணமாகும்.** அதற்கிணங்க, 2017 காலப்பகுதியில் இறக்குமதிகள் 9.4 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 20,980 மில்லியனிற்கு அதிகரித்தது, இதனுள் எரிபொருளற்ற இறக்குமதிகள் 5.1 சதவீதத்தால் ஐ.அ.டொலர் 17,552 மில்லியனிற்கு அதிகரித்தது. பன்னாடு சந்தையில் எண்ணெய் விலைகளில் உயர்வு அதேபோன்று நீரேந்தல் பிரதேசத்தில் காணப்பட்ட உலர்ந்த காலநிலையினால் உள்நாட்டு வலு உற்பத்தி துறையிடமிருந்தான உயர்ந்த கேள்வியினால் எரிபொருள் இறக்குமதி அளவின் அதிகரிப்பின் காரணமாக எரிபொருள் இறக்குமதி மீதான செலவினங்கள் 38.2 சதவீதத்தினால் ஐ.அ.டொ. 3,428 மில்லியனிற்கு அதிகரித்தது. அரிசி இறக்குமதி மீதான செலவீனங்கள், பாதகமான வானிலை நிலைமைகளின் காரணமாக உள்நாட்டு சந்தையில் ஏற்பட்ட பற்றாக்குறையினால் அரிசியின் இறக்குமதி மீதான தீர்வை குறைக்கப்பட்டதன் விளைவை பிரதிபலிப்பதாக

2016இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 13 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 301 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. இதற்கு மேலதிகமாக வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் (50.1 சதவீதம்), அடிப்படை உலோகம் (37.8 சதவீதம்) மற்றும் கோதுமை மற்றும் சோளம் (43.1 சதவீதம்) என்பனவும் கணிசமான அளவு அதிகரித்தன. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான தீர்வைகளின் வேறுபாட்டினால் வசதியளிக்கப்பட்ட வியாபாரத்தின் விளைவாக தங்கத்தின் இறக்குமதியானது அதிகரிப்பொன்றை பதிவுசெய்தது. எவ்வாறாயினும், ஆண்டின் காலப்பகுதியில் பொறி மற்றும் கருவிகள் (-4.4 சதவீதம்) சீனி (-25.2 சதவீதம்), வாசனைப் பொருட்கள் (-29.7 சதவீதம்) மற்றும் வளமாக்கி (-24.9 சதவீதம்) என்பவற்றின் மீதான இறக்குமதி செலவினம் குறைவடைந்தது. இந்தியாவிலிருந்தான இறக்குமதி மொத்த இறக்குமதிச் செலவினத்தில் 21.6 சதவீதத்திற்கு வகை கூறுவதோடு இலங்கையில் பிரதான இறக்குமதி மூலமான அதன் நிலையை மீளப்பெற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து சீனா (18.9 சதவீதம்), ஐக்கிய அரபு இராச்சியம் (8.1 சதவீதம்), சிங்கப்பூர் (6.4 சதவீதம்) மற்றும் ஜப்பான் (4.9 சதவீதம்) ஆகும். ஒட்டுமொத்த இறக்குமதி அளவுச் சுட்டெண் 8.1 சதவீதத்தால் அதிகரித்த அதேவேளையில், ஐ.அ.டொலரிலான இறக்குமதி விலைச் சுட்டெண் 1.2 சதவீதத்தால் அதிகரித்தது.

**வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட விரிவாக்கம், சுற்றுலாத்துறையிலிருந்தான மிதப்படுகை, பணியாளர் பணவனுப்பல்களின் வீழ்ச்சி மற்றும் நேரடி முதலீட்டு நிறுவனங்களின் உயர் வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் மீள் நிதியிடல் வருவாய்களானவை 2017ஆம் ஆண்டில் நடைமுறைப்பற்றாக்குறையின் விரிவாக்கத்திற்கு வழிநடாத்தியது.** சுற்றுலா வருவாய்களின் வளர்ச்சியில் வீழ்ச்சியேற்பட்டபோதிலும் போக்குவரத்து மற்றும் கணனி பணிகளின் உப துறைகளில் பணிகள் கணக்கானது திடமான வளர்ச்சியுடனான மிகையொன்றினைப் பதிவுசெய்வதனைத் தொடர்ந்தது. அதற்கமைவாக, சென்மதி நிலுவையின் பணிகள் கணக்கானது 2016ஆம் ஆண்டின் ஐ.அ.டொலர் 2,897 மில்லியன் மிகையிலும் பார்க்க 2017ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 3,338 மில்லியன் மிகையொன்றினைப் பதிவுசெய்தது. சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாயானது 2017ஆம் ஆண்டில் அதிகரித்த சராசரி செலவுசெய்தல் மற்றும் தங்கியிருக்கும் காலத்துடன் ஐ.அ.டொலர் 3,925 மில்லியனுக்கு 11.6 சதவீத வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது. முதனிலை வருமானக் கணக்கின் பற்றாக்குறையானது முந்தைய ஆண்டில் பதிவிடப்பட்ட ஐ.அ.டொலர் 2,202 மில்லியனிலிருந்து 2017ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 2,355 மில்லியனுக்கு விரிவடைந்தது. இதற்குப் பிரதானமாக நேரடி முதலீட்டு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் மீள் நிதியிடல் வருவாய்களினால் ஏற்பட்ட அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களே காரணமாகும். 2016ஆம் ஆண்டில் 3.7 சதவீதத்திற்கு எதிராக எடுத்துக்காட்டப்பட்ட 2017ஆம் ஆண்டில் பணியாட்கள் பணவனுப்பல்களில் ஐ.அ.டொலர் 7,164 மில்லியனுக்கான 1.1 சதவீதத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இரண்டாம் நிலை வருமானக் கணக்கானது 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொடர்ந்தும் கட்டுப்பட்டிருந்தது. இவ்வபிவிருத்திகளை பிரதிபலிக்கும் விதமாக நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையானது ஐ.அ.டொலர் 2,309 மில்லியனுக்கு விரிவாக்கமடைந்தது. இது 2016ஆம் ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.1 சதவீதத்திலிருந்து 2017இற்கான மொத்த தேசிய உற்பத்தி 2.6 சதவீதத்திற்கு சமனாகும்.

**முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதியியல் கணக்கில் தேறிய உறப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் தேறிய கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களிரண்டும் 2017இல் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது.** தேறிய அடிப்படையில், உறப்பட்ட பொறுப்புக்களானது 2016இல் ஐ.அ.டொலர் 2,213 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ஐ.அ.டொலர் 5,128 மில்லியனுக்கு வகைகூறிய போது நிதியியல் சொத்துக்களின் தேறிய கொள்வனவானது 2016இன் ஐ.அ.டொலர் 31 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017 ஐ.அ.டொலர் 2,944 மில்லியனுக்கு வகைகூறியது. 2017இன் இரண்டாம் காலாண்டிலிருந்து அரசபிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினால் நிதியியல் கணக்கின் உட்பாய்ச்சல் குறிப்பிடத்தக்களவினால் அதிகரித்து. ஒட்டுமொத்தப் பேரண்ட பொருளாதாரக் காத்திரத்தினை மேம்படுத்தலுடன் முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரிப்பை பிரதிபலித்தது. அம்பாந்தோட்டைச் செயற்றிட்டம் மற்றும் கொழும்பு துறைமுக நகரச் செயற்றிட்டத்திற்கான பாரிய உட்பாய்ச்சலினால் 2017இல் எப்பொழுதுமற்ற அதிஉயர் வருடாந்த உட்பாய்ச்சலினைப் பதிவுசெய்து வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் மூலம் நிதியியல் கணக்கு மேலும் வலுவாக்கப்பட்டது. ஐ.அ.டொலர் 1.5 பில்லியனை வகைகூறும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் பெறுகைகள் காலநிதிய வசதியிலிருந்தான ஐ.அ.டொலர் ஒரு பில்லியனிலான பெறுகைகளிலிருந்தான மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவுபடுத்தப்பட்ட நிதிய வசதியின் மூன்றாம் நான்காம் தொகுதிகளிலிருந்தான ஐ.அ.டொலர் 419 மில்லியனை வகைகுறிக்கும் பெறுகைகள் என்பனவே நிதியியல் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்களாகும். 2017ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் பங்கு மூலதன வடிவிலான சொத்துப்பட்டியல் மூலதனமானது ஐ.அ.டொலர் 359 மில்லியன் தேறிய உட்பாய்ச்சலைப் பதிவுசெய்தது. ஐ.அ.டொலர் 500 மில்லியனைக் கொண்ட இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட 5 வருட முதிர்ச்சியுடைய பன்னாட்டு முறி, ஐ.அ.டொலர் 400 மில்லியன் பெறுமதியான றிசேர்வ் பாங் ஒப் இந்தியாவுடனான பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் எஞ்சிய கூறுகளின் முதிர்ச்சி மற்றும் ஐ.அ.டொலர் 1,320 மில்லியன் பெறுமதியுடைய

1

அரசாங்கத்தினால் மீள்கொடுப்பனவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் என்பனவே நிதியியல் கணக்குகளிலிருந்தான முக்கிய வெளிப்பாய்ச்சல்களாகும். அதேவேளை, 2009இல் பெறப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் துணைநில் ஏற்பாட்டு வசதியின் மீள்கொடுப்பனவை 2017 யூனில் மத்திய வங்கி நிறைவுசெய்தது.

**வெளிநாட்டுத் துறையின் முன்னேற்றத்தினைப் பிரதிபலித்து இரண்டு தொடர்ச்சியான ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட ஒட்டுமொத்த பற்றாக்குறையின் பின்னர் 2017இல் சென்மதி நிலுவையானது ஒட்டுமொத்த மிகையினை பதிவுசெய்தது.** சென்மதி நிலுவையானது 2016இல் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியன் பற்றாக்குறைக்கெதிராக 2017இல் ஐ.அ.டொலர் 2,068 மில்லியனை வகைகூறியது. நிலுவையிலுள்ள ஒட்டுமொத்த முன்னேற்றமானது மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஓர் ஆரோக்கிய நிலையான ஐ.அ.டெலர் 8.0 பில்லியன் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினை பிரதிபலித்தது. இது 2016 இறுதியின் ஐ.அ.டொலர் 6.0 பில்லியனிலிருந்து 2017 இறுதியில் 4.6 மாத இறக்குமதிக்கு சமமானதாகும். ஆண்டுகாலப்பகுதியில் ஐஅ.டொலர் ஒரு பில்லியன் அளவிலான உள்நாட்டுப் பரஸ்பர பரிமாற்றங்களின் இளைப்பாற்றல் மற்றும் ஐஅ.டொலர் 1,664 மில்லியன் பெறுமதியுடைய உள்நாட்டு, வெளிநாட்டுச் செலாவணி சந்தையிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணிகளின் கொள்வனவு போன்ற வடிவத்திலான படுகடனை உருவாக்கதாக ஒதுக்குகளின் முன்னேற்றத்துடன் ஒதுக்குகளின் தரத்தில் ஒரு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் சான்று படுத்தப்பட்டது. நேரடி சந்தைக் கொள்வனவுகளிற்கு அப்பால் நாட்டிற்கான பன்னாட்டு முறியின் வழங்கல் பெறுகைகள், வெளிநாட்டு நாணய காலநிதியிடல் வசதி, பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டு தொகுதிகள், சீனா மேர்ச்சன்ட் போர்ட் ஹோல்டிக் கம்பனி லிமிடெட்டிடம் அம்பாந்தோட்டை துறைமுகத்தினை கையளித்தல் மீதான பெறுகைகள் என்பன ஆண்டு காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் நிலைமையினை வளரச் செய்வதற்கு உதவியன. இதேவேளை, இலங்கை மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும் 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 10.4 பில்லியனுக்கு அதிகரித்தது. இது 2016 இறுதியில் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனிலிருந்து 6.0 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகும்.

**அரசின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு அதிகரித்தமையே 2017இல் இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் அதிகரித்தமைக்கு முக்கிய காரணமாகும்.** நாட்டின் வெளிநின்ற வெளிநட்டுப் படுகடன் 2016இல் ஐ.அ.டொலர் 46,418 மில்லியனிலிருந்து (மொ.உ.உற்பத்தியின் 56.8 சதவீதம்) 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 51,824 மில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 59.5 சதவீதம்) அதிகரித்தது. அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்கல், வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதிகள் மற்றும் செயற்திட்ட

வரைபடம் 1.6
உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மற்றும் செலாவணி வீதத்தில் மத்திய வங்கியின் தலையீடு



*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

மற்றும் நிகழ்ச்சித்திட்ட கடன்கள் என்பவற்றின் காரணமாக பிரதானமாக அதிகரித்தது. ஆண்டு காலத்தில் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகளின் கீழான பெறுகைகளின் மத்தியிலும், பன்னாட்டு நாணய நிதிய துணைநில் ஒழுங்குவிதியின் கீழான ஐ.அ.டொலர் 235 மில்லியன் அளவிலான மீள் கொடுப்பனவு மற்றும் ரிசேர்வ் பாங் ஒப் இந்தியாவினுடனான பன்னாட்டு வெளிநாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றல்கள ஏற்பாட்டின் பேரிலான தீர்ப்பனவுகள் என்பவற்றினால் மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2017 இறுதியில் ஐ.அ.டொலர் 1924 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. வர்த்தக வங்கிகளினாலான படுகடன் பிணையங்களின் வைப்புக்களின் வீழ்ச்சியினால் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. 2016 இறுதியுடன் ஒப்பிடும்போது அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளின் வெளிநின்ற படுகடன் பெரிதளவில் மாற்றமின்றிக் காணப்பட்டபோதும் தனியார் துறைக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நேரடி முதலீட்டு முயற்சிகளுக்கான கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கலின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2017இல் அதிகரித்தது. அதேவேளை, இலங்கையின் வெளிநின்ற படுகடன் மீதான மூலதன மீள்கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளினை படுகடன் பணிகள் கொடுப்பனவுகள் 2017இல் அதிகரித்தது. மூலதன மீள்கொடுப்பனவுகள் 2016இன் ஐ.அ.டொலர் 3,243 மில்லியனிலிருந்து 2017இல் ஐ.அ.டொலர் 3,156 மில்லியனுக்கு குறைவடைந்து ஐ.அ.டொலர் 1,354 மில்லியனை அரசாங்கத்திற்காக வகை கூறியது. செயற்றிட்டங்களை நிதியிடுவதற்காக பெறப்பட்ட நீண்டகாலக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் கடன் தீர்ப்பனவுகள் அதிகரித்தமைக்கு பிரதானமாக பங்களித்தது. எனினும், மத்திய வங்கியின் வெளிநின்ற படுகடன் பணிகளிற்கான கொடுப்பனவுகள் 2017இல் ஐ.அ.டொலர் 635 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இது ரிசேவ் பாங்க் ஒப் இந்தியாவுடனான பன்னாட்டு நாணய பரஸ்பர பரிமாற்றங்கள், ஏற்பாடுகள் மற்றும் பன்னாட்டு நாணய

நிதிய துணைநில் ஒழுங்குவிதி வசதியின் தீர்ப்பனவுகளையும் உள்ளடக்குகின்றது. இலங்கை வங்கியினால் வழங்கப்பட்ட ஐ.அ.டொலர் 500 மில்லியன் பெறுமதியுடைய பன்னாட்டு முறியின் தீர்ப்பனவு மற்றும் தனியார் துறையிலான வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளின் காரணமாக தனியார்துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் மீள்கொடுப்பனவுகள் அதிகரித்தது. வட்டிக் கொடுப்பனவுகள் 2016இன் ஐ.அ.டொலர் 1,219 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,405 மில்லியனுக்கு ஆண்டுகாலத்தில் அதிகரித்தது. வெளிநின்ற அரச வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான வட்டி மற்றும் கூப்பன் கொடுப்பனவுகளின் அதிகரிப்பினால் தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களினையுடைய வட்டிக் கொடுப்பனவுகளின் வீழ்ச்சி விஞ்சப்பட்டது.

**ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அதிகமாக சந்தையினை அடிப்படையாகக் கொண்ட செலாவணி வீதக் கொள்கையின் கீழ் 2017இல் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி ஒப்பீட்டு ரீதியில் நிலையாகக் காணப்பட்டது.** 2017இன் முதல் இரண்டு மாத காலத்திற்கு காணப்பட்ட ரூபா மீதியான தேய்மான அழுத்தமானது அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையிலான வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் ஏற்றுமதி வருவாய்களின் மாற்றல்கள் என்பவற்றின் அதிகரிப்பினால் அதன்பின்பு மிதமடைந்தது. முதலீட்டாளர்களின் நம்பிக்கையினை மேம்படுத்த உதவிய பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதிகள் இரண்டு தொகுதிகளில் பகிர்ந்தளிப்பு வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி மற்றும் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வருவாய்களின் பெறுகைகளினால் ரூபாய் மீதான தேய்மான அழுத்தம் மே மாதத்திலிருந்து மேலும் தளர்த்தப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை அபிவிருத்தி செய்ய எடுக்கப்பட்ட இத்தகைய அபிவிருத்திகள் மற்றும் வழிமுறைகளினால் ஆண்டுகாலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 2.0 சதவீதத்தினால் தேய்வடைந்து ரூபாயானது நீண்ட காலமாக நிலைத்திருந்தது. எனினும், ஐ.அ.டொலருக்கு எதிரான குறுக்கு செலாவணி வீதத்தின் அசைவுகளை பிரதிபலித்து 2017இல் ரூபாயானது ஏனைய அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராக குறிப்பிடத்தக்களவு தேய்வடைந்தது. ஐ.அ.டொலர் மற்றும் ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவு தேய்வினைப் பிரதிபலித்து பெயரளவு செலாவணி வீதச்சுட்டெண் தேய்வடைந்தது. 2017இல் 24 நாணயச் சுட்டெண் 7.75 சதவீதமாக தேய்வடைந்த பொழுது 5 - நாணய பெயரளவு செலாவணி வீதம் 8.68 சதவீதத்தினால் தேய்வடைந்தது. அதேவேளை, 5 -நாணய மற்றும் 24 - நாணய உண்மைச் செலாவணி வீதச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட உண்மைச் செலாவணி வீதமும் 4.83 சதவீதம் மற்றும் 4.85 சதவீதத்தினால் முறையே தேய்வடைந்து ஆண்டின் இறுதியில் குறிப்பிடப்பட்ட 100 சுட்டெண் புள்ளியினை நோக்கி அசைந்தது. உண்மைச் செலாவணி வீதச் சுட்டெண்களிலான இத்திருத்தமானது நாட்டின் போட்டித்தன்மையினை வளர்ப்பதற்கு உதவிசெய்வதோடு, இது நீண்டகாலமாக நிலவிய சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் படிப்படியான திருத்தங்களுக்கு வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## இறைத் துறை அபிவிருத்திகள்

**வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை குறைப்பதற்கும் அரசின் படுகடன் சுமையை குறைக்கும் இலக்குடன் இறைத் திரட்சி நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ரும் நோக்குடன் 2017இல் இறைத் துறை காணப்பட்டது.** திரண்ட நிலுவையிலிருந்து வட்டிக் கொடுப்பனவுகள் நீங்கலாகவுள்ள அரசின் முதன்மைக் கணக்கு என்பது 1992 இன் பின்னர் முதல் முறையாகவும் 1955ற்குப் பின்னர் இரண்டாம் முறையாக 2017 இல் ரூ. 2.1 பில்லியன் மிகையை பதிவுசெய்தது. இருப்பினும், அரசின் குறைச் சேகரிப்பை பிரதிபலிக்கும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017 இல் ஓர் சிறிய அளவால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 0.7 சதவீதமாக அதிகரித்தது. மேலும், அரசிறைச் சேகரிப்பில் ஏற்பட்ட பின்னடைவுகள் மற்றும் வறட்சி மற்றும் வெள்ள நிவாரணத்தினால் ஏற்பட்ட எதிர்பார்க்கப்படாத செலவினம் என்பவற்றால் திரண்ட வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை என்பது சென்ற ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.5 சதவீதத்திற்கு அதிகரித்து எதிர்நோக்கப்பட்ட இலக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.6 சதவீதத்திலிருந்து கணிசமாக விலகிக்

வரைபடம் 1.7
இறைத்துறையின் திரட்டு




*மூலம்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

1

காணப்பட்டது. ஆண்டுப் பகுதியில் படுகடனின் திரட்சியின் வளர்ச்சி மெதுவடைந்ததாலும் பெயரளவான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியின் அதிகரிப்பு என்பவையினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசின் படுகடன் என்பது 2016இல் 78.8 சதவீதத்திலிருந்து 2017இல் 77.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**வரியல்லா அரச அரசிறை மூலங்கிலிருந்தான அரசிறையின் வீழ்ச்சியினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக அரசிறை 2016இல் 14.2 சதவீதத்திலிருந்து 2017 இல் 13.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது.** இருப்பினும், 2016இன் பின்னரான பகுதியில் பெறுமதிசேர் வரியை 11 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கான அதிகரிப்பு உள்ளடங்கலான பெறுமதிசேர் வரிச் சட்டத்திற்கான திருத்தங்கள் மற்றும் வரி அரசிறையின் சேகரிப்பை அதிகரிப்பதற்கு பொருளாதார சேவைக் கட்டணம் மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஏனைய சீர்திருத்தங்கள் என்பவையினால் வரி அரசிறை பெயரளவு நியதிகளிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகவும் அதிகரித்தது. இதற்கேற்ப, பெயரளவு நியதிகளில் வரி அரசிறை என்பது 2016இல் ரூ. 1,463.7 பில்லியனிலிருந்து 2017இல் 14.1 சதவீதத்தால் ரூ. 1,670.2 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறை முனன்ய ஆண்டில் 12.3 சதவீதத்திலிருந்து 2017இல் 12.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதற்கு மாறாக, முக்கிய அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகளின் நலிவடைந்த நிதியியல் செயலாற்றத்தினால் 2017இல் வரியல்லா அரசிறை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை 2016 இல் 1.9 சதவீதத்திலிருந்து 2017இல் 1.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த அதேவேளையில் பெயரளவு நியதிகளில் ரூ. 161.4 பில்லியனுக்கு 27.4 சதவீதத்தால் 2017இல் வீழ்ச்சியடைந்தது. வரி மற்றும் வரியல்லா அரசிறையின் செயலாற்றத்தின் கூட்டு விளைவென்பது மொத்த அரச அரசிறையில் 2016 இல் ரூ. 1,686.1 பில்லியனிலிருந்து 2017இல் ரூ. 1,831.5 பில்லியனுக்கு 8.6 சதவீத அதிகரிப்பை விளைவித்தது. எனினும், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரசிறை முன்னரான ஆண்டின் 14.2 சதவீதத்திலிருந்து 2017இல் 13.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 2017இல் மொத்த அரசிறையில் 91.2 சதவீதத்திற்கு வரி அரசிறை வகைகூறிய அதே வேளையில், நேரடியல்லா வரிகள் தொடர்ந்தும் அரசாங்க வரி அரசிறையில் ஓர் முக்கிய அங்கமாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன் வரி அரசிறையின் 83.6 சதவீதத்திற்கு வகைகூறியது.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் என்பன 2016இல் 19.6 சதவீதத்திலிருந்து 2017இல் 19.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, அரச செலவினத்தை சிக்கன்படுத்துவதற்காக**

வரைபடம் 1.8
மத்திய அரச படுகடன்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




*மூலம்:* நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

**மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை பிரதிபலித்தது.** இதற்கேற்ப மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2016இல் 14.8 சதவீதத்திலிருந்து 2017இல் 14.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், பிரதானமாக வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் அனர்த்த நிவாரணம் மீதான செலவினம் என்பவையின் அதிகரிப்பினால் பெயரளவு நியதிகளில் மீண்டெழும் செலவினம் 2016இல் ரூ. 1,757.8 பில்லியனிலிருந்து 2017இல் ரூ. 1,927.7 பில்லியனுக்கு 9.7 சதவீதத்தினால் அதிகரித்தது. படுகடனின் வெளிநின்ற இருப்பின் அதிகரிப்பு, முக்கியமாக அண்மையான காலத்தில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் வெளிநின்ற தொகை, என்பவை ஆண்டுப்பகுதியில் வட்டிச் செலவினத்தின் அதிகரிப்பை விளைவித்தன. பெயரளவு நியதிகளில் மொத்த வட்டிச் செலவினம் 2016இல் ரூ. 610.9 பில்லியனிலிருந்து 2017இல் ரூ. 735.6 பில்லியனுக்கு 20.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த அதே வேளையில் சென்றாண்டுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் மீதான செலவினம் 2017இல் 30.2 சதவீதத்தால் ரூ. 164.9ற்கு அதிகரித்தது. இதேவேளையில், இறைத் திரட்சி வழிமுறைக்கு இணங்க பொது முதலீடு நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னுரிமைப்படுத்தலுடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் என்பது சென்றாண்டின் 4.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017இல் 4.9 சதவீதமாகக் காணப்பட்டது. எனினும், பெயரளவு நியதிகளில், மூலதன செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் ஆண்டுப் பகுதியில் 2016 இல் ரூ. 576.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 645.4 பில்லியனுக்கு 12.0 சதவீதத்தால் அதிகரித்தது. பொது முதலீடு என்பது 2016இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.0 சதவீதத்திலிருந்து 2017.ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.9 சதவீதத்திற்கு ஓர் சிறியளவால் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், பெயரளவு நியதிகளில், பொது முதலீடு என்பது 2016இல் ரூ. 594.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2017இல் ரூ. 657.4 பில்லியனுக்கு 10.7 சதவீதத்தால் அதிகரித்தது.

தொடர்ச்சியாக இரண்டாமாண்டாக 2017இல் **திரண்ட வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை என்பது பெருமளவில் வெளிநாட்டு மூலங்களிலிருந்தே நிதியிடப்பட்டது.** இதற்கேற்ப, மொத்த நிதியிடல் தேவைப்பாட்டில் சென்றாண்டடில் 61.2 சதவீதமான வெளிநாட்டு நிதியிடலால் பூர்த்திசெய்யப்பட்டது என்பதுடன் ஒப்பிடுகையில் 2017 இல் 59.9 சதவீதமானது இவ்வாறு நிதியிடப்பட்டது. முக்கியமாக நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கல் மற்றும் வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகளின் பெறுகைகள் என்பவையினால் 2017இல் வெளிநாட்டு மூலங்களிலிருந்தான நிதியிடல் அதிகரித்தது. தேறிய வெளிநாட்டு நிதியிடல் என்பது ரூ. 228.5 பில்லியன் (ஐ.அ.டொ. 1,500 மில்லியன்) நாட்டிற்கான பன்னாட்டு முறிகள், ரூ. 152.7 பில்லியன் (ஐ.அ.டொ. 1,000 மில்லியன்) வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் ரூ.57.3 பில்லியன் தேறிய வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு நிகழ்ச்சித்திட்டக் கடன்கள் தொடர்பான தேறிய கடன்பாடுகள் ரூ. 779.4 மில்லியன் என்பவையை உள்ளடக்கியது. உள்நாட்டு மூலங்களிலிருந்தான அரச நிதியிடல் என்பது 2017 இல் மொத்த நிதியிடலின் 40.1 சதவீதத்திற்கு வகைகூறி, பெயரளவு நியதிகளில் ரூ. 294.3 பில்லியன் பெறுமதியை கொண்டிருந்தது. இது முக்கியமாக ரூ. 116.5 பில்லியன் தற்காலிக முற்பணங்கள் மற்றும் ரூ. 109.1 பில்லியன் திறைசேரி முறைகளிலிருந்தானவையாகும். இத்துடன் ரூ. 81.7 பில்லியன் மீள்கொடுப்பனவு திறைசேரி உண்டியல்களில் பதிவுசெய்யப்பட்டது. வங்கித் தொழில்துறையிலிருந்தான அரச நிதியிடலானது தேறிய உள்நாட்டு நிதியிடலின் 56.3 சதவீதத்திற்கு (ரூ. 140.0 பில்லியன்) வகைகூறியதுடன் ஒப்பிடுகையில் 2017இல் 63.8 சதவீதத்திற்கு (ரூ. 187.7 பில்லியன்) வகைகூறியது. இது பிரதானமாக 2016இல் காணப்பட்ட ரூ. 43.1 பில்லியன் தேறிய மீள்கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் 2017இல் வர்த்தக வங்கிகளிலிருந்தான நிதியிடலின் ரூ. 375.7 பில்லியன் பெறுமதியிலான பாரிய அதிகரிப்பானது. வர்த்தக வங்கிகளிலிருந்தான கடன்பாடுகளின் விளைவானது மத்திய வங்கியிற்கான ரூ. 187.9 பில்லியன் மீள்கொடுப்பனவினால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக, மத்திய அரசின் படுகடன் 2016**[3] **இறுதியில் பதிவுசெய்யப்பட்ட 78.8 சதவீதத்திலிருந்து 2017இறுதியில் 77.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** படுகடன் திரட்சியின் வளர்ச்சியின் மெதுவடைதல் மற்றும் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியின் அதிகரிப்பு என்பவை 2017இல் காணப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு படுகடன் விகிதத்தின் வீழ்ச்சிக்கு வகைகூறியது. பெயரளவு நியதிகளில் மத்திய அரச படுகடன் 2016 இறுதியில் ரூ. 9,387.3 பில்லியனிலிருந்து 2017இறுதியில் ரூ. 10,313.0 பில்லியனுக்கு அதிகரித்தது. இதில், மொத்த வெளிநின்ற உள்நாட்டு படுகடன் 4.7 சதவீதத்தால் ரூ. 5,594.4 பில்லியனுக்கு அதிகரித்தவேளையில், மொத்த வெளிநின்ற வெளிநாட்டு படுகடன் 16.6 சதவீதத்தால் ரூ. 4,718.6 பில்லியனுக்கு அதிகரித்தது.

3 அம்பாந்தோட்டை துறைமுகத்துடன் தொடர்பான படுகடன் 2017 இல் முக்கிய அரச நிதியல்லா கூட்டுத்தாபனங்களின் படுகடன் பொறுப்புகளின் கீழ் தொடர்ந்தும் வகைப்படுத்தப்பட்டன.

## நாணயத் துறை அபிவிருத்திகள்

**மத்திய வங்கியானது மோசமான பணவீக்க எதிர்பார்ப்புக்கள் மற்றும் அதிகரித்த நாணய மற்றும் கொடுகடன் விரிவாக்கத்தின் காரணமாக பணவீக்க அழுத்தங்களுக்கு இட்டுச்சென்ற கேள்வியின் சாதகமான அதிகரிப்பு என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு 2017ஆம் ஆண்டில் அதன் இறுக்கமான நாணயக்கொள்கை நிலையைப் பேணத்தொடங்கியது.** 2017ஆம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் பணவீக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பைத் தொடர்ந்து, இது உயர் நாணய மற்றும் கொடுகடன் விரிவாக்கத்திற்கு இடையில் மோசமான பணவீக்க எதிர்பார்ப்புக்களின் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றுள்ளது. மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களான துணைநில் வைப்பு வசதி வீதம் மற்றும் துணைநில் கடன் வழங்கல் வீதம் என்பன 2017ஆம் ஆண்டு மாச்சில் முறையே 7.25 சதவீதம் மற்றும் 8.75 சதவீதத்தால் 25 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டது. மேலும் 2016இல் கொள்கை வட்டி வீதங்களில் 100 அடிப்படைப் புள்ளி அதிகரிப்பும் நியதி ஒதுக்கு வீதத்தில் 1.50 சதவீத அதிகரிப்பும் காணப்பட்டது. தனியார் துறையின் தெரிவுசெய்யப்பட்ட வகைகள் கொடுகடனை கட்டுப்படுத்துவதற்கான பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளும்கூட 2017ஆம் ஆண்டுக்கான நாணயக் கொள்கைக் நடத்தைக்கு ஒத்திசைவாக இரந்தன.. இத்தகைய சுருக்க வழிமுறைகள் இருந்தபோதிலும் அரச வரிக் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தும் அமுலாக்கத்துடன் தொடர்புபட்ட விரும்பத்தகாத தளத் தாக்கத்துடன் இணைந்து நீடித்த மோசமான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்பட்ட உள்நாட்டு உணவு வழங்கல் குழப்பங்களின் காரணத்தினால் முதன்மை பணவீக்கமானது மத்திய வங்கியின்

வரைபடம் 1.9
துணைநில் வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

1

வரைபடம் 1.10
விரிந்த பண வளர்ச்சி மற்றும் பங்களிப்பு




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இலக்குவைக்கப்பட்ட மட்டத்திற்கு மேலாக இருந்து வந்தது. மையப் பணவீக்க அசைவுகளால் கணிக்கப்படுகின்ற அடிப்படை பணவீக்கமானது கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக பேணப்பட்டு வந்த இறுக்கமான நாணயக் கொள்கை நிலையின் ஊடு கடத்தலினால் படிப்படியாக மிதமடைந்தது. உணவு விலைத் தளம்பலின் சரிவுடன் 2018ஆம் ஆண்டு முதல் காலாண்டு பகுதியில் முதன்மை பணவீக்கமானது நடு ஒற்றை இலக்க மட்டங்களுக்கு திரும்பியது. 2018ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் பணவீக்கத்தில் காணப்பட்ட மிதமடைவு மற்றும் சாதகமான பணவீக்க தோற்றப்பாடு மற்றும் தொடர்ச்சியான எதிர்க்கணிய உற்பத்தி இடைவெளி என்பன 2018ஆம் ஆண்டு ஏப்பிறல் 04ஆம் திகதியில் 25 அடிப்படைப் புள்ளியால் துணைநில் கொடுகடன் வசதி வீதத்தை குறைக்கவும் இதன் கொள்கை இறுக்கமாதலின் பக்கசார்பை முடிவுக்கு கொண்டுவரவும் மத்திய வங்கியை கட்டாயப்படுத்தின. வினைதிறனான திரவத்தன்மை முகாமைத்துவமானது மத்திய வங்கியினூடாக விரும்பப்பட்ட பாதையில் தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் தொழிற்பாட்டு குறிக்கோளாக இருக்கின்ற சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தை வழிநடத்த உதவியது. அதன்படி, உள்நாட்டுப் பணச் சந்தையில் இறுக்கமான திரவ நிலைகளை பிரதிபலித்து 2017ஆம் ஆண்டு யூலை நடுப்பகுதி வரைக்கும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது கொள்கை வட்டிவீத வீச்சின் மேல் எல்லையை தாண்டி அதிகரித்ததுடன் 2017ஆம் ஆண்டு யூலை நடுப்பகுதியிலிருந்து மிகைத்திரவத்தன்மை மட்டங்களுடன் இணைந்த மற்றும் மத்திய வங்கியின் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் போன்றவற்றால் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் ஏறத்தாழ 8.15 சதவீதமாக நிலைப்படுத்தப்பட்டது. மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளிலிருந்தான உயர் உண்மை மற்றும் பெயரளவு வட்டி வீதங்கள் விரிந்த நாணய நிரம்பலின் வளர்ச்சியின் மிதமடைவு மற்றும் எதிர்பார்க்கப்பட்டபடியான வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் வளர்ச்சியின் மிதமடைதலுக்கு காரணமாகியது. 2018 ஏப்ரல் 4இல் துணைநில் வைப்பு வசதியில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய திறந்த சந்தை தொழிற்பாடுகளுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதமானது 2018 ஏப்ரல் நடுப்பகுதியில் அன்னளவாக 8 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

**சில சந்தை வட்டி வீதங்கள் ஆண்டின் முடிவில் சந்தையில் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளை கீழ்நோக்கி நிலைப்படுத்துவதனை அல்லது கீழ்நோக்கி திருத்தியமைப்பதனை பிரதிபலித்த போதிலும் பொருளாதாரத்தில் இறுக்கமான நாணய நிலைமைகளை நோக்குகையில் சந்தை வட்டிவீதங்கள் 2017 காலப்பகுதியில் தொடர்ச்சியாக மேலும் அதிகரித்தது.** இருந்த போதிலும் நிதிச் செலவினை உயர்த்தும் முகமாக 2017இன் அதிகமான காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளின் வைப்பு மற்றும் கடன் வட்டி வீதங்கள் அதிகரிக்கத் தொடங்கியன. எவ்வாறாயினும் உயர்ந்த மட்டத்தில் கடன் வட்டி வீதங்கள் உறுதிப்படுத்தப்பட்ட போது ஆண்டின் முடிவை நோக்கி வைப்பு வட்டி வீதங்களில் சில மிகைப்படுத்தல் அவதானிக்கப்பட்டது. முதலாந்தர சந்தையில் திறைசேரி உண்டியல் மீதான விளைவுகளானது இறுக்கமான நாணய நிலைப்பாடுகளையும் அரச பிணையங்களை வழங்குவதற்காக ஒரு தூய ஏல முறைமையின் அடிப்படையில் அரசாங்கத்தின் கடன் தேவைகளின் அதிகரிப்பினையும் பிரதிபலித்து 2017ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப்பகுதியிலும் மேல்நோக்கிய அசைவுகளாக வெளிப்படுத்திக் காட்டியது. எவ்வாறாயினும் உள்நாட்டு சந்தையில் மேம்பாடடைந்த திரவத்தன்மை நிலைப்பாடு மற்றும் அரசிற்கான வெளிநாட்டு நிதியிடலின் கிடைப்பனவுடன் சாதகமான சந்தையின் மனப்பாங்குகளால் ஆதரவளிக்கப்பட்டு முதலாந்தர சந்தையின் திறைசேரி உண்டியல்களின் விளைவுகள் கீழ்நோக்கி திருத்தமடைந்தன. அதற்கிணங்க 2016இன் முடிவிலிருந்து 2017இன் முடிவு வரை 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாளுக்கான விளைவுகள் மீது முறையே 103

வரைபடம் 1.11
தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அடிப்படைப் புள்ளிகள், 133 அடிப்படைப் புள்ளிகள் மற்றும் 127 புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. குறிப்பாக 2017இன் இரண்டாம் அரைப்பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் பன்னாட்டு நாட்டின் பன்னாட்டு முறிகள் போன்றவை குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயப் படுகடன் பிணைங்கள் வழங்கல், உள்நாட்டு படுகடன் சாதனத்தின் விளைவுகளின் மீது அழுத்தத்தை தளர்த்துவதற்கு குறிப்பிட்டளவில் உதவியது. நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்களினதும் முதலீட்டாளர் மனப்பாங்கின் மேம்படுத்தல்களாலும் ஆதரவளிக்கப்பட்டு அரச பிணையங்களுக்கான இரண்டாந்தர சந்தை விளைவு வளையியானது கீழ்நோக்கி சென்றதுடன் 2017இல் குறிப்பாக ஆண்டின் இறுதியில் ஒப்பீட்டளவில் தட்டையாகவே இருந்தது. அதேவேளை, 2017 கலப்பகுதியில் கம்பனி படுகடன் பிணையங்கள் மீது பிரயோகிக்கத்தக்க வட்டி வீதங்கள் உயர்வாக இருந்தது. மேலும், 2017 காலப்பகுதியில் சிறிதளவில் அதிகரித்த வர்த்தக வங்கிகளுடன் பேணப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் குறித்துரைக்கப்பட்ட வைப்புக்கள் மீது பிரயோகிக்கத்தக்க வட்டி வீதங்கள் பன்னாட்டு சந்தைகளில் முக்கிய வட்டி வீதங்களில் படிப்படியான உயர்ச்சியை வெளிப்படுத்தியது.

**2016 சனவரியின் நியதி ஒதுக்கு வீதத்திற்கான மேல்நோக்கிய சீராக்கத்தினுடைய பேரிலான 2016ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட உயரிய அடிப்படை தாக்கத்தின் காரணமாக, 2016இன் முடிவில் பதிவுசெய்யப்பட்ட 27.1 வீத உயரிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இன் முடிவில் ஆண்டுக்கு ஆண்டு ஒதுக்குப் பண வளர்ச்சியானது 9.8 சதவீதத்திற்கு மிதமாக்கப்பட்டது.** உண்மை நியதிகளில் 2016இல் அறிக்கையிடப்பட்ட ரூ.182.7 பில்லியனுடைய அவதானிப்பு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டின் இறுதியில் ரூ.939.8 பில்லியனை அடைவதற்கு ஆண்டு காலப்பகுதியில் ரூ.83.6 பில்லியன் அளவினால் மாத்திரம் ஒதுக்குப் பணம் விரிவாக்கப்பட்டிருந்தது. பொறுப்புப் பக்கத்திலிருந்து, 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒதுக்குப் பணத்தின் மிதமான அதிகரிப்பிற்கு மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் ஒதுக்கு மீதிகள் சுற்றோட்டத்திலள்ள நாணயம் இரண்டும் பங்களித்திருந்தன. சொத்துக்கள் பக்கத்திலிருந்து, ஆண்டு காலப்பகுதியில் மத்திய வங்கியினுடைய வெளிநாட்டு நிதியியல் பொறுப்புகளின் ஓர் வீழ்ச்சியையும் வெளிநாட்டு ஒதுக்குகளினுடைய ஒன்று சேர்வினை பிரதிபலிக்கின்ற மத்திய வங்கியினுடைய வெளிநாட்டு சொத்துக்களின் வளர்ச்சியுடன் மத்திய வங்கியினுடைய தேறிய வெளிநாட்டு சொத்துக்களின் அதிகரிப்பினால் 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒதுக்குப் பண விரிவாக்கமானது முழுமையாக உந்தப்பட்டது. தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களுக்களின் அதிகரிப்பிற்கு மாறாக மத்திய வங்கியினுடைய தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள், கவனத்தில் கொள்கையில் 2016இல் ரூபா.200.3 பில்லியனுடைய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.203.9 பில்லியனால் ரூ.93.6 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்துள்ளன. மத்திய வங்கியினுடைய திறைசேரி உண்டியல்களின் கையிருப்புக்களில் அவதானிக்கப்பட்ட கடுமையான வீழ்ச்சியுடன் மத்திய வங்கியினால் தேறிய அரச கொடுகடனின் சுருக்கம் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் கடுமையான வீழ்ச்சியினை பிரதிபலித்திருந்தது. முன்னைய ஆண்டின் ரூ.183.1 பில்லியனுடைய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017 ஆண்டு காலப்பகுதியில் ரூ.225.1 பில்லினிலிருந்து ரூ.187.9 பில்லியனாக குறிப்பிடத்தக்க அளவில் மத்திய வங்கியின் தேறிய அரச கொடுகடன் வீழ்ச்சியடைந்துள்ளது.

**2017ஆம் ஆண்டின் அதிகமான காலப்பகுதிகளில் உயர்வான மட்டத்தில் காணப்பட்ட விரிந்த பண ($M_{2b}$) வளர்ச்சியானது உள்நாட்டு கொடுகடனின் மிதமடைதலினால் உந்தப்பட்டு விரும்பப்பட்ட மட்டங்களை நோக்கி குறைவடைந்தது.** விரிந்த பணம் 2016ஆம் ஆண்டின் இறுதியில் 18.4 சதவீத வளர்ச்சி ஒன்றுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டின் முடிவில் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியானது 16.7 சதவீதத்திற்கு குறைவடைந்துள்ளது. 2016இல் அறிக்கையிடப்பட்ட ரூ.66.9 பில்லியனுடைய மிதமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2017இல் ரூ.352.8 பில்லியனாக குறிப்பிடத்தக்களவில் வங்கி முறைமைகளினுடைய தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்துள்ளன. மத்திய வங்கியினுடைய தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு மேலாக வர்த்தக வங்கியினுடைய தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களானது மீளாய்விற்குட்பட்ட காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளில் வெளிநாட்டு கடன்களின் வீழ்ச்சியின் காரணமாக 2017ஆம் ஆண்டில் ரூ.65.2 பில்லியனால் விரிவாக்கப்பட்டது. தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கமானது ஆண்டின் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட உள்நாட்டு கொடுகடனின் மெதுவடைதலால் உந்தப்பட்டு 2016ஆம் ஆண்டில் ரூ.772.8 பில்லியன் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ஆண்டு காலப்பகுதியில், உண்மைக் நியதிகளில் ரூ.549.7 பில்லியனாக மிதமடைந்தது. தேறிய உற்நாட்டு சொத்தக்களில் அரசாங்கத்தின் உள்நாட்டு கடன் கருவிகளின் அதிகரித்த முதலீட்டின் காரணமாக வர்த்தக வங்கிகளிடமிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 384.3 மில்லியனால் விரிவடைந்ததன் முழுமையான காரணத்தால் 2017இல் வங்கித்தொழில் முறைமையின் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ.196.4 மில்லியனால் அதிகரித்தது. 2017இல் இது மத்திய வங்கியிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடனின் வீழ்ச்சிக்கு மாறானது. வங்கித்தொழில் துறைகளிலிருந்து அரச கூட்டுத்தாபனங்களால் வழங்கப்படும் கொடுகடன் 2016ஆம் ஆண்டின் அவதானிப்பில் ரூ.27.9 பில்லியன் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017இல் 19.2 பில்லியனாக அதிகரித்தது.

**இறுக்கமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டுக்கு பதிலளிக்கும் விதமாக, 2017ஆம் ஆண்டின் இறுதியில் விரும்பத்தக்க நிலைகளுக்கு வங்கித்தொழில் முறைமையினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் மிதமடைந்தது.**

1

தனியார் துறையின் கொடுகடன் வளர்ச்சியானது, 2016ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாகிய 21.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2017ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் 14.7 சதவீதமாக மெதுவடைந்தது. உண்மை நியதிகளில், தனியார் துறையின் கொடுகடனின் விரிவாக்கமானது, 2016இன் ரூ.754.9 பில்லியனான ஒரு அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு காலப்பகுதியில் ரூ.617.4 பில்லியனாக இருந்தது. தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடனின் வீழ்ச்சியானது, பொருளாதாரத்தின் இறுக்கமான நாணய நிலைமைகளுடன் இணைந்த உயர் சந்தை வட்டி வீதங்கள் மற்றும் பேரண்ட முன்மதியுடைய மற்றும் இறைக் கொள்கை வழிமுறைகள் போன்றவற்றால் ஆதாரமளிக்கப்பட்டது. மேலும், தனியார் கடன்கள் மற்றும் முற்பணங்களின் அவதானிக்கப்பட்ட விரைவடைதல் தவிர ஏனைய பிரதான துறைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடனது வளர்ச்சியானது 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிதமடைந்திருந்தது. அதன்படி, பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகளது கொடுகடனானது, 2016ஆம் ஆண்டில் முறையே 35.4 சதவீதம் மற்றும் 22.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் முறையே 8.3 சதவீதம் மற்றும் 19.6 சதவீதத்தால் விரிவடைந்தது. வேளாண்மை மற்றும் மீன்படித் துறையின் கொடுகடனது வளர்ச்சியும், 2016ஆம் ஆண்டில் பதிவாகிய 17.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டின் இறுதியில் 14.1 சதவீதமாக மிதமடைந்திருந்தது. தனியார் கடன் மற்றும் முற்பண வகைகளின் கீழான கொடுகடனானது, 2016ஆம் ஆண்டின் இறுதியில் பதிவாகிய 15.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டின் இறுதியில் 18.6 சதவீதத்தால் அதிகரித்து இருந்தது.

## நிதியியல் துறை அபிவிருத்திகள்

**சவாலான பொருளாதார சூழலின் மத்தியில் 2017ஆம் ஆண்டில் முறைமையின் உறுதிப்பாடு பேணப்பட்டிருந்த அதேவேளை நிதியில் துறையின் செயலாற்றம் மேம்பட்டிருந்தது.** நிதியியல் துறையின் மேம்பட்ட செயலாற்றமானது பிரதானமாக வங்கிகள், ஏனைய வைப்புக்களை கையேற்கின்ற நிதியியல் நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்த ரீதியிலான சேமிப்பு நிறுவனங்களினால் தூண்டப்பட்டிருந்தது. ஆண்டின் முதலரைப்பகுதியில் ஒரு நிலையான வளர்ச்சியை அறிக்கையிட்ட வங்கியியல் துறைக் கொடுகடனானது இறுக்கமான நாணயக் கொள்கை அளவீடுகளுக்கு பதிலிறுத்தும் வகையில் ஆண்டின் இரண்டாம் அரைகாலப்பகுதியில் படிப்படியாக மிதமடைந்தது. வங்கியியல் துறையின் சொத்துத்தளமானது, 2017ஆம் ஆண்டின் இறுதியில் மொத்தச் சொத்துக்களின் 62.5 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்த கடன்கள் மற்றும் முற்பணங்களின் அதிகரிப்புடன் 13.8 சதவீத ஒரு வருடாந்த வளர்ச்சியை பதிவுசெய்கின்ற ரூ.10 ரில்லியனை விஞ்சியது. இதேவேளையில், வங்கியில் துறையின் சொத்தின் தரத்தில் முன்னேற்றத்தினை பிரதிபலிக்கின்ற செயற்படாக் கடன் விகிதம் இவ்வாண்டு காலப்பகுதியில் சிறிதளவாக வீழ்ச்சியடைந்தது. சொத்துக்கள் மீதான வருவாய் மற்றும் பங்குரிமை மூலதனத்தின் மீதான வருவாயினால் அளவிடப்பட்ட வங்கியியல் துறையின் இலாபத் தன்மையானது, 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் 12.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த தேறிய வட்டி வருமானத்துடன் அவதானிக்கக்கூடியளவில் அதிகரித்தது உள்நாட்டு வங்கியியல் துறையின் நியதி திரவச் சொத்து விகிதமானது 20 சதவீதமான ஆகக்குறைந்த நியதித் தேவைப்பாட்டை காட்டிலும் தொடர்ச்சியாக உயர்மட்டங்களில் இருந்த அதேவேளை வங்கிகளில் மூலதன போதுமைத்தன்மை விகிதமானது ஏதேனும் பாதகமான அதிர்வுகளை ஈர்க்கும் வகையில் பாசல் III இன் கீழ் வசதியான நிலைகளில் பேணப்பட்டது.

**உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த கம்பனிகளின் துறையானது, குறைந்த கொடுகடன் வளர்ச்சி, வீழ்ச்சியடைகின்ற இலாபத்தன்மை மற்றும் வளர்ச்சியடைகின்ற செயற்படா கடன்கள் போன்றவற்றுடன் இவ்வாண்டு காலப்பகுதியில் ஒரு மிதமடைவான வளர்ச்சியை பதிவு செய்தது.** இவ்வாண்டு காலப்பகுதியில் பொருளாதாரத்தில் எடுத்துக்காட்டப்பட்ட மிதமான வளர்ச்சி மற்றும் மோட்டார் வாகனங்களுக்கான கடன் வழங்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட பேரண்ட முன்மதியுடைய வழிமுறைகளுக்கு கொடுகடன் வளர்ச்சியின் மெதுவடைவானது பிரதானமாக வகைகூறியது. நிதியிடல் கலவையில் ஒரு மாற்றத்தினை வெளிப்படுத்துகையில், 2016இல் கடன் படுகைகள் பதிவு செய்யப்பட்ட உயர் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்த வேளையில் துறைகளின் சொத்துக்களின் வளர்ச்சியானது வைப்புக்களூடாக பிரதானமாக நிதியிடப்பட்டது. ஒரு சில உரிமம் பெற்ற நிதியியல் கம்பனிகளின் பலவீனமான நிதி நிலைமைகளின் மத்தியிலும், துறையானது அதனது ஒட்டுமொத்த மூலதனம் மற்றும் திரவத்தன்மையினை, குறைந்தளவு தேவைப்பாடுகளுக்கு மேலான நிலைகளை பேணியது. 2017ஆம் ஆண்டில் முதனிலை வணிகர்களின் துறையின் நடவடிக்கைகளில் ஒரு படிப்படியான மிதமடைதல் அவதானிக்கப்பட்டது. முதனிலை வணிகர்கள் கைத்தொழிலின் இலாபகத்தன்மை சிறிதளவாக வீழ்ச்சியடைந்திருந்த போதிலும் இவ்வாண்டு காலப்பகுதியில் சொத்து அடிப்படை ஒரு கணிசமானளவு விரிவாக்கத்தினை காட்டியது. 2017இல் ஒப்பந்த ரீதியிலான சேமிப்புத் துறையின் முன்னணி நிறுவனங்களான ஊழியர் சேம நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், அவர்களது அங்கத்தவர்களுக்கு நியாயமான வருவாய்களைப் பெற்றுக்கொடுத்த அதேவேளை அவர்களது சொத்தின் ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதிப்படுத்தியது. ஆயுட்காப்புறுதி துறையினால் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியினால் காப்புறுதித் துறையின் சொத்து அடிப்படை இவ்வாண்டு காலப்பகுதியில் விரிவுபடுத்தப்பட்டது.

**உள்நாட்டு நிதியியல் சந்தைகள் 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் சில தளம்பல்களை எடுத்துக் காட்டியது.** உள்நாட்டு பணச்சந்தையானது, குறிப்பாக ஆண்டின் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டு பரிவர்த்தனை சந்தையில் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செலாவணியின் தேறிய கொள்வனவுகளின் விளைவினால் மிகைத் திரவத்தன்மையுடன் செயற்பட்டது. குறுங்கால வட்டி வீதங்கள் மீதான தேவையற்ற அழுத்தங்களை தவிர்ப்பதற்கு திறந்த சந்தை செயற்பாடுகளை செயற்படுத்தியதன் மூலமாக உள்நாட்டு நாணய சந்தையில் தளம்பலானது நெருக்கமாக முகாமை செய்யப்பட்டது. அரச பிணையங்களுக்கான விதிமுறை அடிப்படையிலான மற்றும் வெளிப்படையான ஏல முறைமை வட்டி வீதங்களில் தளம்பலைக் குறைப்பதற்கு உதவியது. ஆண்டின் முதல் அரைப் பகுதியில் மேம்பட்ட பொருளாதாரத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் நிலைமைகளின் இறுக்கமடைதலின் எதிர்பார்ப்புக்களால் அரச பிணையங்கள் மற்றும் பங்கு மூலதன சந்தையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் காரணமாக ஐ.அ.டொலருக்கு எதிராக இலங்கை ரூபாய் வீழ்ச்சியடைந்திருந்தும், முதலீட்டாளாகளின் மனோபாவத்தை மேம்படுத்தல், குறிப்பாக பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதியியல் வசதியின் தொடர்ச்சி என்பனவற்றின் மூலம் ரூபாய் மீதான அழுத்தங்களை தளர்த்த உதவி வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை கவர்ந்தது. கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவு முறைமையானது, தொடர்ச்சியான மேம்படுத்தல்களையும் மற்றும் பாரிய இடையூறுகளற்ற செயற்பாடுகளையும் காட்டியது.

**நிதியியல் துறையை ஆளுகின்ற மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பானது, ஆண்டு காலப்பகுதியில் நிதியியல் துறையின் பாதுகாப்பு மற்றும் மீளெழுச்சி அதிகரிப்பு பலப்படுத்துவதனை தொடர்ந்தது.** மத்திய வங்கியினால் முன்னெடுக்கப்பட்ட முன்மதியான வழிமுறைகளானது, உரிமம் பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனி மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் போன்றவற்றின் வெளிப்படைத்தன்மை, மூலதன தேவைப்பாடுகள், திரவத்தன்மை மற்றும் இடர் முகாமைத்துவக் கட்டமைப்புக்களை அதிகரிக்கும் நோக்குடன் பிரதானமாக கவனம் செலுத்தியது. குறிப்பாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மற்றும் முதன்மை வணிகர்களுக்கு சாதகமான ஒழுங்குமுறைப்படுத்தல் சகிப்புத்தன்மை தொடர்பில் ஆண்டு காலப்பகுதியில் முன்னுரிமை வழங்கப்பட்டது. துறையின் நீண்ட கால உறுதிப்பாடு மற்றும் வைப்பாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு பலவீனமான நிதியியல் நிறுவனங்களின் நிதியியல் வணிக செயற்பாடுகளை நிறுத்த அல்லது கட்டுப்படுத்துவதற்காக பல்வேறுபட்ட வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. மூலதனச் சந்தை தொடர்பில் பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுவானது, துறையினுடைய வெளிப்படைத்

அட்டவணை 1.4

உலக பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடும் (அ)

| விடயம் | 2016 | 2017 | 2018 (மதிப்பிடப்பட்டது) | 2019 (எறிவுகள்) |
|---|---|---|---|---|
| **உலக வெளியீடு** | **3.2** | **3.8** | **3.9** | **3.9** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.7 | 2.3 | 2.5 | 2.2 |
| ஐக்கிய அமெரிக்கா | 1.5 | 2.3 | 2.9 | 2.7 |
| யூரோ பகுதி | 1.8 | 2.3 | 2.4 | 2.0 |
| ஐக்கிய இராச்சியம் | 1.9 | 1.8 | 1.6 | 1.5 |
| யப்பான் | 0.9 | 1.7 | 1.2 | 0.9 |
| தோற்றம்பெற்று வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 4.4 | 4.8 | 4.9 | 5.1 |
| அபிவிருத்தி அடைந்தவரும் ஆசியா | 6.5 | 6.5 | 6.5 | 6.6 |
| சீனா | 6.7 | 6.9 | 6.6 | 6.4 |
| இந்தியா | 7.1 | 6.7 | 7.4 | 7.8 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **2.3** | **4.9** | **5.1** | **4.7** |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 0.8 | 1.7 | 2.0 | 1.9 |
| தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 4.3 | 4.0 | 4.6 | 4.3 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ.) | | | | |
| எண்ணெய் | -15.7 | 23.3 | 18.0 | -6.5 |
| எரிபொரள் அல்லாதவை | -1.5 | 6.8 | 5.6 | 0.5 |
| **ஐ.அ.டொ வைப்புக்கள் மீதான ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் சதவீதம்)** | **1.1** | **1.5** | **2.4** | **3.4** |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்

மூலம் : உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (ஏப்பிறல் 2018 ப.நா.நிதியம்)

தன்மை மற்றும் மீளெழுச்சியை அதிகரிக்கும் நோக்கத்துடன் பங்குத் தரகுக் கம்பனிகளின் மூலதன போதுமாந்தன்மை, வெளிப்படுத்துகை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவிப்பு தொடர்பில் பணிப்புரைகளை வெளியிட்ட அதேவேளை 2017ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களை பொதுக்கம்பனியாக மாற்றும் மசோதா சட்டம் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

## 1.3 உலகளாவிய பொருளாதாரச் சூழலும் தோற்றப்பாடும்

**பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப்பொருளாதார தோற்றப்பாட்டின்படி பாரியளவிலான பொருளாதாரங்கள் வள்ர்ச்சியில் ஓர் அதிகரிப்பை பதிவுசெய்ததுடன் 2017இல் உலகப் பொருளாதாரம் தொடர்ந்தும் உத்வேகமடைந்தது.** முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களுடன் தோற்றம்பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களை உள்ளடக்கிய உலகப் பொருளாதாரங்களின் மூன்றில் இரு பங்கினா் 2016உடன் ஒப்பிடுகையில் 2017இல் அதிகமான வளர்ச்சி வீதங்களை பதிவுசெய்தன. உலக நிதியியல் நெருக்கடிக்குப் பின்னர் முதல் முறையாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் யப்பானில் ஒரே மாதிரியான வளர்ச்சி காணப்படுகிறது. நிலையான மூலதன உருவாதல் மீதான அதிகரித்த செலவினம்

1

மற்றும் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை என்பவை முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் மற்றும் சீனாவில் வளர்ச்சியை ஏற்படுத்திய வேளையில் தனியார் நுகர்விலான அதிகரிப்பு பெருளமளவிலான தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களில் அதிகரித்த வளர்ச்சிக்கு பங்களித்தது. ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனாவினால் ஒருவரின் மீது ஒருவரினது தொடர்ச்சியான பழிவாங்கும் வர்த்தக கட்டடுப்பாடுகள் தொடங்கினாலும் கடந்த இரு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2017 இல் உலகளாவிய வர்த்தம் வலுவாக மீட்சியடைந்து 2017 இல் கணிசமான அளவிலான உயர்ந்த மட்டங்களை பதிவுசெய்தது. ஆண்டுப்பகுதியில், வலுவடைந்துவரும் உலகளாவிய வளர்ச்சியின் உத்வேகம், ஐக்கிய அமெரிக்காவில் நிரம்பல் சார்ந்த குழப்பங்கள், எண்ணெய் உற்பத்தியை மட்டுப்படுதுவதற்கான பெற்றோலியம் ஏற்றுமதிச செய்யும் நாடுகளின் + அமைப்பின் ஏகோபித்த உடன்படிக்கை மற்றும் மத்திய கிழக்கில் புவியியல் சார்ந்த பதற்றங்களின் விளைவாக எண்ணெய் விலைகள் விரைவாக அதிகரித்தன. மசகெண்ணெய் விலைகள் 2017இன் பின்னரான பகுதியில் அதிவேகமாக அதிகரித்திருந்தாலும், அதிகரித்த நிலக்கீழெண்ணெயின் நிரம்பல் சாதனையான மட்டங்களை அடைவதுடன் நடுத்தரக்காலத்தில் விலைகள் வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெருமளவான எண்ணெய் விலைகளின் அதிகரிப்பென்பது அநேகமான பொருளாதாரங்களில் முதன்மை பணவீக்கத்திற்கு பகுதியளவில் பங்களித்தன. பெற்றோலியம், திரவப்படுத்தப்பட்ட இயற்கை வாயு, உலகோங்கள் மற்றும் வேளாண் உற்பத்திகள் உள்ளடங்கலான அநேகமான பண்டங்களின் விலைகள் சென்றாண்டுடன் ஒப்பிடுகையில் 2017 இல் கணிசமான அளவால் அதிகரித்தன.

**2017இல் உலகளாவிலய வளர்ச்சியின் திரட்டான வலுப்படுத்தலுக்கு மத்தியிலும், அநேகமான முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் குறைந்த மட்டங்களிலான பணவீக்கம் ஓர் தளர்ச்சியான நாணயக் கொள்கையை தேவைபடுத்தியது. இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட தள்மபலான குறுகிய காலப்பகுதிகளுக்கு மத்தியிலும் ஓர் வலுவாகும் தொழிற்படைச் சந்தை மற்றும் உயர்வடையும் பொருளாதார நடவடிக்கைகளின் அறிகுறிகளை ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரம் தொடர்ந்தும் காண்பித்தது.** இது தொடர்பாக, ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசர்வ் பெடரல் நிதி இலக்கிடல் வீதத்தை 2017 மார்ச்சு, யூன் மற்றும் திசெம்பரிலும் மீண்டும் 2018 மார்ச்சிலும் அதிகரிக்க தொடாந்தும் செயற்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் வரித் திருத்தங்கள் அண்மைக் கால நடடிவடிக்கைகளுக்கு ஊக்கமூட்டுமென எதிர்பார்க்கப்பட்டாலும், இந்த ஆண்டுப்பகுதியில் மேலும் கொள்கை வீத அதிகரிப்புக்களை பெடரல் ரிசேர்வ் மேற்கொள்ளும் என்பதனால் இது பணவீக்கத்தின் மீது ஓர் எதிர்கணியமான விளைவை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படவில்லை. இருப்பினும், ஐரோப்பிய ஒன்றித்திலிருந்து வெளியேறும் தீர்மானம் மற்றும் ஸ்டேர்லிங் பவுணின் பொது வாக்கெடுப்பு தொடர்பான தேய்மானத்தின் விளைவினால் ஐக்கிய இராச்சியத்தின் பொருளாதார நடடிவடிக்கைகள் மோசமாக பாதிக்கப்பட்டன. யப்பான் மற்றும், யேர்மனி உள்ளடங்களலான பல யூரோ பிரதேச பொருளாதாரங்கள் ஆண்டுக் காலப்பகுதியில் உள்நாட்டு கேள்வியில் மற்றும் வெளிநாட்டு கேள்வியில் ஓர் வலுவான உத்வேகத்தையும் உணர்ந்தது. நிரம்பல் சார் அமைப்பியல் சீர்திருத்தம் நிகழச்சித்திட்டம் தொடர்பில் சீனா தொடர்ந்து முன்னேறினாலும், பல அமைப்பியல் ரீதியான பிரச்சனைகளை தீர்க்காதமை 2017 இல் வளர்ச்சியில் ஓரளவிலான மெதுவடைதலை விளைவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பணத்தின் செல்லாததாகுதலின் பாதகமான விளைவுகள் மற்றும் பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி தொடர்பிலான ஆரம்பாக்கால பிரச்சனைகளின் படிப்படியான மறைதல் என்பதுடன் இந்திய பொருளாதாரத்தின் தோற்றப்பாடுகள் மேம்பட்டன. ஏனைய முக்கிய நாணயங்களில் வலுவடைதல் மற்றும் கொள்கை சீரற்ற தன்மைகளினால் ஆண்டுப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க டொலர் தொடர்ந்தும் மந்தமாகக் காணப்பட்டது. இருப்பினும், மேம்படடும் தொழிற்படைச் சந்தைகள் மற்றும் தளர்ச்சியான நாணயக் கொள்கை என்பவையினால் யூரோ பிரதேசத்தில் ஓர் பெருமளவான ஒரே மாதிரியான விரிவாக்கம் ஏற்பட்டதனால் 2017இல் யூரோவிற்கு ஆதரவளித்தது. யப்பானிய பொருளாதாரத்தின் மீட்சி மற்றும் நாணயத்தின் பாதுகாப்பான புகலிடம் என்ற தகு நிலை என்பன யெனின் வலுவிற்கு ஆதரவளித்தன. அதிகரித்த உலகளாவியச் சந்தையின் தளம்பலகளுக்கு மத்தியிலும் தோற்றம்பெற்று வரும் பொருளாதாரங்களுக்குான நிதியியில் பாய்ச்சல்கள் மற்றும் பட்டியலிடப்பிட்ட பாய்ச்சல்கள் என்பவை ஆண்டுப்பகுதியில் தொடர்ந்தும் வலிமையாகக் காணப்பட்டது.

**இறுக்கமான நிதியியல் சந்தை நிலைமைகள் மற்றும் முக்கிய உலகலாவிய பொருளாதாரங்களுக்கிடையிலான வர்த்தக முரண்பாடுகளிலிருந்து எழும் சீர்குலைவுகள் போன்றவைக்கு மத்தியிலும் முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம்பெற்றுவரும் பொருளாதாரங்கள் இரண்டினதிற்கும் முதலீடு, உற்பத்தி மற்றும் வர்த்தக ரீதியில் மேம்பட்ட தோற்றப்பாடுகளினால் 2018 மற்றும் 2019இல் உலகளாவிய வளர்ச்சி உத்வேகம் மேலும் மேம்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.** முன்னேற்றமடைந்த மற்றும் தோற்றம்பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் ஓர் பரந்தளவான குறுக்கு வெட்டில் கடந்த இரு ஆண்டுகளில் ஒரே மாதிரியாக பதிவுசெய்யப்பட்ட சுழற்சியான அதிகரிப்பென்பது அடுத்து வரும் இரு ஆண்டுகளில் உயர்வான வளர்ச்சி வீதங்களை பதிவுசெய்வதற்கு மேலும் வலுவூட்டுவதுடன் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் வளர்ச்சி உள்ளாற்றலான மட்டங்களுக்கு வளர்ச்சி திரும்புவதுடன் அதன் பின்னர் மெதுவடைய தொடங்கும். ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா மற்றம் முன்னேற்றமடைந்த ஆசிய பொருளாதாரங்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக்

கேள்வியின் அதிகரிப்பு மற்றும் கூட்டுத்தாபன வரிகளின் குறைப்பு தொடர்பான ஐக்கிய அமெரிக்காவில் வரிக் கொள்கை மாற்றங்களின் பலன்கள் என்பவையினால் உலகளாவிய வளர்ச்சி அடுத்த இரு ஆண்டுகளில் முன்னெடுக்கப்படும். ஐக்கிய அமெரிக்காவில், வரி குறைப்பினால் உருவாக்கப்பட்ட பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு இறைத் திருத்தங்கள் நடுத்தரக் காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றன. இதே வேளையில், எதிர்வரும் இரு ஆண்டுகளில் தோற்றம்பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் ஆசியா முறையே 6.5 சதவீதம் மற்றும் 6.6 சதவீதத்தால் வளர்ச்சியடையுமென எறிவுசெய்யப்படுகிறது. வர்த்தக முறைமைகளுடாக முன்னேற்றமடைந்த நாடுகளில் மேம்பட்ட வளர்ச்சி மற்றும் வர்த்தக கருத்தின் விளைவுகள் தோற்றம்பெற்றுவரும் சந்தை பொருளாதாரங்களுக்கு பரம்பலாகச் செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னர் கூறிய உலகத்தில் வளர்ச்சி உத்வேகத்தின் மேம்பாட்டை பாதிக்கும் முக்கிய இடர்நேர்வு காரணிகள்: ஐக்கிய அமெரிக்காவில் பணவீக்கம் எதிர்பார்க்கப்படுவதை விட அதிகமாக இருக்கலாம் என அறிகுறிகளைக் காட்டினால் நிதியியல் சந்தைகளின் சாத்தியமான இறுக்கமாக்கல் பெடரல் ரிசர்வ் முறைமையினால் விரைவான கொள்கை வீத இறுக்கப்படுத்தலை விளைவிக்கும், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனாவிற்கிடையிலான வர்த்தக முரண்பாட்டின் பரப்புதல். நிதியியல் துறையிலும் இடர்பாடுகள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக நிலைத்திருந்த குறைந்த வட்டி வீதங்கள் மற்றும் சொத்து விலைகளில் குறைந்தளவிலான தளம்பல்களினால், அதிகரித்த இடர்பாடுகள் கொண்ட நிதியியல் சொத்துக்கள் மற்றும் கொடுகடனிற்கு குறைந்த தகுதியுடைய கடன் பெறுநர்களுக்கு அதிகமான நிதிகள் சென்றுள்ளன. இதேவேளையில், ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐக்கிய இராச்சியம் என்பவையை ஈடுபடுத்தும் பாரிய வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் “ஒரு பகுதி ஒரு பாதை” முன்னெடுப்பின் முன்னேற்றம் என்பவை அடுத்த சில ஆண்டுகளில் உலகாளாவிய ரீதியிலான உற்பத்தி, வர்த்தகம் மற்றும் முதலீடு மீது ஓர் பாரிய தாக்கத்தை கொண்டிருக்கும். வானிலை மாற்றம், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் உலகின் சில பிராந்தியங்களில் அரசியல் சார்ந்த இடர்நேர்வுகளின் அதிகரிப்புக்கள் போன்ற பொருளாதாரம் சாராத காரணிகளும் உலகளாவிய பொருளாதார விளைவுகள் கணிசமான இடர்களாக உருவெடுக்கலாம்.

**இந்த உலகளாவிய சூழ்நிலையில் உலகத்திலுள்ள மேம்பட்ட உற்பத்தி மற்றும் வர்த்தக மட்டங்களின் உச்சப் பயனை அடைவதற்கான வளர்ச்சி மையமான கொள்கை வழிமுறைகளின் துரிதமான நடைமுறைப்படுத்தல் தொடர்பில் ஓர் உறுதியான அர்ப்பணிப்பு இலங்கைக்கு தேவையானபொழுதில், பன்னாட்டு நிதியியல் சந்தைகளுக்கான நாடு மற்றும் கூட்டுத்தாபன அடிப்படையிலான வெளிப்படுத்துகையை கண்டிப்பான முறையில் முகாமைத்துவம் செய்யவேண்டும்.** இலங்கையின் பொருளாதார வளர்ச்சியானது தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்களின் சராசரியான வளர்ச்சி வீதங்களை மிகக் குறைவாக காணப்பட்டதுடன் 2017 இன் உலகலாவிய வளர்ச்சி மதிப்பீட்டிற்கு கீழ் வீழ்ச்சியடைந்துள்ளது. ஆகவே, முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்கும் சீரற்ற மூலதனப் பாய்ச்சல்களை முகாமைத்துவம் செய்வதற்கும் செயற்றிறனான உபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் உறுதியான அர்ப்பணிப்பை அவசரமாக இலங்கை மேற்கொள்ளவேண்டும். மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தொடர்ந்து நிலவும் புவியியல் சார்ந்த அரசியல் பதற்றங்கள் என்பன தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் மீது குறைவாக தங்கியிருந்து அதற்குப் பிரதியாய் ஏற்றுமதிகள் சார்ந்த கைத்தொழில்களை ஊக்குவிக்கவேண்டும் என்பதை மேலும் எடுத்துக்காட்டுகிறது. ஐக்கிய அமெரிக்காவிற்கும் சீனாவிற்குமிடையிலான வர்த்தக முரண்பாட்டின் பரப்புதல் இவ்விரண்டு பொருளாதாரங்களுடன் மட்டுமல்ல பெறுமதிச் சங்கிலிகளுடாக ஏனைய வர்த்தக பங்குதாரர்களுடனான இலங்கையின் வர்த்தகத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். இறை மற்றும் நாணயத்துறையை கருத்திற்கொள்ளும்போது, உலகளாவிய நிதிச் சந்தைகளில் வட்டி வீதங்களின் அதிகரிப்பின் சாத்தியம் என்பது நெகிழ்ச்சியான வீதங்களில் வழங்கப்பட்ட நாட்டிற்கான மற்றும் கூட்டுத்தாபன படுகடனின் செலவினத்தை அதிகரிப்பதுடன், படுகடன் கருவிகளின் புதிய வழங்கல்களின் செலவினத்ததை அதிகரிக்கச் செய்யலாம். ஆகவே, முன்மதியான மட்டங்களில் வெளிநாட்டுப் படுகடனை முகாமைத்துவம் செய்யும் அதே வேளையில் உலகளாவிய சந்தைகளுக்கு இலங்கையின் நிதியியல் நிறுவனங்களின் வெளிப்படுத்துகையை உற்றுக் கண்காணித்தல் நடுத்தரக் காலத்தில் அவசியமாகும்.

## 1.4 நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு

**குறிப்பாக சாதகமான பேரண்டப்பொருளாதாரக் கொள்கைகளினால் ஆதரிக்கப்பட்ட அதிகரித்த தனியார் துறையின் பங்கேற்புடன் பொருளாதாரத்தின் வளர்ச்சிப் பாதை நடுத்தரக் காலத்தில் மெதுவாக மேம்படும் என எறிவுசெய்யப்படுகிறது.** தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி 2017இல் இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சிச் செயலாற்றம் தாழ்வாகக் காணப்பட்டபோதும் ஆண்டுக்கான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 2022ற்குள் 6.0 சதவீதத்திற்கு மெதுவாக மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஓர் அறிவு அடிப்படையிலான, மிகுந்த போட்டித்தன்மையுடைய சமூகச் சந்தைப் பொருளாதாரமாக பிராந்திய மையமாக மாற்றமடையும் வகையில் நாட்டை அபிவிருத்தி செய்வதே இலங்கையின் வளர்ச்சி உபாயமாகும். இதன் தொடர்பில், துறைமுக நகர அபிவிருத்தி செயற்றிட்டம், மாநகரச் செயற்றிட்டம் மற்றும்

1

அட்டவணை 1.5

### நடுத்தரகால பேரண்டப்பொருளாதாரக் கட்டமைப்பு (இ)

| குறிகாட்டி | அலகு | 2016 (ஆ) | 2017 (இ) | எறிவுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
| **உண்மைத்துறை (ஈ)** | | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 4.5 (இ) | 3.1 | 5.0 | 5.5 | 6.0 | 6.0 | 6.0 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 11,907 (இ) | 13,289 | 14,515 | 16,015 | 17,817 | 19,819 | 22,053 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 3,857 (இ)(உ) | 4,065 | 4,340 | 4,665 | 5,075 | 5,547 | 6,095 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 35.0 (இ)(க) | 36.5 | 32.5 | 33.0 | 33.5 | 34.0 | 34.5 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 27.6 (இ)(க) | 29.3 | 26.1 | 27.3 | 28.6 | 29.6 | 30.9 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 32.8 (இ)(க) | 33.9 | 30.3 | 31.0 | 31.7 | 32.4 | 33.2 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | | | |
| வர்த்தக இடைவெளி (ஈ) | மொ.உ.உ. இன் % | -10.9 | -11.0 | -11.3 | -10.9 | -10.3 | -9.6 | -8.7 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.மில் | 10,310 | 11,360 | 12,614 | 14,070 | 15,743 | 17,692 | 19,961 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ.மில் | 19,183 | 20,980 | 23,149 | 25,119 | 27,234 | 29,436 | 31,800 |
| நடைமுறை கணக்கு நிலுவை (ஈ) | மொ.உ.உ. இன் % | -2.1 (எ) | -2.6 | -2.2 | -2.0 | -1.8 | -1.6 | -1.3 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 3.8 | 4.6 | 4.8 | 4.5 | 4.4 | 4.6 | 4.7 |
| **இறைச்துறை (ஈ)** | | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 14.2 (ஏ) | 13.8 | 15.7 | 15.9 | 16.4 | 17.0 | 17.4 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ. இன் % | 19.6 (ஏ) | 19.4 | 20.4 | 19.8 | 20.0 | 20.5 | 20.9 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.6 (ஏ) | -0.7 | 0.5 | 0.9 | 1.4 | 1.9 | 2.3 |
| முதன்மை நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.2 (ஏ) | 0.0 | 1.0 | 2.0 | 2.4 | 2.4 | 2.6 |
| திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை | மொ.உ.உ. இன் % | -5.4 (ஏ) | -5.5 | -4.8 | -3.9 | -3.5 | -3.5 | -3.5 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 78.8 (ஏ) | 77.6 | 77.4 | 74.8 | 71.7 | 69.0 | 69.0 |
| **நாணயத் துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஐ) | % | 18.4 | 16.7 | 15.1 | 13.5 | 13.5 | 12.5 | 12.5 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி (in $M_{2b}$) இல் (ஐ) | % | 21.9 | 14.7 | 13.5 | 15.0 | 15.0 | 15.0 | 15.0 |
| ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் (ஐ) | % | 4.0 | 6.6 | 4.0 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 |

(அ) 2018 ஏப்ரல் மாத நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தின் 2010 தள ஆண்டை அடிப்படையாகக் கொண்ட மொ.உ.உ மதிப்பீடுகள் அடிப்படையாகக் கொண்டது
(உ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(ஊ) 2016இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு, உள்நாட்டு சேமிப்புக்கள் மற்றும் தேசிய சேமிப்புக்கள் என்பனவற்றை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் முறையே 31.5%, 23.8% மற்றும் 28.9 % ஆகியவற்றிலிருந்து திருத்தப்பட்டது
(v) The difference between BOP estimate and GDP estimate is due to the time lag in compilation.
(ஏ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் 2018 மார்ச்சு 20 தரப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பதி மதிப்பீடுகளின் அடிப்படையிலானவை
(ஐ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஒ) கொ.நு.வி.சு (2013=100) அடிப்படையிலானது

மொ.உ.உ - மொத்த உள்நாட்டு உற்பத்தி

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

பொருளாதார தாழ்வாரச் செயற்றிட்டங்கள் உள்ளடங்கலான பல முக்கிய முன்னெடுப்புகள் நடைபெற்று வருகின்றன. வெளிநாட்டு நேரடி முதலீடுகளையும் கவரக்கூடிய சொகுசாக வாழக்கூடிய பரப்புகள் மற்றும் அலுவலக வளாகங்கள் போன்ற அம்சங்களிற்கு மேலதிகமாக ஓர் நிதியியல் வலயம் உள்ளடக்கிய ஓர் உலக தரத்திலான கோட்டத்தை அபிவிருத்தி செய்வதனால் இந்திய சமுத்திரத்தில் ஓர் மையமாக மாற்றுவதற்கான முன்னெடுப்பிற்கு துறைமுக நகர அபிவிருத்திச் செயற்றிட்டம் ஆதரவளிக்கும். மேலும், இலங்கையின் புவியியல் இருப்பிடத்திலிருந்து உச்சப் பயனைப் பெறுவதை இயலச்செய்யும் துறைமுகத் துறையிலான அபிவிருத்திகள் என்பவை பிராந்தியத்தில் ஓர் பொருளாதார மையமாக நாட்டை நிறுவுவதை நோக்கிய முன்னெடுப்பிறகும் உதவும். மேலும், ஓர் செயற்றிறனான, உத்வேகமான, வாழக்கூடிய பிராந்தியமாக மேல் மாகாணத்தை மாநகர பெருந்திட்டம் மாற்றமடைச்செய்யும் என்பதுடன் நகரமயமாக்கல் தொடர்பான பிரச்சனைகளையும் தீர்க்கம். வீடமைப்பு, போக்குவரத்து, கழிவு முகாமைத்துவம், அனர்த்த தணிவு மற்றும் கைத்தொழில் மாநகரங்கள் மற்றும் தொழில்நுடப் மையங்களின் அபிவிருத்தி என்பவையை உள்ளடக்கிய இத் திட்டத்திலுள்ள அபிவிருத்தி முன்னெடுப்புக்கள் என்பன பொருளாதாரத்தின் மொத்த வளர்ச்சி உபாயத்திற்கும் ஆதரவளிக்கும். மெலும் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான இலக்கியல்படுத்தல், வேளாண்மை மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளின் இயந்திரப்படுத்தல், பொருளாதார உபாயம் மற்றும் தொழிற்படையின் எதிர்பார்ப்புக்களுடன் ஒத்திசைவாக இருக்கும் வகையில் தொழிலாளர்களின் திறமைகளின் விருத்தி, உள்நாட்டு உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கூடை இரண்டினதும் ரீதியிலான பொருளாதாரத்தை பன்முகப்படுத்தல், இவையுடன் பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பின் தொடர்ச்சியான மேம்பாடு என்பது நாடு ஓர் நிலைத்திருக்கக்கூடிய வளர்ச்சிப் பாதையை அடைவதற்கு இன்றியமையாத அம்சங்களாகும். மேலும், சூழல் சார்ந்த மற்றும் சமூக விளைவுகளை கருத்திற்கொள்ளும் அதே வேளையில் குடிமக்களின் நலனை மேம்படுத்துமம் வகையில் நாட்டின் அபிவிருத்தி

முன்னெடுப்புக்கள் நடைமுறைபடுத்தப்படவேண்டும். உயர்ந்த பெறுமதியிலான தொழில்வாய்ப்புக்கள் இந்த நன்மைகளை ஊடுகடத்துவதற்கு மிகவும் ஆற்றல் வாய்ந்த வழிமுறையாகும. பணவீக்கத்தை ஓர் குறைந்த மற்றும் உறுதியான மட்டத்தில் பேணுவது உள்ளடங்கிய அடிப்படையில் உறுதியின பேரண்டப்பொருளாதார நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்ட இந்த எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்திகள் வருமான மட்டங்களில் ஓர் மெதுவான மேம்பாட்டை விளைவிப்பதுடன் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 2022ற்குள் ஐ.அ.டொ. 6,000 விஞ்சும். திட்டமிடப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் வினைத்திறனான நடைமுறைபடுத்தல் என்பது நாட்டிற்குள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தனியார் துறையின் பொருளாதார நடடிவடிக்கைகளை தூண்டும் என்பதுடன் நடுத்தரக் கால பேரண்டப்பொருளாதார கட்டமைப்பில் முன்வைக்கப்பட்ட எச்சரிக்கையான பாதையிற்கு மேலான ஓர் வளர்ச்சிப் பாதையை அடைவதை இயச்செய்யலாம்.

**பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளின் மெதுவான மீட்சி உள்ளடங்கிய வெளிநாட்டுத் துறையில் சாதகமான அபிவிருத்திகளுடன் நடுத்தரக் காலத்தில் வெளிநாட்டுத் துறை மேம்படும் என எறிவுச்செய்யப்படுகிறது.** வர்த்தகக் கணக்கு, பணிகள் கணக்குக்கான உட்பாய்ச்சல்கள் மற்றம் தொழிலாளர்களின் பணவனுப்பல்களில் எதிர்பார்க்கப்படும் மேம்பாடுகளுடன் நடுத்தரக் காலத்தில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிலுள்ள பற்றாக்குறையானது குறை மெதுவாகக் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது இறக்குமதிகளை விட ஏற்றுமதிகள் உயர்வான வீகிதத்தால் அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாகுறை 2017இல் 11.0 சதவீதத்திலிருந்து 2022ற்குள் 8.7 சதவீதமாக குறுகும். ஏற்றுமதிக் கூடையின் அதிகரித்த அளவு மற்றும் சிக்கல்த் தன்மை, நெகிழ்ச்சியான செலாவணி வீதக் கொள்கையினால் ஏற்றுமதிச் சந்தைகளில் பொருளாதாரத்தின் மேம்பட்ட போட்டித்தன்மை, ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைப்படுத்தல் முறைமை பிளசின் மீள்பெறுகை மற்றும் தற்போதுள்ள மற்றும் புதிய வர்த்தக உடன்படிக்கைகள் மூலமான மேம்படுத்தப்பட்ட வர்த்தக தொடர்புகள் மூலம் மேம்பட்ட சந்தை நுழைவு என்பவை ஏற்றுமதிகளின் விரைவபடுத்தலுக்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தரக் காலத்தில் இடைநிலை மற்றும் முதலீடு பண்டங்களின் உயர்வான இற்க்குமதிகளினால் இறக்குமதிகளும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளையில், முக்கியமாக சுற்றுலாத்துறை, தகவல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்து சேவைகள் தொடர்பான அதிகமான உட்பாய்ச்சலகளால் ஆதரவளிக்கப்பட்டு நடுத்தரக்காலத்தில் பணிகள் கணிக்கின் மிகை மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய நட்சத்திர தர விடுதிகள் மற்றும் மேலும் வினைத்திறனான சந்தைப்படுத்தல் பிரசாரங்களினால் சுற்றுலாத்துறை வருவாய்கள் அதிகமான விகிதத்தால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் தங்களது விரைவான வளர்ச்சிப் போக்கை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேம்பட்ட வெளிநாட்டு வர்த்தகத்தினால் துறைமுக மற்றும் வானூர்தி நிலையம் தொடர்பான நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்படும் விரைவுபடுத்தல் என்பவையுடன் போக்குவரத்திலிருந்தான வருவாய்கள் அதிகரிக்கும். நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையிற்கு அதரவளிக்கும் ஓர் மீள் எழுந்தன்மையுடையதாக வரலாறுகாலமாக நிரூபித்த வெளிநாட்டுச் செலாவணிப் பாய்ச்சலான தொழிலாளர்களின் பணவனுப்பல்களில் நடுத்தரக் காலத்தில் மெதுவான வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளையில், படுகடனை உருவாக்கும் பாய்ச்சல்கள் மற்றும் படுகடனை உருவாக்காத பாயச்சல்கள் இரண்டும் மேம்படுவதுடன் சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. படுகடை உருவாக்காத உட்பாய்ச்சல்கள் மீது தங்கியிருக்குத்தன்மையை பிரதிபலிக்கம் வகையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநாட்டு நேரடி முதலீடு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் சலுகையான மற்றும் சலுகையற்ற கடன்களின் வருவாய்களும் நிதியியல் கணக்கிற்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் அரச பிணையச் சந்தை மற்றும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை என்பன வெளிநாட்டுப் பாய்ச்சல்களுடன் வலுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்மதி நிலுவை எதிர்நோக்கப்படும் அபிவிருத்திகளுடன் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஓர் சாதாமான மட்டத்திற்கு மேம்படும் என எறிவுசெய்யப்படுவதுடன், ஆதலால் வெளிநாட்டு சார்ந்த அதிர்வுகளுக்கு நாட்டின் வெளிப்படுத்துகையை குறைக்கும்.

**நடுத்தரக் காலத்தில் அரசிறை சார்ந்த இறைத் திரட்சி மீதான அரசின் கவனம் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கேற்ப, 2020ற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 3.5 சதவீதமாக வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை வீழ்ச்சியடைதும் என மதிப்பீடு செய்யப்படும் அதே வேளையில் நடைமுறைக் கணக்கு மற்றும் முதன்மை கணக்கில் மிகைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.** வரியின் அமைப்பை எளிமைப்படுத்தும் மற்றும் தளத்தை அகலமாக்கும் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தலைத் தொடர்ந்த அரசிறைச் சேகரிப்பின் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பு மற்றும் அரசிறையை சேகரிக்கும் முகவர்களின் தன்னியக்கமயமாக்கல் வழிமுறையின் தொடரல் என்பவற்றினால் அரசிறைச் சேகரிப்பில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பினால் 2021ற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரசிறை விகிதம் ஏறத்தாழ 17 சதவீதத்திற்கு அதிகரிக்கும என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், செலவினத்தை கருத்திற்கொள்ளும்போது, ஒருங்கிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவத் தகவல் முறைமை மூலமாக திறைசோரி நடடிவடிக்கைகளின் தன்னியக்கமயமாக்கலின் தொடரல்,

1

பாராளுமன்றித்திற்கு காலாணடுச் செலவின அறிக்கைகள் மற்றும் வருமான விளைவு அறிக்கைகளின் சமர்பித்தல், உற்பத்தித்திறனற்ற பொது செலிவனத்தின் சிக்கனப்படுத்தல், நலன்புரி நன்மைகள் சபையிற்குக் கீழ் சகல நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட முறைமையின் நிறுவுதல், கூட்டாண்மை நோக்கக்கூற்றின் செயற்றிறனான நடைமுறைபடுத்தல், எரிபொருள் மற்றும் மின்லலுவிற்கான தன்னியக்க விலைப் பொறிமுறைகளின் அறிமுகம், முக்கியத்துவம் அல்லாத தொழில்முயற்சிகளின் விற்பனை என்பவை முன்னுரிமைப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கேற்ப, நடுத்தரக் காலத்தில், அரச செலவினம் என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தி ஏறத்தாழ 20-21 சதவீதத்தில் பேணப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் பொது முதலீடு தற்போதைய மட்டமான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 சதவீதமாக தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பொது முதலீட்டிற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மட்டப்படுத்தபட்ட இறை இடைவெளிக்குள் மத்தியில் அரச தனியார் பங்குடைமைகள் என்ற அடிப்படையிலான செயற்றிட்டங்களை அரசாங்கம் ஊக்குவிக்க மற்றும் நடைமுறைபடுத்த இலக்கிடுகிறது. அதேவேளையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கடப்பாடுகள் இரண்டும் ஓர் பாரிய சவலாக இருப்பதனால் தீவிரப் பொறுப்பு முகாமைச் சட்டத்தின் அண்மையிலான சட்டவாக்கத்தினால் மத்திய அரசின் படுகடன் பட்டியலின் முதிர்ச்சி வடிவத்தை சீராக்குவதற்கான பொறுப்புக்களின் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரச படுகடன் மேம்பட்ட முகாமைத்துவத்திற்கு நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி இரண்டும் சோர்ந்து ஓர் நடுத்தரக் கால படுகடன் உபாயத்தை உருவாக்கிறார்கள். இந்த அபிவிருத்திகள் மற்றும் உயர்ந்த முதன்மை மிகைகளின் தொடர்ச்சியான உருவாக்கத்தினால் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரச படுகடனின் விகிதம் 2020ற்குப் பின்னர் 70 சதவீதத்திற்குக் கீழ் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இறை ஒழுக்காற்றை மேம்படுத்துவதற்காக பிணைப்பான இறை விதிமுறைகள், இறை இலக்குகளை எய்தாத பொருட்டு தெளிவாக வரையறுக்கப்பட்ட விடுவித்தல் கூற்றுக்கள் மற்றும் திருத்தப் பொறிமுறைகள் என்பவையை உள்ளடக்கும் வகையில் 2003 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டம் திருத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நெகிழச்சியான பணவீக்க இலக்கிடலை இலங்கையின் நாணயக் கொள்கை கட்டமைப்பாக வெற்றிகரமாக மேற்கொள்வதற்கான மத்திய வங்கியின் முன்னெடுப்புக்கள் நடுத்தரக் காலத்தில் விலை உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.** 2020ற்குள் ஓர் நெகிழச்சியான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பை நோக்கி நகர்வதற்கான தனது நோக்கத்தை மத்திய வங்கி 2017இன் முன்னரான காலப்பகுதியில் உத்தியோகப்பூர்வமாக அறிவித்தது. இந்த உத்தியோகப் பூர்வமான அறிவித்திலுக்குப் பின்னர் நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடலை மேற்கொள்வதை நோக்கிய சீரான நகர்வை வசதிபடுத்துவதற்காக பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. தேவைபடுகின்ற சட்ட ரீதியான, நிறுவன ரீதியான, தொழிற்பாடு ரீதியான மற்றும் கொள்கை சீர்திருத்தங்களை எடுத்துக்காட்டும் வகையிலான நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடலை மேற்கொள்வதற்கானவழிகாட்டலின் வடிவமைப்பு இதில் உள்ளடங்கும். மத்திய வங்கியின் ஆளுகையை மேம்படுத்தல், நிதியியல் துறையின் மேற்பார்வையை வலுப்படுத்தல் மற்றும் இறை-நாணய ஒத்திசைவை மத்திய வங்கியின் சுதந்திரத்தை வலுப்படுத்துவதற்கும் நாணயக் கொள்கை கட்டமைப்பாக நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடலின் மேற்கொள்ளலை வசதிபடுத்துவதற்காக நாணய விதிச் சட்டத்தில் விரிவான திருத்தங்களை அறிமுகப்படுத்துவதற்காக அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நெகிழச்சியான பணவீக்க இலக்கிடலின் மேற்கொள்ளுதலை நோக்கிய வெற்றிகரமான நகர்வை உறுதிபடுத்தவதற்காக தற்போது மேற்கொள்ளப்படுகிறனற நிறுவன ரீதியான மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பிலான ஏனைய சீர்திருத்தங்களும் தொடரும். இந்த நிலைமாறு காலத்தில் மத்திய வங்கியின் மாதிரியுருமைத்தல் மற்றும் எறிவுகூறல் ஆற்றலென்பது பன்னாட்டு நாணயநிதயத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தொடரும். இத்துடன் நாணயக் கொள்கை சமிக்கைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக தற்கோதுள்ள கொள்கை வட்டி வீத வீச்சசை இலங்கை மத்திய வங்கி மெதுவாக ஒடுக்கமாக்கும். இதேவேளையில், நாணயக் கொள்கை தொடர்பாடலை மத்திய வங்கி தொடர்ந்தும் மேம்படுத்தும். நெகிழ்சியான பணவீக்க இலக்கிடலக்கு மாறினாலும் பொருளாதாரத்தின் சீரான செயலாற்றத்திற்கு போதியளவான திரவத்தன்மையின் கிடைக்குந்தன்மையை உறுதிபடுத்துவதற்கு நாணய மற்றும் கொடுகடன் கூற்றுக்களின் நடத்தையின் கண்காணிப்பு தொடரும். மொத்தமாக, வளர்ச்சி உள்ளாற்றலை அடைவதற்கு பொருளாதாரத்திற்கான தளத்தை அமைக்கும் வகையில் நடுத்தரக் காலத்தில் பணவீக்கத்தை நடு ஒற்றை இலக்க மட்டங்களில் பேணும் வகையில் நாணயக் கொள்கையை நடத்துவதற்கு இலக்கிடப்படும். தொடர்பான கொள்கைகள், உட்கட்டமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் என்பவையில் எதிர்நோக்கப்படும் மேம்பாடுகளுடன் நிதியியல் துறையின் அதிகரிக்கும் மீண்டெழுந்தன்மை என்பது ஓர் ஆழமான மற்றும் திரவத்தன்மையுடைய நிதியியில் சந்தை மூலம் நாணயக் கொள்கையின் ஊடுகடத்தலின் செயல்திறனை மேம்படுத்துவதால் மத்திய வங்கியின் விலை உறுதிப்பாடு முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிக்கும்.

## 1.5 பிரச்சனைகளும் கொள்கைகளும்

**பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் மேற்கொள்ளல் மூலம் அதிகரித்த பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டினை நோக்கி இலங்கை முன்னேற்றமடைந்திருந்தாலும், அதன் வளர்ச்சிச் செயலாற்றம் விரும்பத்தகு மட்டங்களிலில்லை**

**என்பது வளர்ச்சிக்கான தடைகளை நீக்கும் அமைப்பியல் சீர்த்திருத்தங்களின் நடைமுறைப்படுத்தலுக்கான அவசரமான தேவைப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.** வளர்ச்சிக் கட்டமைப்பிற்கு வலுவூட்டும் வகையிலான பல வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுகிற பொருண்மையை கருத்திற்கொள்ளும் அதே வேளையில், நடுத்தரக் காலம் மற்றும் அதற்கு அப்பாலான காலத்தில் உயர்ந்த வளர்ச்சிப் பாதைக்கு நாடு நகர்வதென்றால் தொடர்ந்து வரும் பகுதியில் முனைப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்களும் அதற்கு தேவைப்படும் கொள்கைகளையும் மேற்கொள்ளும் தேவைப்பாட்டை மீள வலியுறுத்துகிறது.

**வர்த்தகரீதியில் வளம்பெறக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்காக விவசாயிகளை வலுவூட்டுவதை நோக்கி வேளாண்மை கொள்கை இலக்கு மெதுவாக மாறவேண்டும்.** உணவு பாதுகாப்பை உறுதிபடுத்துவது மற்றும் தொழிற்படையில் நான்கில் ஒரு பகுதிக்கு மேலானவர்களை பணியில் அமர்த்தியதன் மூலம் நாட்டின் குடித்தொகையின் மொத்த நலனிற்கு ஆதரவளிப்பதில் வேளாண்மைத் துறை ஓர் முக்கிய பங்கை கொண்டுள்ளது என்பதை அங்கீகரித்து, இந்தத் துறையை மேம்படுத்துவதற்காக பல வழிமுறைகளை தொடர்ச்சியாக அரசாங்கங்கள் நடைமுறைபடுத்தியுள்ளன. நாட்டின் வேளாண்மை வெளியீட்டை அதிகரிப்பதற்கு இந்த வழிமுறைகள் உதவியுள்ளதுடன், அரிசி தொடர்பில் ஏறத்தாழ தன்னிறைவை இலங்கை பதிவுசெய்துள்ளது. வேளாண்மைத் துறையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த வகையிலான ஓர் வழிமுறை வளமாக்கி மானியச் செயற்றிட்டமாகும். 1962இல் முதன் முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட இந்த திட்டம், 1990இன் ஆரம்ப காலப்பகுதி தவிர, ஏனைய பகுதியில் 2016 சிறுபோக காலம் முதல் நெல் விவசாயிகளுக்கு பண மானியங்கள் வழங்கபட்டமை உள்ளடங்கலாக பல்வேறுபட்ட வடிவங்களில் தொடர்ந்தது. எனினும், இந்த மானியத் திட்டத்தின் உளதாம் தன்மையினால் வளமாக்கிகள் மீதான சார்பு அதிகரிக்கபட்டு, இதன் விளைவாக மேலதிகமான பாவனை மற்றும் மண் மற்றும் நீர் வளங்களின் தூய்மைக் கெடுதலை ஏற்படுத்தியுள்ளது. சேதனமற்ற வேளாண் உள்ளீடுகளின் அதிகமான பயன்பாட்டிற்கு மத்தியிலும், உற்பத்தித்திறன் மட்டங்கள் தொடர்ந்தும் குறைவாகக் காணப்பட்டதனால் கணிசமான அளவான தொழிற்படை குறைந்த வருமானங்களை ஈட்டிக்கொண்டு வேளாண்மைத் துறையில் தொடர்ந்து இருந்ததுடன், உயர்ந்த மற்றும் மாற்றமடையும் விலைகளுக்கு இறுதி நுகர்வோர் தொடர்ந்தும் முகம்கொடுக்கவேண்டியாயிற்று. ஆகவே, மானியங்களை சார்ந்த மற்றும் பிழைப்பு மட்ட வேளாண்மை நடவடிக்கைகளிலிருந்து வர்த்தகரீதியில் வளம்பெறக்கூடிய வேளாண்மையில் ஈடுபடுத்துவதற்காக விவசாயிகளை வலுவூட்டுவதை நோக்கி கொள்கை இலக்கு மெதுவாக மாறவேண்டும். குறிப்பிட்ட துறைகளுக்கு ஆதரவளிப்பதற்காக மேலும் இலக்கிடப்பட்ட முறையில் இந்த மானியத் திட்டம் தொடரவேண்டியிருக்கும்பொழுதில் அளவு ரீதியான நன்மைகளை அதிகரிப்பதற்குஇந்த துறையில் இயந்திரமயமாக்குதலை ஊக்குவிப்பதற்காக நிதியின் கிடைக்குந் தன்மையை மேம்படுத்தல் மற்றும் உள்நாடு மற்றும் பன்னாட்டு இரண்டிலும் சந்தை நுழைவை அதிகரிப்பதற்காக வேளாண்மை ஏற்பாட்டியல் வலையமைப்புகளை மேம்படுத்தலும் அவசியமாகும். மேலும், அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களை குறைப்பதற்கு மேம்பட்ட களஞ்சியப்படுத்தல், போக்குவரத்து உபாயங்கள் மற்றும் அறுவடைக்குப் பின்னரான உணவு கையாளால் போன்ற வழிமுறை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன் சுழற்சி பயிர்ச்செய்கை, நீர் முகாமைத்துவம் மற்றும் பயிர்-கால்நடை ஒருங்கிணைப்பு போன்ற ஏனைய உற்பத்தித்திறனை மேம்படுத்தும் இயக்கமுறைகளை மேற்கொள்ளவேண்டும். மேலும், சந்தைக் கேள்வியுடன் வேளாண்மை நிரம்பல் இசைவாக இருப்பதை உறுதிபடுத்துவதில் கவனம் செலுத்துவது விவசாயிகளின் மேம்பட்ட வருமான மட்டங்களை பெறுவதை ஆதரவளிக்கும். விவசாயிகள் முகம் கொடுக்கும் விலை உறுதியின்மைகளை குறைப்பதற்கு வேளாண் உற்பத்திகளுக்கு பெறுதிச் சாதனங்களை விருத்தி செய்யவேண்டும். வர்த்தகரீதியிலான வேளாண்மையை நோக்கிய நகர்வென்பது விவசாயிகளின் நிதியியல் சுதந்திரத்தை வலுப்படுத்துவதுடன் துறையில் உயர்ந்த உற்பத்தித்திறன் மட்டங்களையும் தோற்றுவிக்கும்.

**பொருந்தோட்ட கைத்தொழில் முகம்கொடுக்கும் பல்வேறுபட்ட சவால்களை தீர்ப்பதால் இந்த துறை தனது உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் போட்டித்தன்மையாக தொடர்ந்து இருப்பதற்கு இயலச்செய்வதுடன், அதன் பொருளாதார உள்ளாற்றலை எய்துவதற்கு இயலச்செய்யும்.** 2016 மற்றும் 2017 முழுவதும் காணப்பட்ட நீண்ட வறட்சி, வெள்ளங்கள் மற்றும் சீரற்ற மழை என்பனவால் வேளாண்மைத் துறை முழுவதினது உற்பத்தி மட்டங்களில் ஓர் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இருப்பினும், பெருந்தோட்ட கைத்தொழிலின் நிறுவன அமைப்பிலுள்ள குறைபாடுகள் மற்றும் தொழில்முயற்சி மட்டத்தில் வேளாண்மை முகாமைத்துவ வழக்கங்கள் உள்ளடங்கலான பல காரணிகள் எதிர் விளைவான வானிலை நிலைமைகளின் எதிர்கணியமான பலன்களை மேலும் மோசமடையச்செய்து சாதாரணமான இயற்கைச் சூழல் நிலைமைகளிற்கு மத்தியிலும் இக் கைத்தொழிலின் வாழுமையை அச்சுறுத்தியது. குறிப்பாக பயிர்கள் தொடர்பான சவால்களுடன் வேளாண்மைத் துறை தொடர்பான பிரச்சனைகள் என்பன பெருந்தோட்ட கைத்தொழிலில் காணப்படும் தற்போதைய குறைந்த உற்பத்தித்திறன் மட்டங்களுக்கு பங்களித்தன. மீள் பயிரிடாமை, அதிகமான தொழிலாளர் செலவுகள், குறைந்த தரத்திலான வெளியீடு, பூச்சிகளின் தாக்குதல்கள், குறைந்த தரத்திலான இறக்குமதி செய்யப்பட்ட விதைகள், வளமாக்கியின் தவறான பயன்பாடு மற்றும் நிறுவன ரீதியான ஆதரவின் பூர்த்தியற்றத் தன்மை என்பன பெருமளவிலான பெருந்தோட்ட கைத்தொழில்களின் சீர்கேடான

பிரச்சனைகளாகும். இந்த பிரச்சனைகள் கிளைபோசேட் தடை உத்தரவினால் மேலும் அதிகரித்துள்ளன. இலங்கையின் தேயிலை கைத்தொழில் தொடர்பில், புத்தாக்கங்கள் தொடர்பிலான குறைந்த நெகிழ்வுத்திறன் மற்றும் குறைந்த உற்பத்தித்திறன் என்பவையினால் உலகச் சந்தையில் அதன் பங்கீட்டை தொடர்ந்து இழந்து வருகிறது. இதேவேளையில், செயற்கையான இறப்பருடன் போட்டியிடுவதானால் இக்கைத்தொழிலானது உற்பத்தி செய்யும் இறப்பரின் தரத்தில் ஓர் பாரிய அதகரிப்பு தேவைப்படுகிறது. சட்டம் சார்ந்த மற்றும் சட்டமுரணான முறையில் பெருந்தோட்டங்கள் அதிகளவில் உண்மைச் சொத்து உடைமை பயன்பாட்டிற்கான மாற்றல் தெங்குத் துறையில் ஓர் பாரிய சவாலாகக் காணப்படுகிறது. பொருந்தோட்ட கைத்தொழில் தொடர்பான பிரச்சனைகளை தீர்ப்பதற்கு கைத்தொழிலின் நீண்ட கால தேவைப்பாடுகளை திட்டமிடல் செயன்முறை கருத்திற்கொள்ளவேண்டும் என்பதுடன், தற்செயலான இடையீடுகளை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் நடைமுறையிலிருக்கவேண்டும். பாரிய பெருந்தோட்ட பயிர்கள் தொடர்பில், பெருமளவிலான செலவு மற்றும் தொழில்நுட்ப நன்மைகளை கொண்ட நாடுகளுடன் இலங்கை போட்டியிடுகிறது. ஆகவே, வேறுபட்ட பயிர்களுக்கு மத்தியில் இல்லாவிடில் பெருந்தோட்ட பயிர்களாக மருத்துவப் பயிர்களின் நடுகை போன்றவையினால் பெறுமதிமிக்க சிறிய சந்தைகளிற்குள் பன்முகப்படுத்தி நுழையும் வழிகளை இலங்கை ஆராயவேண்டும். இந்த வேளையில், இலங்கையில் பயிர் தொற்றொதுக்கச் சேவைகளை வலுப்படுத்துவதற்கான உறுதியான கொள்கை வழிமுறைகள் தேவைப்படுகின்றன. விதைக் கைத்தொழிலை ஆதரிப்பதனால் விதைகளின் உற்பத்தியை மேம்படுத்துவதும் சில சந்தர்ப்பங்களில் வேற்றுப் பூச்சிகளை கொண்டதாக இனங்காணப்பட்ட குறைந்த தரத்திலான விதைகளின் இறக்குமதியை கட்டுப்படுத்துவதும் விதைகளுக்கான நற்சான்றளித்தல் சேவைகள் என்பன அவசியமாகும். பயிர்செய்கையில் ஈடுபடுவோரினால் வருமானத்தில் உயர்ந்த இடர்நேர்வுகள் மற்றும் உயர்ந்த தளம்பல்கள் என்பன பெருமளவிலான கைத்தொழில்களில் குறைந்த மீள்பயிரிடலை பாதிக்கும் முக்கிய காரணிகளாக கருதப்படுவதனால், முன்கூட்டியே அறியத்தக்க விலைகள் மற்றும் உற்பத்தித்திறனுடன் தொடர்புபடுத்திய கூலி அமைப்புக்கள், திடமான பயிர்க் காப்புறுதி திட்டங்கள் மற்றும் விலைகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலான சந்தை அடிப்படையிலான பெறுதிக் கருவிகள் என்பவையை கொண்ட சாதகமான பேரண்டப்பொருளாதார சூழல் பெருந்தோட்ட கைத்தொழிலை பேண உதவும்.

**உட்கட்டமைப்பில் பாரிய முதலீடு என்பது கைத்தொழில் துறையில் வளர்ச்சியை தூண்டவில்லை என்பது கைத்தொழில்மையமாக்களுடன் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் குறிக்கோள்கள் இசைவாக இருக்கவேண்டியதன் தேவைப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.** வேறு பல நடுத்தர வருமான மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களுடன் இலங்கையும் கடந்த தசாப்தத்தில் பாரிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களில் கணிசமான முதலீட்டை செய்துள்ளது. குறுகிய காலத்தில் பொருளாதாரத்தில் கூட்டப்பட்ட மொத்த பெறுமதியை அதிகரிக்க இந்த முதலீடு உதவியிருந்தாலும், பொருளாதாரத்தின் வர்த்தக் துறையின் உற்பத்தித்திறனான உள்ளாற்றலின் மேம்படுத்துதலுக்கு சில முதலீடுகளின் பங்களிப்பு குறைவாகவே காணப்பட்டது. திரண்ட அடிப்படையில், விளைவு வீதங்கள் ஏமாற்றமளிக்கின்றவையாகவுள்ளன. கைத்தொழில்களால் இவ்வகையான உட்கட்டமைப்பை குறைந்தளவில் பயன்படுத்தியமை மற்றும் இந்த உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான தனியார் துறை முதலீட்டை கவர இயலாமை என்பது முக்கிய காரணமாகும். மேலும், கடந்த பல ஆண்டுகளாக, ஏற்றுமதிகள் சார்ந்த கைத்தொழில்களை விட, வர்த்தகம் செய்யப்படாத சேவைகள் மற்றும் ஏனைய உள்நாடு சார்ந்த கைத்தொழில்களுக்கு வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வழிபடுத்தப்பட்டன. ஒப்பிடக்கூடிய ஆசியாவின் ஏனைய பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில் தயாரிப்பு கைத்தொழில்கள், வேளாண்வர்த்தகம் மற்றும் வர்த்தகப்படுத்தப்படும் சேவைகள் மீதான முதலீடு மிகவும் குறைவாக காணப்படுகிறமை முதலீட்டை கவர்வதற்கு உட்கட்டமைப்பின் கிடைக்குந்தன்மை என்பது மட்டுமே போதாது. இதேவேளையில், கைத்தொழில் உட்கட்டமைப்பை நுண்ணாய்வு செய்தால் நாட்டில் ஏற்பாட்டியல் மற்றும் கைத்தொழில் உட்கட்டமைப்பின் விருத்தியிற்கிடையிலே ஓர் பாரிய தொடர்பின்மை காணப்படுகிறது. பொருளாதார வலயங்களின் வெற்றிக்கு முதலீட்டு மேம்பாட்டு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தியில் ஈடுபட்டுள்ள அரச முகவர்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பின் மேம்படல் தேவையாகவுள்ள வேளையில், தொடர்பில்லாத பிரதேசங்களில் சிறிய கைத்தொழில் தொகுதிகளின் விருத்தி என்பது கைத்தொழில் கொத்தாக்கம் மூலம் கிடைக்கக்கூடிய திரட்சி நன்மைகளின் பெறுகையிற்கு பாரிய தடையாக திகழ்கிறது. கைத்தொழில்களுக்கு ஆதரவளிக்கக்கூடிய வகையில் உட்கட்டமைப்பு இருந்தால் மட்டுமே உட்கட்டமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி மாதிரியுருக்கள் நேர்க்கணியமான விளைவுகளை ஏற்படுத்துமென ஏனைய நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. கைத்தொழில் கொத்தாக்கம் மூலமான திரட்சி நன்மைகளை எய்துவதற்கு யப்பான், சீனா, தென் கொரியா மற்றும் வியெற்னாம் போன்ற நாடுகளில் விரைவான கைத்தொழில்மயமாக்கலை பொருத்தமான ஏற்பாட்டியல் வசதிகளுடன் சில பாரிய கைத்தொழில் வலயங்கள் மட்டுமே ஊக்குவித்தன. ஆகவே, உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களின் நடைமுறைபடுத்தலுக்கு முன்னர் கடுமையான தேவைப்பாட்டு கணிப்பீடுகள் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகளின் மேற்கொள்ளலை உறுதிசெய்யும் அதே வேளையில் சுற்றுப்புற பிரசேதங்களில் கைத்தொழில்களை விருத்திசெய்வது தொடர்பில் முக்கியத்துவமளிக்க வேண்டும்.

குறைந்த மட்டத்திலான தொழிலின்மை காணப்பட்டாலும், நடுத்தரக் காலத்தில் ஓர் நடுத்தர வருமானங்கொண்ட பொருளாதாரமாக முன்னேறுவதற்கான நாட்டின் நடவடிக்கைகள் தொடர்பில் வளர்ச்சிச் செய்முறைக்கு தொழிற்படை சந்தைகளின் பங்களிப்பு தொடர்பில் கொள்கை இடர்பாடுகள் உள்ளன. எல்லோருக்கும் கிடைக்கத்தக்கவாறான நலன் மற்றும் கல்வி தொடர்பில் தொடர்ச்சியான அரசாங்கங்களின் ஒப்பிய பொறுப்பு என்பது ஓர் வளமிக்க தொழிற்படையை உருவாக்க இலங்கையை இயலச்செய்துள்ளதுடன், கடந்த காலத்தில் காணப்பட்ட குறைந்த மட்டத்திலான தொழிலின்மையில் பிரதிபலிக்கப்பட்டவாறு இவையில் பலர் ஏதோ ஒரு வகையான தொழில் வாய்ப்பில் ஈடுபட்டுள்ளன. இருப்பினும், தற்போதுள்ள குறைந்த மட்டத்திலான தொழிலின்மை என்பது பொருளாதார வளர்ச்சியில் ஓர் பாரியளவிலான நன்மையை விளைவிக்காதது என்பது இனி வரும் காலங்களில் தொழில்வாய்ப்புக்களின் அளவை மட்டும் அதிகரிப்பது என்பது போதாது. வேளாண்மைத் துறையில் தொழில்புரிவோரின் பங்கு தொடர்ந்து வீழ்ச்சியிடைந்து காணப்பட்டபோதும், தொழில்புரிவோரின் 26.1 சதவீதமானோர் தொடர்ந்தும் இந்த துறையில் ஈடுபட்டதுடன் அவர்கள் 2017இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 6.9 சதவீதத்திற்கு மட்டுமே பங்களித்தனர். இது இந்த துறையில் தொழிலாளர் உற்பத்தித்திறன் மற்றும் கீழ் உழைப்பு தொடர்பான இடர்நேர்வுகளை எழச்செய்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு வேளாண்மைத் துறையின் பங்களிப்பின் ஏறத்தாழ மூன்று மடங்காகக் தொழில்நிலையின் பங்களிப்பு காணப்படும் மத்திய, சப்பரகமுவ, வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் இது மேலும் கடுமையான ஓர் பிரச்சனையாக காணப்படுகிறது. பல ஆண்டுகளாக பல ஆர்வலர்கள் எடுத்துக்கூறியபோதிலும், ஓர் சிக்கலான பொருளாதாரத்தின் தேவைப்பாட்டிற்கு பொருத்தமான கல்வி மற்றும் தேர்ச்சித் திறமைகளை தற்போதுள்ள மற்றும் எதிர்கால தொழிற்படை போதியளவில் கொண்டிருக்காத விடயம் தொடர்ந்தும் தீர்வில்லாமல் காணப்படுகிறது. முறையான மற்றும் பொருத்தமான கல்வியை அதிகாமான காலப்பகுதியில் மேற்கொள்வதற்கு நிச்சயமளித்து மற்றும் தொழில்சார் கல்வி வாய்ப்புக்கள் தொடர்பில் அரசாங்கம் அண்மைக் காலங்களில் மேற்கொண்ட முன்னெடுப்புக்கள் வரவேற்கத்தக்கனவாகயிருந்தாலும், பொருளாதாரத்தின் தேர்ச்சித் திறன் மற்றும் அறிவு இடைவெளிகளை பூர்த்திசெய்வதற்கு உயர் மற்றும் மூன்றாந்தர கல்வி வாய்ப்புக்களின் கிடைக்குத்தன்மை பெருமளவிற்கு போதாமல் காணப்படுகிறது. கீழ் நடுத்தர வருமான மற்றும் மேல் நடுத்தர வருமான நாடுகளின் சராசரிகளுக்கு கீழே காணப்படும் இலங்கையின் மூன்றாந்தர அனுமதி வீதங்கள் என்பன உயர் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான நாட்டின் உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண் தரமிடலில் எதிர்கணியமான தாக்கத்ததை ஏற்படுத்தியது. ஓர் ஏற்றுமதி சாந்த பொருளாதாரமாக இலங்கையை மாற்றியமைத்து ஏற்றுமதிப் பெறுமதிச் சங்கிலியில் ஓர் இடத்தை கைபற்றுவதற்கான பல கொள்கை சார் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ப்பட்டிருந்தாலும், தொழிற்படையின் தரத்தை உயர்த்துவதற்கான கொள்கை முயற்சிகள் என்பவையில் போதாமை, ஒருங்கிணைப்பு இல்லாமை மற்றும் ஒப்பிய பொறுப்பில்லாமையாகக் காணப்படுகின்றன. கல்வித் துறை, குறிப்பாக உயர் கல்வி தொடர்பான தரம், பொருத்தம், சமநிலை மற்றும் கொள்திறன் பற்றிய கொள்கை முன்னெடுப்புக்கள் அவசரமாக முன்னுரிமைப்படுத்த வேண்டும், ஏனெனில் பொருளாதாரத்தின் உருமாற்றத்திற்கு உயர்தர மனித வளங்கள் என்பன இன்றியமையாததாகும். தற்போது, இலங்கையின் வளர்ச்சியென்பது கைத்தொழில் மற்றும் சேவைகள் துறைகளால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இவை இரண்டுமே வரும் தசாப்தகாலத்தில் ஓர் வேகமான தொழில்நுட்ப மாற்றத்திற்குட்படவுள்ளன. இந்தியவிலுள்ள 69 சதவீதமான வேலைவாய்புக்களும் சீனாவில் 77 சதவீதமான வேலைவாய்ப்புகள் தன்னியக்கமயமாக்கலினால் அச்சுறுத்தப்படுகின்றன என உலக வங்கி மதிப்பீடு செய்கிறது. தற்போது, மூன்றாந்தர மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்படை கேள்வி பற்றிய அளவீடுகளின்படி பகுதியளவில் தேர்ச்சித்திறனுடைய மற்றும் தேர்ச்சித்திறனற்ற தொழிற்படைக்கு தற்போது உயர்வான கேள்வி உள்ளது. இருப்பினும், குறுகிய காலத்தில் இவை இயந்திரமயமாக்கப்படும் உயர்ந்த சாத்தியக்கூறுகள் இருப்பதனால், இவை அனாவசியமாக்கப்பட்டு தொழில்வாய்ப்புக்களின் இழப்பை விளைவிக்கும். இவ்வகையான தொழில்நுட்ப மாற்றத்தின் விளைவை கணிப்பிட்டு, ஏதேனும் கட்டம் கட்டமான இயந்திரமயமாக்கல் ஏற்படும் சந்தர்ப்பத்தில் ஓரளவிலான பெயர்ச்சித்தன்மையுடையவையாக தேர்ச்சித் திறன்களை மேம்படுத்தக்கூடிய முன்மதியான கொள்கை வழிமுறைகளை மேற்கொள்வது தொடர்பில் ஆர்வலர்களுடன் கொள்கை வடிவமைப்பாளர்கள் ஆலோசிப்பது அவசியமாகும். மேலும், ஏறத்தாழ 60.2 சதவீதமான தொழில்நிலை, முறைசாரா துறையிலுள்ளது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கைத்தொழில் துறை நிறுவனங்களில் ஐந்திலிருந்து இருபத்தைந்து வரையிலான வேலையாட்களை கொண்டு 2015இல் தக்கவைத்துக்கொண்டனர். இலங்கையில் 76 சதவீதமான தொழில்முயற்சிகள் 19ஐ விட குறைவான வேலையாட்களைக் கொண்ட நிறுவனங்களாகும். குறிப்பாக உற்பத்தித்திறன், புத்தாக்கம் மற்றும் வளர்ச்சி தொடர்பான பல கொள்கைச் சிக்கல்களையும், நுண்பாக மட்டத்தில் வேலையாட்களின் உரிமைகள், சமூக பாதுகாப்பின் கிடைக்குந்தன்மை மற்றும் கண்ணியமான வேலை நிலைமைகள் பற்றிய கொள்கைச் சிக்கல்களை எடுத்துக்காட்டுகிறது. தொழில்நிலை உருவாக்கம் மட்டுமின்றி தொழிலாளர் உற்பத்தித் திறன் மற்றும் அதிக கூலிகளை பெற்றுத்தரக்கூடிய வேலைவாயப்புக்களை பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை பற்றிய கொள்கை முன்னெடுப்புக்கள் என்பன பொருளாதரத்தின் முக்கிய அவசரமான தேவைப்பாடகும். இவை இரண்டும் ஓர்

1

செயல்வினையினால் முன்னெடுக்கப்பட்ட வளர்ச்சி, வளங்களின் செயற்றினான பயன்பாடு மற்றும் வறுமை மற்றும் சமமின்மை என்பவற்றை உறுதியளிக்கும்.

**தனியார் கல்வித் துறையின் சாதகமான வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு தனியார் கல்விச் சேவைகளின் தர உத்தரவாதம் மற்றும் சான்றளிப்பு மேலும் வலுவூட்டப்பட வேண்டும். குறுகிய இறை இடைவெளியை கருத்திற்கொண்டு, மாற்றமடையும் தொழிற்படைச் சந்தை தேவைப்பாடுகள், உயர்ந்த வருமான குடியிருப்பாளர்களிடமிருந்து உலக தரத்திலான கல்விக்கான அதிகரித்துச்செல்லும் கேள்வி மற்றும் அரச பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழங்களில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்கள் போன்ற நாட்டின் சமூகபொருளாதார சவால்களிற்கு முகங்கொடுப்பதற்கு கல்வியின் வழங்கலில் தனியார் துறையின் ஈடுபாடு அவசியமாகும்.** இது தொடர்பில், பொது மற்றும் மூன்றாந்தர கல்வி இரண்டிலும் கடந்த சில தசாப்தங்களில் கல்வியில் தனியார் துறை தனது உளதாந்தன்மையை மெதுவாக அதிகரித்துள்ளது. முக்கியமாக அரச பாடசாலைகளில் அதிக ஆள் நெருக்கடியினால், நாட்டில் தனியார் பாடசாலைகளுக்கான கேள்வி அதிகரித்துக்கொண்டிருக்கிறது. கல்வி அமைச்சு, மாகாண மற்றும் வலய அதிகாரிகளினால் கிரம அடிப்படையில் அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் கண்காணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டாலும், தற்போது பன்னாட்டு பாடசாலைகளுக்கு இவ்வகையான ஒழுங்குபடுத்தல் பொறிமுறை எதுவுமில்லை. எதுவிதமான ஒழுங்குபடுத்தல் மற்றும் கண்காணிப்பு பொறிமுறை இல்லாததனால், பன்னாட்டு பாடாசலைகளின் வசதிகள், ஊழியரின் கல்வித் தகைமைகள், மற்றும் வழங்கப்படும் கல்வியின் தரம் யாவும் மிகவும் சீரற்று காணப்படலாம். எந்தவிதமான தெளிவான தரமிடல் மற்றும் தரப்படுத்தல் வழிமுறை எதுவுமில்லாததால், பாடசாலைத் தேர்வு பற்றி பெற்றோர்கள் ஓர் நிறைவான தீர்மானத்தை எடுக்க முடியவில்லை. சகல மாணவர்களுக்கும் உயர்ந்த தரத்திலான கல்விக்கு சீரான அனுமதியை அரச துறை பாடசாலைகளால் வழங்முடியாததனால், உயர்ந்த வருமான குடியிருப்புக்கள் பன்னாட்டு பாடசாலைகளை தேர்ந்தெடுக்கிறார்கள். கற்பிக்கும் முறைகள், கற்பித்தல் மொழி, பாடத்திட்டம், பாடத்திட்டம் தொடர்பான செயல்கள், பரீட்சைகள் மற்றும் கணிப்பீடு வழிமுறைகள், ஒழுக்கம், அவையின் சேர்க்கை மற்றும் சான்றளிப்புத் தரங்கள் மற்றும் ஏனையவை தொடர்பில் அரச மற்றும் அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளிலிருந்தும் அவை ஒவ்வொன்றிற்குமிடையிலும் பன்னாட்டு பாடசாலைகள் பொதுவாக வேறுபடுகிறன. ஆகவே, நன்றாக செயற்படும் உயர்தரமுடைய பன்னாட்டுப் பாடசாலைகளுக்கு இடையூறு விளைவிக்காதவாறு ஓர் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பு மற்றும் தர உத்தரவாத பொறிமுறை ஒன்று நிர்மாணிக்கப்படவேண்டும். ஓர் ஒழுங்குபடுத்தல் அமைப்பின் மேற்பார்வைக்குக் கீழ் சகல பன்னாட்டு பாடசாலைகளை ஒன்று சேர்ப்பதென்பது பன்னாட்டு பாடசாலைகளுக்கு ஓர் குறைந்தளவான தர படிநிலைகளை அறிமுகஞ்செய்வதற்கு வசதியளிக்கும். இதேவேளையில், அனுமதிக்கான தகைமைகள், ஓர் சீரான புள்ளி மற்றும் தகைமை கட்டமைப்பு, கற்பித்தல் மற்றும் பயிற்சி தரங்கள் மற்றும் கணிப்பீடு முறைகளை உள்ளடக்கும் ஓர் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை அரச மற்றும் அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் ஓர் சுதந்திர தர உத்தரவாத மற்றும் சான்றளிப்பு அதிகாரசபையை நிர்ணயிப்பதற்கான வழிமுறையில் தற்போது அரசு உள்ளது. முன்னைய காலத்தில் தனியார் மருத்துவ கல்வி வழங்கிய நிறுவனங்கள் தொடர்பில் காணப்பட்ட பிரச்சனைகள் மீள நிகழாததை தவிர்ப்பதற்காகவும் உலக தரங்களுக்கிணக்கமான உயர்தர மூன்றாந்தர கல்வியின் வழங்கலில் தனியார் துறை ஈடுபடுவதற்கு சாதகமான ஓர் சூழலை உருவாக்குவதற்கு சகல கல்வித் துறைகளில் தரப் படிநிலைகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட தர உத்தரவாத மற்றும் சான்றளிப்பு அதிகாரசபையை விரைவாக அமைப்பது அவசியமாகும்.

**வலுவிற்கு செலவினத்தை பிரதிபலிக்கும் விலையிடல் உபாயங்களை நோக்கிய நகர்வு என்பது அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகளின் நிதியியல் வாழ்திறனை உறுதிபடுத்துவது மட்டுமின்றி உற்பத்தி மற்றும் நுகர்வில் செயற்றினான பயனையும் ஊக்குவிக்கும்.** தற்போது, பெற்றோலிய மற்றும் மின்சார துறைகளில் நிர்வகிக்கப்பட்ட விலை உபாயங்கள் நடைமுறைபடுத்தப்பட்டாலும், உள்நாட்டு பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் மின்சார தீர்வைகள் என்பன பெரும்பாலான சந்தர்பங்களில் இந்த பயன்பாட்டுச் சேவைகளின் வழங்கலின் உண்மையான பொருளாதர செலவினத்தை பிரதிபலிக்காததனால், இது பொருளாதாரத்தில் அனுகூலங் குறைவான வள ஒதுக்கீட்டு தீர்மானங்களை விளைவிக்கிறது. உலகலாவிய சந்தைகளில் மசகெண்ணெய் உயர்ந்து செல்லும் காலப்பகுதியில் பெற்றோலியத்தின் நிர்வகிக்கப்பட்ட விலைகளை அதிகரிக்காவிட்டால், பெற்றோலிய உற்பத்திகளின் உண்மைச் செலவை பிரதிபலிக்கும் வகையில் நுகர்வோர் கேள்வி திருத்தப்படாத வேளையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பாரிய இழப்புக்களையீட்டும். வலு உருவாக்கம் தொடர்பில், அதிகரித்த வெப்ப வலு உருவாக்கமுடைய காலங்களில் உருவாக்கச் செலவை பிரதிப்பலிக்கும் வகையில் உள்நாட்டு மின்சாரத் தீர்வைகள் திருத்தப்படவில்லையென்றால் இலங்கை மின்சார சபையின் இழப்புக்கள் அதிகரிக்கும். இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபையின் நலிவடைந்து செல்லும் நிதியியல் செயலாற்றம் என்பது அதிகமான வங்கி கடன்பெறல்கள் மூலம் வங்கித்தொழில் துறையின் மீது எதிர்விளைவுகளை ஏற்படுத்துவதுடன் இது தேவைப்படும்போது பணவீக்கத்தை முகாமைத்துவஞ் செய்வதற்காக கொடுகடன் வளர்ச்சியை மட்டுப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் கொள்கை

சிறப்புக்குறிப்பு 01

## பெற்றோலிய விலைச் சீர்திருத்தங்கள்

### அறிமுகம்

வாழ்க்கைச் செலவு மற்றும் உற்பத்திச் செலவு அதேபோன்று ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றின் நேரடித் தாக்கத்தினால் பெற்றோலிய உற்பத்திகளுக்கான விலைச் சீர்திருத்தங்கள் இலங்கையில் நீண்ட கால கொள்கைப் பிரச்சனையாக இருந்து வருகிறது. சில்லறைச் சந்தை பங்கில் ஏறத்தாழ 86 சதவீதத்திற்கு வகைக்கூறும் உபாயமிக்கதும் முக்கியமானதுமான அரசிற்குச் சொந்தமான வணிக தொழில்முயற்சிகளானது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்றவற்றால் இலங்கை பெற்றோலியத் துறை ஆதிக்கம் செலுத்தப்படுகிறது. நாட்டின் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை வலுத் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கையானது இறக்குமதி செய்யப்படுகின்ற பெற்றோலிய தயாரிப்புக்களின் பெரும்வாரியாக தங்கியிருக்கிறது. மேலும், தேறிய எண்ணெய் இறக்குமதி செய்கின்ற சிறிய நாடான இலங்கை, உலக சந்தையில் விலையை ஏற்கும் நாடாக இருக்கிறது. உற்பத்திச் செலவு மீதான பெற்றோலிய விலைகளின் உயர் தாக்கத்தின் காரணமாகவும் அதன் மூலமான வாழ்கைச் செலவு, பெற்றோலிய விலை நிர்ணயம் செய்தல் போன்றன நாட்டில் அரசியல் ரீதியான ஒரு முக்கிய பிரச்சனையாக எப்போதும் இருந்து வருகிறது. எவ்வாறாயினும், எரிபொருள் சில்லறை விலையானது சீராக்கப்படாமை அவற்றின் செலவுகளில் பிரதிபலிப்பதற்கு, குறைந்துசெல்லுகின்ற நுகர்வோர் நலன், பேரண்ட பொருளாதாரச் சமமின்மைகளை உருவாக்குதல் மற்றும் பல சந்தர்ப்பங்கள் மீது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் நீடிப்பு பாரிய சவாலாக இருந்து வருகிறது. எரிபொருள் மானியங்களுடன் இணைந்த உயர் இறைச் செலவுகள், அரசாங்கத்தின் பாரிய எதிர்பார்க்கப்பட்ட பொறுப்புக்கள், கொடுப்பனவு சிக்கல்களின் நிலுவை மற்றும் மிகையான உயர் இறக்குமதி செலவுகள், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பாரிய கடன்களூடாக அரச வங்கிகளது ஐந்தொகை நலிவடைதல் மற்றும் அனுகூலம் குறைந்த வள ஒதுக்கீடு மற்றும் வினைத்திறனற்ற மானிய இலக்குகள் போன்றவற்றில் நிர்வகிக்கப்பட்ட விலையின் தாக்கம் செலுத்தாத செலவு விளைவாக இருந்து வருகிறது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் நோக்குடனும், எரிபொருள் மானியம் மீதான இறைச் செலவவைக் குறைக்கும் முகமாகவும் 2002 சனவரியில் அரசு கிரயத்தைப் பிரதிபலிக்கும் விலைச் சூத்திரத்தை நடைமுறைப்படுத்தியதோடு அது 2002 இலிருந்து 2003 காலப்பகுதியில் நடைமுறைக்கிருந்தது. 2004இல் மாற்றமடைந்த சந்தைச் சூழ்நிலைகளோடு ஒத்திசையும் முகமாக விலைச்சூத்திரம் மீளமைக்கப்பட்டதாயினும், அது பின்னரான காலத்தில் விலை நிர்ணயித்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை. இதனால், 2004 தொடக்கம் தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் முகாமைப்படுத்தப்பட்ட சில்லறை எரிபொருள் விலைகளைத் தேர்ந்ததுடன் அவை காலத்திற்குக் காலம் அரசினால் மறுசீராக்கப்பட்டன.

### இலங்கையில் பெற்றோலிய விலைகளில் ஊடுகடத்துகை

கடந்த தசாப்தத்தில் உளகளாவிய சந்தையில் எரிபொருள் விலைகள் பாரிய ஏற்றத்தாழ்விற்குள்ளான போதிலும் அதனைப் பிரதிபலிக்கக்கூடியவாறாக முகாமைப்படுத்தப்பட்ட விலைகள் உள்நாட்டுச் சந்தையில் சீராக்கப்படவில்லை. வரி அடங்கலான உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் இறக்குமதியாகும் உற்பத்திகளின் தொகுதி நிறையேற்றப்பட்ட சராசரிச் செலவான உற்பத்தியின் மொத்தச் செலவை உள்நாட்டு விலைகள் பிரதிபலிப்பினால் விலை ஊடுகடத்துகை முழுமையடையும். கொள்விலை, காப்புறுதி, சரக்கு அனுப்பல் செலவு, களஞ்சியத்திற்கும் மொத்த விநியோகத்திற்குமான முனைக்கோடிச் செலவு போக்குவரத்துச் செலவு, மாறுபடும் வெளிநாட்டுச்

உருவம் சி.கு. 1.1

உள்நாட்டு சில்லறை விலைகளுக்குள் பன்னாட்டு விலைகளின் ஊடுகடத்தல்




*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
றொய்ட்டர்ஸ்
இலங்கை மத்திய வங்கி

1

செலாவணி வீதச் செலவு, குறுங்கால நிதியிடல் செலவு மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுடைய மனித வள மற்றும் நிர்வாகச் செலவுகள் உள்ளடங்கியதே பெற்றோலியக் பொருட்களின் கிரயமாகக் கொள்ளப்படும். எனினும், உலகளாவிய சந்தையின் மசகெண்ணெய் விலைத் தளம்பல்கள் உள்நாட்டுச் சந்தைக்கு ஊடுகடத்தப்படுதலானது கடந்த காலத்தில் முழுமையடையாததாகவே காணப்பட்டதோடு, இந்த முழுமை இல்லாத ஊடுகடத்திலின் நன்மைகள் அல்லது நட்டங்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஐந்தொகையில் பிரதிபலிக்கவும் அனுமதிக்கப்பட்டது.

2011இலிருந்து 2014 வரையான காலப்பகுதியில், உலகளாவிய சந்தையில் பெற்றோலிய விலைகள் அதிகப்படியான உயர்வில் காணப்பட்டன. எனினும், இக்காலப்பகுதியில், அரசு மசகெண்ணெய் விலைகளை பூரணமான ஊடுகடத்தலிற்கு அனுமதிக்காமையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுடைய நிதிச் செயற்றிறனைச் சீரழித்ததோடு பாரிய நட்டங்களின் திரட்சிக்கும் வழிவகுத்தது. மாறாக, உலகளாவிய மசகெண்ணெய் விலை அசைவுகளிற்கேற்ப உள்நாட்டு விலைகள் சீராக்கப்படாமையின் காரணமாக குறைவடைந்த உலகளாவிய விலைகளின் பயனை இலங்கை நுகர்வோர் அடையமுடியவில்லை. உதாரணமாக 2008 நடுப்பகுதியிலிருந்து 2009 நடுப்பகுதிவரையான காலப்பகுதியிலும் செத்தெம்பர் 2014 இலிருந்து 2015 முடிவு வரையான காலப்பகுதியிலும் பன்னாட்டு பெற்றோலிய விலைகள் முறையே 44 சதவீதம் மற்றும் 51 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதிலும், இக்காலப்பகுதிகளில் உள்நாட்டு பெற்றோல் விலைகள் முறையே 24 சதவீதம் மற்றும் 25 சதவீதத்திற்கு மாத்திரமே கீழ் நோக்கிச் திருத்தம் செய்யப்பட்டன. மேலும், இதே காலப்பகுதிகளில், உலகளாவிய டீசல் விலைகள் முறையே 54 சதவீதம் மற்றும் 58 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதிலும் உள்நாட்டு டீசல் விலைகள் முறையே 36 சதவீதம் மற்றும் 19 சதவீதத்திற்கு மாத்திரமே குறைக்கப்பட்டன. பன்னாட்டு பெற்றோலிய விலைகள் உயர்வாக இருந்த காலப்பகுதிகளில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குத் ஒன்றுசேர்ந்த பாரிய நட்டத்தினால் உலகளாவிய மசகெண்ணெய் விலைகள் வீழ்ச்சியடைந்த போதிலும் அரசு முழுமையான விலை ஊடுகடத்தலை மேற்கொள்ள இயலாததாக இருந்தது. 2017 இறுதியில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினுடைய திரண்ட நட்டம் ரூ.217.3 பில்லியனாகக் காணப்படுகின்றது.

பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு மற்றும் பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளில் அமைப்பிலில்லாத நாடுகள் என்பன எண்ணெய் உற்பத்தியை மட்டுப்படுத்தியதன் காரணமாக 2016 பெப்புருவரியிலிருந்து உலகளாவிய எண்ணெய் விலையில் அதிகரித்த போக்குக் காணப்பட்டது. எனினும், 2017இன் ஆரம்பத்தில் மண்ணெண்ணெய் விலைகளின் குறைப்பு தவிர, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உள்நாட்டுச் சில்லறை எண்ணெய் விலைகள் 2015 வரை மாற்றமின்றிக் காணப்பட்டன. உள்நாட்டு பெற்றோலிய விலைகள் சீராக்கமே காரணமாக, உலகளாவிய எண்ணெய் விலைகளில் படிப்படியான அதிகரிப்பு இருந்தபோதிலும் அநேகமான நாடுகளுடன் ஒப்பிடுகையில், உள்ளூர் சில்லறை பெற்றோலிய விலைகள் தொடர்ந்தும் கணிசமானவு குறைவாகக் காணப்பட்டது.

உருவம் சி.கு. 1.2
உளகளாவிய சில்லறை விலைகளின் ஒப்பீடு - 2018 ஏப்பிறல் 09 அன்று




*மூலம் : globalpetrolprices.com*

## நிர்வகிக்கப்பட்ட எரிபொருள் விலைகளின் பொருளாதாரத் தாக்கங்கள்

நுகர்வோர் மானியங்கள் பொதுவாக முழுமையாக ஊடுகடத்தப்பட்ட விலை மற்றும் நிர்வகிக்கப்பட்ட விலையின்[1] வித்தியாசமாக நிர்ணயிக்கப்படுகின்றன. வழங்கல் செலவுகளின் கூட்டுத்தொகை, போக்குவரத்துச் செலவு, இலாப எல்லை மற்றும் வரி விதிப்பு

1 இலங்கையில் வரி முன்னரான உதவுத்தொகைகள் இல்லாத காரணத்தால் வாடிக்கையாளர் உதவுத்தொகைகளே வரிக்கு பின்னரான உதவுத்தொகைகளின் அளவீடாக காணப்படுகின்றன.

என்பவற்றை உள்ளடக்கிய முழுமையான ஊடுகடத்தப்பட்டவை உற்பத்தியின் மொத்த செலவாகும் . எந்தவொரு விலைச் சூத்திரம் இல்லாத நிலையில் விற்பனை வருவாய் மற்றும் மொத்த செலவுகளுக்கிடையிலான வித்தியாசமானது இலங்கையில் எரிபொருள் மானியங்களை மதிப்பிடுவதற்கான அடிப்படையை வழங்குகின்றது.

அட்டவணை சி.கு. 1.1

**2017இல் பெற்றோலிய உற்பத்திகளுக்கான மானியங்களின் மதிப்பீடுகள்**

| உற்பத்தி | விற்பனை வருவாய்[அ] (ரூ./லீட்டர்) | மொத்த செலவினம்[ஆ] (ரூ./லீட்டர்) | மானியம்[இ] (ரூ./லீட்டர்) | அளவு (மில்லியன் லீட்டர்கள்) | மொத்த மானியம் (ரூ.மில்லியன்) |
|---|---|---|---|---|---|
| பெற்றோல் 92 ஒக்டேன் | 113.00 | 126.41 | 13.41 | 1,210.2 | 16,234 |
| பெற்றோல் 95 ஒக்டேன் | 123.72 | 136.97 | 13.25 | 178.6 | 2,366 |
| ஒட்டோ டீசல் | 92.46 | 96.71 | 4.25 | 1,871.8 | 7,961 |
| சுப்பர் டீசல் | 106.75 | 104.23 | -2.52 | 88.4 | -223 |
| மின்சாரத்திற்கான ஒட்டோ டீசல் | 95.00 | 94.79 | -0.21 | 397.3 | -82 |
| மண்ணெண்ணெய் | 42.85 | 70.38 | 27.53 | 198.1 | 5,454 |

[அ] வணிகரின் இலாபம் நீங்கலாக விற்பவை வருவாய்
[ஆ] அரச வரிகள் உள்ளடங்களாக
[இ] '-' என்பது எதிர்மறையான மானியத்தை குறிப்பிடுகிறது

*மூலம் :* இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

குறிப்பாக, சுப்பர் டீசல் மற்றும் மின்சாரத்திற்கான ஒட்டோ டீசல் தவிர்ந்த மேற்கூறப்படட உற்பத்திகள் மானிய விலைகளில் விற்கப்பட்டன. மண்ணெண்ணெய் பாரியளவிலான மானியச் விலைகளைக் கொண்டுள்ளது. அதனைத் தொடர்ந்து பெற்றோல் மற்றும் டீசல் என்பன காணப்பட்டன. எவ்வாறாயினும் 2017ஆம் ஆண்டுப்பகுதியில் அதிகூடிய மானிய சுமையை பெற்றோலின் பாரியளவு விற்பனையின் மூலம் பங்களித்தது. மேலும், உயர்வடையும் இறைச் செலவினம், எரிபொருள் விலைகளின் முழுமையற்ற ஊடுகடத்தல் காரணமாக அதிக முன்னுரிமையிலான பொதுச் செலவினம், வளர்ச்சி மற்றும் வறுமைக் குறைப்பில் பாதகமான தாக்கத்தை வெளிச் செலுத்தியது. மேலும் உருவாக்கல் துறைக்கு பயன்படுத்தப்பட்ட எரிபொருள்

உருவம் சி.கு. 1.3

**வரிகளுக்கு முன்னரான இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் இலாபம் / இழப்பு**




*மூலம் :* Ceylon Petroleum Corporation

நிர்வகிக்கப்பட்ட விலைக்குட்படாததுடன் அதேவிலைக்கு மேற்கூறப்பட்ட மீட்சி மட்டத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்கப்படுகின்றது. 2017 காலப்பகுதியில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வலு உற்பத்தித் துறையிலிருந்து ரூ.19.2 பில்லியன் பெறுமதியான இலாபம் ஈட்டப்பட்டது. இது மின்சார உற்பத்தித் துறையின் குறுக்கு மானியம், அதிகரிக்கும் மின்சார உற்பத்திச் செலவு என்பன எரிபொருள் மானியத்தின் ஒரு பகுதியாகக் காட்டப்படும். உயர் மின்சார விலைகள் பொருளாதாரத்தின் போட்டித் தன்மையில் எதிர்மறைத்தாக்கத்தைக் கொண்டுள்ளது.

செலவு மீட்சி நிலைகளைக்காட்டிலும் குறைவாக இருத்தல், நிர்வகிக்கப்பட்ட விலைகளின் விளைவாக பெற்றோலிய மானியங்களுக்கு நிதியளிப்பதற்கான முறையான வரவு செலவுத்திட்ட ஒதுக்கு ஏற்பாடுகள் காணப்படுவதில்லை. அதன்படி பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது பல ஆண்டுகளாக அதிக நிதியிழப்புக்களை அறிக்கையிடுவதன் மூலமாக மானியச் செலவினங்களின் பகுதியை தாங்கிக் கொள்ள முடிகின்றது. இதன் விளைவாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இழப்புக்களை ஈடுசெய்யவும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யவும் வங்கியை நம்பியிருக்க வேண்டும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெருமளவு கடனை வாங்கும் போது அரச வங்கிகளின் மற்றும் கடன் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. இதன்படி, மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் செயற்பாடுகளைச் சிக்கலாக்குகின்றது. அதேநேரம், அரசாங்கத்தின் நிகழத்தக்க பொறுப்புக்களை அதிகரித்து

உருவம் சி.கு. 1.4

**சகல பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கு எதிராக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான வர்த்தக வங்கிக் கொடுகடனின் மாதாந்த மாற்றம்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடன்களை ஆதரவளிப்பதற்கு அரசாங்கமானது உத்தரவாதங்களை வழங்க வேண்டியுள்ளது.

உற்பத்தியின் உண்மையான கிரயத்தினைப் பிரதிபலிக்காத

விலையானது உற்பத்தி மற்றும் கேள்வி தொடர்பான உப உச்ச முடிவுகளிற்கு வழிவகுக்கும். உள்நாட்டு விலைகளானது உலகளாவிய விலைகளின் அதிகரிப்புக்கு ஏற்ப பிரதிபலிக்காமை பெற்றோலிய உற்பத்திக்கான கேள்வி அதற்கமைய சீராக்கப்படாவிடத்து இறக்குமதி செலவுகளில் மிகையான அதிகரிப்புக்கு வழிவகுத்து வெளிநாட்டுத்துறை சமநிலையின்மையினை உருவாக்கும். 2011, 2012 மற்றும் 2013 ஆகிய காலப்பகுதிகளில், பெற்றோலிய இறக்குமதியானது இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவில் 23 சதவீதத்திற்கு

உருவம் சி.கு. 1.5
பிறென்ட் மசகெண்ணெய் விலை மற்றும் இறக்குமதி உண்டியல்




*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்
இலங்கை ஐ.ஓ.சி. பி.எல்.சீ
இலங்கைச் சுங்கம்
புளூம்போர்க்
இலங்கை மத்திய வங்கி

அதிகமாக வகை கூறியதுடன் அதிகரித்த எண்ணெய் விலைகளுக்கு அதிகரிப்பினை ஏற்படுத்தக்கூடிய பொருளாதாரத்தின் வெளிவாரி பாதிப்புக்களைச் சுட்டிக்காட்டியது.

பல தோற்றம்பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் உள்நாட்டுச் சில்லறை விலைகளுக்கான பன்னாட்டு பெற்றோலிய விலைகளிலான மாற்றங்களினை முழுமையான எடுத்துச் செல்வதில்லை.[2] இத்தகைய சில்லறை விலைகளிலான சீராக்கமின்மையானது பெற்றோலிய வரி வருமானம் மற்றும் வரி ஏற்றத்தாழ்வுகளில் மிகவும் மோசமான விளைவுகளுக்கு வழிவகுக்கும். பொருளாதாரமொன்றின் எரிபொருள் வரிகள் ஒரு திறமையானது உயரளவிலான வரி ஏய்ப்பினை தவிர்க்கின்ற வகையில் ஒரு சமமானதுமான வரி வருமான மூலகமாகவுள்ளது. மேலும் நேரடி வரி அரசிறை சேகரிப்பு குறைவாகவுள்ள இலங்கை போன்ற நாடுகளில் எரிபொருள் வரியானது அரசாங்கத்தினால் வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்காக் பயன்படுத்தக்கூடிய ஒரு வினைத்திறனான மூலகமாக அமைகின்றது. மேலும், மீளப்புதுப்பிக்க முடியாத வலுமூலங்கள் குறிப்பாக புதைபடிவ எரிபொருட்களின் மிகையான பாவனையானது, உயர் செலவுடைய சூழல்சார் பாதிப்புக்களின்[3] பல்வகை ஒன்றினை ஏற்படுத்துகின்றன. பொருளாதாரப் பகுப்பாய்வு மற்றும் அனுபவ ரீதியான ஆதாரங்கள் இத்தகைய பிரச்சனைகளிற்குத் தீர்வு காண்பதற்காக ஒழுங்குபடுத்தல் அணுகுமுறையினை விட விலையிடல் கொள்கைகளானது மிகவும் செயற்றிறன் மிக்கதாக குறிப்பிடப்படுகின்றது.

## முன்னோக்கிப் பயணித்தல்

ஒரு விருப்பமான அணுகுமுறையாக நடைமுறைக்கிடப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளிற்கான நிர்வகிக்கப்பட்ட விலையிடல் முறைமையானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் உண்மைத்தன்மை பலயீனப்படும் வேளையில், பல எண்ணிக்கையிலான பேரண்டப பொருளாதாரப் பிரச்சனைகள் உருவாக்குகின்றது. ஆகவே, செலவினைப் பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் முறைமையினை மீளஅறிமுகப்படுத்தல் மற்றும் அந்தப் பொறிமுறைக்கு தொடர்ச்சியாக ஆதரவளித்தலானது நடைமுறையிலுள்ள பெற்றோலிய விலையிடல் முறைமையிலுள்ள வினைத்திறனற்ற தன்மையினைக் குறைக்கும். தன்னியக்கமான விலைச் சீராக்கப் பொறிமுறையினை நடைமுறைக்கிடலானது. பன்னாட்டு எரிபொருள் விலையிலான மாற்றங்களை உள்நாட்டுச் சில்லறை விலைகளிற்கு எடுத்துச்செல்வதற்கு வழிவகுப்பதுடன் வினைத்திறனற்ற விலை மானியங்களினைத் தவிர்த்து நிலையான எரிபொருள் வரி வருமானத்தின் உறுதித்தன்மையினையும் சுற்றுச் சூழலில் பாதகமான விளைவுகளினையும் குறைக்க வழிவகுக்கும். எவ்வாறாயினும் பெற்றோலிய உற்பத்திக்கான விலையிடல் சூத்திரமொன்றினை நடைமுறைகடகிடுவதில் பல எண்ணிக்கையான விடயங்கள் காணப்படுகின்றன பெட்ரிக்கோ (2001). பன்னாட்டு விலை மாற்றங்களிலான முழுமையான ஊடுகடத்தலானது குறிப்பாக பாரியளவிலான அதிர்வுகளை எதிர்நோக்குகின்ற வகையில் உப உச்ச முடிவாக அமையலாம். அரசாங்கம் அதிகளவான விலையேற்ற இறக்கத்தில் அக்கறை கொள்ளுதல் அல்லது பூரணமற்ற சந்தை காணப்படும் போது ஒரு தன்னியக்கமான விலையிடல் பொறிமுறையானது பன்னாட்டு விலையினைப் பிரதிபலிக்கும் வகையிலான காலப்போக்கிலான விலைச் சீராக்கங்கள் பொருத்தமாகவுள்ளன (ஊழயனலஇ நவ யட.இ 2012). இதன்படி, அரசாங்கம் நடுத்தரக் காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கான முழுமையான ஊடுகடத்தலினை உறுதிப்படுத்துகின்ற வேளையில் குறுங்காலத்திலிருந்து நீண்ட காலத்திற்கு விலையின் பகுதியளவான ஊடுகடத்தலினை உறுதிப்படுத்த முடியும். இது சராசரி அசைவு (கடந்த கால

2 ஊடுகடத்துகையானது செலவுகள் மற்றும் விலைக்கான இருப்புக்களை விபரிக்கின்றது. இதனால் ஊடுகடத்துகை விதமானது வரி நிகழ்வுகளை தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றது.

3 வலு விலைகளில் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய மூன்று மிகவும் முக்கியமான சூழலியல் காரணிகள் காபனீரொட்சைட் புகை, உள்நாட்டு வாயு மாசுகளிலான இறப்புக்கள் மற்றும் பெற்றோலிய வலு கொண்ட மோட்டார் வாகனங்களுடன் தொடர்புடைய வெளிவாரிகள்

உடனடி விலைகளின் சராசரி அசைவுகளினை அடிப்படையாகக் கொண்டு சில்லறை விலைகளினை அமைத்தல்), தூண்டுதல் விதிகள் (சில்லறை விலைகளானது உடனடி விலை மாற்றங்கள் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட தூண்டுதல் அளவினைவிட அதிகமாகக் காணப்படும் போது மட்டுமே மேம்படுத்தப்படும்). மற்றும், உச்சகுறை விதி (இந்த விதிமுறையானது பெற்றோலிய விலைகளின் உயர்ந்தபட்ச மற்றும் குறைந்தபட்ச வரம்புகளினைத் தீர்மானிக்கின்றது) போன்ற பல விலை சுமூக விதிகளினூடாக அடைய முடியும். எவ்வாறாயினும் (குநனசளைழ நவ யட 2001) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அரசாங்கம் விலை சமநிலைப்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து உருவாகும் குறுங்கால இறை இடர்நேர்வுகளிற்கான தீர்வுகளினைப் பெறுவதில் தயாராக இல்லை என்பது தொடர்பாக விபரித்தார். இது தொடர்பில் அரசாங்கம் விலை சமப்படுத்தலுடன் தொடர்புடைய குறுங்கால இறை இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக உருவாக்கப்பட்ட எண்ணெய் விலை உறுதிப்படுத்தல் நிதியமாகிய சுய காப்புறுதி முறைமையினைப் பயன்படுத்தலினைத் தெளிவாகக் கொண்டுள்ளது. இருப்பினும் பன்னாட்டு அனுபவங்கள் நன்கு திட்டமிடப்பட்டதும் விரைவான சீர்திருத்தங்களையுடையதுமான உறுதிப்படுத்தப்பட்ட வழிமுறைகள் அவசியமாகவுள்ள என பரிந்துரைக்கின்றன. இவ்வாறாக பன்னாட்டு நாணய நிதியம் 2017 வெற்றியினை உருவாக்குவதற்கான வேறுபட்ட நாடுகளின் அனுபவங்களிலிருந்து ஐந்து வகையான பரந்தளவில் கற்றுக்கொண்ட பாடங்களினை இனங்கண்டுள்ளன. அவையாவன, ஒருங்கிணைந்த சீர்திருத்தத்தினை உருவாக்குதல், அதிகளவில் பாதிக்கப்பட்டோரினைப் பாதுகாத்தல், பாரியளவான பொது ஆதரவினைக் கட்டியெழுப்புதல், பிரச்சனையின் மூலத்தினை ஆராயாமல் அதைத் தீர்க்கும் வழிவகைகளினை ஆராய்தல் மற்றும் பொருத்தமான சூழ்நிலைகளில் படிப்படியாக நகர்த்துதல். இவைகளே இலங்கையிலும் பின்பற்றப்படுகின்ற பிரதான பாடங்களாக உள்நாட்டு எரிபொருள் விலைக்கான செலவினைப் பிரதிபலிக்கும் வகையிலாக அமைகின்றன. செலவினை பிரதிபலிக்கக்கூடிய விலையிடல் முறையினை அமுல்படுத்தலானது மேலும் பல பயன்பாடுகளுக்கு விரிவுபடுத்த வேண்டியதுடன் தொடர்புடைய அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளின் நிதியியல் நம்பகத்தன்மையினை உறுதிப்படுத்துதல் அவசியமாகவுள்ளது.

வழிமுறைகளையும் செயல்வினையற்றதாக ஆக்கும். பொருத்தமற்ற விலையிடல் மூலம் எழும் வலுவிற்கான உயர்ந்த கேள்வி என்பது சென்மதி நிலுவை மீதும் செலாவணி வீதம் மீதும் அதிகரித்த அழுத்தத்தை விளைவிக்கும். மறுபக்கத்தில், உண்மைச் செலவினத்தை பிரதிபலிக்காத நிர்வகிக்கப்பட்ட விலைகள் மற்றும் தீர்வைகள் என்பன உலகளாவிய சந்தைகளில் குறைந்த வலு விலைகள் காணப்படும் காலப்பகுதிகளில் மற்றும் குறைந்த வலு உருவாக்கச் செலவுகள் கொண்ட காலப்பகுதிகளிலும் பாவனையாளர்களுக்கு இந்த நன்மைகளை பெறமுடியாமல் போகலாம். இது நாட்டின் போட்டித்தன்மையை பாதிப்படைய செய்யலாம் என்பதுடன் இதனால் வாழ்க்கைச் செலவு செயற்கையான முறையில் அதிகமாக காணப்படுவதுடன், வாழ்க்கைத் தரத்தை மேலும் மோசமாக்கலாம். மேலும், வலுவின் நிர்வகிக்கப்படும் விலைகளுக்கு திடீரான மற்றும் கூரிய திருத்தங்கள் என்பவற்றிலிருந்து எழும் நிலையின்மை நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்களின் தீர்மானங்களையும் எதிர்கணியமாக பாதிக்கும். ஆகவே, அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகளின் நிதியியல் வாழ்திறனை உறுதிபடுத்துவதற்கும் பொருளாதாரத்தில் அனுகூலமான வள ஒதுக்கீட்டை ஊக்குவிப்பதற்கும் உள்நாட்டு விலைத் திருத்தங்களுக்கு ஓர் குறிப்பிட்ட நேர இடைவெளிகளுடனான வலுத் துறையிற்கான செலவினத்தை பிரதிபலிக்கும் விலையிடல் உபாயங்களை நடைமுறைபடுத்துவதற்கு அவசர நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாகும். இதே வேளையில், இந்த அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகளின் நடைமுறைசார் செயற்திறமின்மைகளினால் ஏற்படும் இழப்புக்கள் விலைகள் மற்றும் தீர்வைகள் மூலம் நுகர்வோர் மீது செல்வாக்கு செலுத்தாத வகையில் இவற்றை தீர்ப்பது அவசியமாகும். மேலும், மின்வலுவிற்கான கேள்வியை மேலும் சிறப்பாக முகாமைத்தும் செய்வதற்கு குடியிருப்பாளர் நுகர்வோரிற்கு தற்போது கிடைக்கத்தக்கதாகவுள்ள பாவனை செய்யும் நேரத்தின் அடிப்படையிலான மாற்றமடையும் மின்வலுத் தீர்வைத் திட்டத்தை முன்மதியாக ஊக்குவிப்பது அவசியமாகும்.

**வாகன நெரிசலிலிருந்து எழும் பல எதிர்கணியமான வெளிவாரி விளைவுகளை மட்டுப்படுத்துவதற்கு செயற்திறனான மற்றும் சிக்கனமான வாகனப் போக்குவரத்து முகாமைத்துவ தீர்வுகளை அவசரமாக நடைமுறைபடுத்துவது அவசியமாகும்.** பிரதான நகரங்களில் அதிகரித்துச்செல்லும் வாகனங்களின் எண்ணிக்கைக்கு பதிலிறுத்தும் வகையில், தற்போதுள்ள வீதி மற்றும் நெடுஞ்சாலை வலையமைப்பை அரசாங்கம் தொடர்ந்தும் விரிவுபடுத்தி மேம்படுத்தியது. இருப்பினும், வாகன போக்குவரத்தில் காணப்பட்ட அதிகரிப்பு விரைவானதாக காணப்பட்டதுடன் இதில் பெருமளவானவை குறைந்த பயணிகளைக் கொண்ட வானங்களாக இருந்ததுடன், இது சூழல் சீர்கேடு மட்டத்தை அதிகரித்த வேளையில் அதிக வாகனபோக்குவரத்து நெரிசலை விளைவித்து நாட்டின் நேர மற்றும் நிதியியல் வளங்களின் விரயத்தை விளைவித்தது. ஓர் பொது போக்குவரத்து ஊடகமாக, பேருந்துக்கள் துரிதமற்று, நெரிசலான, அசௌகர்யமான மற்றும் சீரற்றவையாகக் காணப்பட்ட வேளையில், முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகைச் சிற்றூர்தி ஒப்பீட்டு ரீதியில் விலை உயர்வாகவுள்ளதுடன், இவை விபத்துக்களுக்கு சார்புடையவையாகவும் உச்ச

1

நேரங்களில் கிடைப்பதுமில்லை. இதேவேளையில், தனியார் பேருந்து கைத்தொழிலின் அமைப்பானது வழங்கப்படும் சேவைகளின் தரத்தில் மேம்பாடில்லாமல் ஓர் நலக்கேடான போட்டியை விளைவித்துள்ளது. இத்துடன், அதிகளவிலான வீதி ஒழுங்குவிதிகளின் மீறல்கள், வாகன ஓட்டுதலில் ஒழுங்கற்றத்தன்மை மற்றும் வீதிகளின் சீர்குலைவான கட்டுமானப் பணிகள் என்பனவும் உயர்ந்த வாகன போக்குவரத்து நெரிசலிற்கு பங்களிக்கும் ஏனைய காரணிகளாகும். ஆகவே, மாநகர அபிவிருத்தி திட்டத்தில் எதிர்நோக்கப்படுவது போன்ற நயநுட்பம்வாய்ந்த புகையிரத ஊடுகடப்பு முறைமையை நடைமுறைபடுத்தும் அதே வேளையில், தற்போதைய போக்குவரத்தின் அதிகரிப்பின் மூல காரணங்களை இலக்கிடும் வகையிலான விரைவாக மற்றும் செலவு சிக்கனமாக நடைமுறைபடுத்தக்கூடிய தீர்வுகளை அரசாங்கம் ஆராயவேண்டும். சாதாரணமாக கருதப்படும் வீதி ஒழுங்குகளை மீறி வாகனங்களை ஓட்டும் கலாச்சாரத்தின் அதைரியப்படுத்தும் கடுமையான விழிப்புணர்வு பிரசாரங்கள், பாகுபாடின்றிய கண்காணிப்பு மற்றும் செயலாக்கத்திற்கு பரந்தவொரு சிசிடீவி கமெரா வலையமைப்பின் நடைமுறைபடுத்தல், முதலாந்தர மற்றும் இரண்டாந்தர பாடசாலை மட்டங்களில் வீதி ஒழுங்குமுறை பற்றிய பாடத்திட்டங்களை உள்ளடக்கல், முச்சக்கர வண்டிக் கைத்தொழிலை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கைத்தொழில் நிபுணர்களால் விவாதிக்கப்படும் அதிகவேக பேருந்து ஊடுகடப்பு முறைமையாக கொழும்பு தலைநகர பேருந்து வரையமைப்பை மீள்அமைப்பது என்பவை உள்ளடங்கும்.

**வெளிநாட்டுத் துறையின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பன்முகப்படுத்தலின் ஊடாக ஏற்றுமதிகளை விரிவாக்குவது அதியுச்ச முன்னுரிமையாகும். இலங்கை 1978இல் இருந்து தொடர்ச்சியாக வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் பற்றாக்குறையை அனுபவித்து வந்ததுள்ளதுடன் இது பெருமளவில் வெளிநாட்டு கடன்பாடுகள் ஊடாக நிதியிடப்பட்டுள்ளன.** வெளிநாட்டுத் துறையின் சமமின்மை இத்தகைய பிரச்சனைகளைக் குறுங்கால மற்றும் நடுத்தர கால நோக்கில் தீர்ப்பதற்குப் பன்னாட்டு நாணய நிதியம் போன்ற முகவர்களது வெளிநாட்டில் நாடு தங்கியிருப்பதற்கு வழிகோலியது. கடனினை உருவாக்கக்கூடிய வெளிநாட்டு உட்பாய்ச்சலின் நடைமுறைக்கும் பற்றாக்குறைக்கும் குறுங்காலத்தில் நிதியிடுவதற்கு பணியாற்றியதனாலும் இது தெளிவாக நிலைத்திருக்க முடியாதது. பணிகள் ஏற்றுமதியால் ஆதரவளிக்கப்பட்ட ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தயாரிப்புத் துறையினை அபிவிருத்தி செய்வது நீண்டகால தீர்வினைத் தோற்றுவிக்கும். அபிவிருத்தி கொள்கைகள் வியாபாரச் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளைச் சீரமைத்தல், ஏற்றுமதிகளை நோக்காகக் கொண்ட தயாரிப்புச் செயற்பாடுகளில் தனியார் துறை முயற்சிகளை ஊக்குவித்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளை ஊக்குவித்தல், பிராந்திய மற்றும் உலகளாவிய பெறுமதி சங்கிலியினைத் திறந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களினை பயன்படுத்திக்கொள்ளுதல் போன்றவற்றின் ஊடாக புதிய கைத்தொழில்களை ஊக்குவிப்பதனையும் உறுதியான பேரண்டப் பொருளாதார நிலைப்பாடுகளை உறுதிப்படுத்துவதனை இலங்கை கொண்டிருக்கவேண்டும். இந்து சமுத்திரத்தில் அறிவினையும் பணிகளையும் அடிப்படையாகக் கொண்ட பொருளாதார மையமாக நாடு வளர்வதற்கான உள்ளார்ந்த ஆற்றலினை நாடு கொண்டிருப்பதனால் உள்நாட்டு உற்பத்தி மற்றும் வர்த்தக செயல்நிறைவேற்றத்தினை மேம்படுத்துவதற்கென இலங்கைக்கான ஒரு புதிய வர்த்தக கொள்கை கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ள வேளையில் இலங்கைக்கானதொரு புதிய தேசிய ஏற்றுமதி உபாயமும் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதியை அபிவிருத்தி செய்து கொள்வதற்காக ஆறு மையத்துறைகளையும் நான்கு வர்த்தக ஆதரவு செயற்பாடுகளையும் இது அடையாளம் கண்டுள்ளது. இதேவேளை கைத்தொழில் வலயங்களில் கவனம் செலுத்துதல் நாடு பூராகவும் உற்பத்தித்திறனின் மேம்பாட்டுடன் ஏற்றுமதிகளை அபிவிருத்தி செய்வதில் முக்கியமானதொரு உள்ளடக்கமாகயிருக்கும். எனினும், முன்மொழியப்பட்டுள்ள ஏற்றுமதி செய்யக்கூடிய வெளியீடுகளுடன் இணைந்து பன்னாட்டுச் சந்தை நுழைவும் வளரவேண்டும். இதன்படி, பன்னாட்டுச் சந்தை நுழைவினை மேம்படுத்துவதற்காக புதிய வர்த்தக உடன்படிக்கைகளில் புகுந்துகொள்வதற்கான செய்முறையில் இலங்கை தற்போதுள்ளது. 2017 சிங்கப்பூருடன் ஒரு அனைத்தையும் உள்ளடக்கிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இலங்கை புகுந்து கொண்டதுடன் இதேபோன்ற உடன்படிக்கைகள் பற்றி இந்தியாவுடனும் சீனாவுடன் கலந்தாலோசித்து வருகின்றது. இத்தகைய உடன்படிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டதும் இந்தியா சீனா இரண்டுடனும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை கொண்டுள்ள சிறிய எண்ணிக்கையிலான நாடுகளின் ஒன்றாக இலங்கை இருக்கும். இந்த பாரிய மற்றும் உயர்வான வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரங்களுடன் இருபுடை நுழைவும் அதேநேரம் ஐரோப்பாவின் பொதுவாக்கப்பட்ட முன்னுரிமை முறைமை (ஜி.எஸ்.பி+) வசதியின் நுழைவும் எந்தவொரு நாடும் இல்லை. எனினும், வியாபார சமூர்த்தியினது கரிசணைகளை அறிந்துகொள்வதன் மூலமும் பேரம்பேசல் செயன்முறையில் வெளிப்படைத் தன்மையை பேணிக்கொள்வதற்கும் உள்நாட்டு ஆர்வலர்களுடன் தொடர்ச்சியாக உரையாடுவது இத்தகைய உபாயங்களின் வெற்றியினை உறுதிசெய்வதில் முக்கியதொரு கூறாகும். புதிய வர்த்தக உடன்படிக்கைகளின் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்படும் அமைப்பியல் மாற்றங்களின் விளைவான பாதகமான தாக்கங்களை ஏதாவது இருந்தால் குறைத்துக்கொள்வதற்கான வர்த்தக சீரமைப்பு பொதிகளும் இன்றியமையாதவை. மேலும், எதிர்முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு நியாயமற்ற நடைமுறைகளிலிருந்து பாதுகாப்பினை வழங்குகின்ற தேவையற்ற இறக்குமதிகள் குவிக்கப்படுவதனை தடுப்பதற்கான

சட்டவாக்கங்களையும் இலங்கை இயற்றியுள்ளது. மிகை இறக்குமதி எதிராக தாபிப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் நடைமுறைக்கிடப்பட்டுள்ளன. எனவே, முன்னோக்கிச் செல்கையில் நாட்டின் நன்மைக்காக வெளிநாட்டுத் துறையின் சாதகமான நீண்டகால பெறுபேறுகளுக்கும் வழிநடத்துவதற்கும் இத்தகைய உடன்படிக்கைகளிலிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள சந்தர்ப்பங்கள் மற்றும் வழிமுறைகள் பற்றி உள்நாட்டு உற்பத்தியாளர்கள் அறிவுபுகட்டப்படவேண்டும்

**2017இல் இலங்கை ஐ.அ.டொலர் 1.9 பில்லியனுக்கு மேலான வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களை கவர்ந்துகொள்வதில் வெற்றியடைந்த போதிலும் அதன் பிராந்தியத்திலுள்ள சவால்களுடன் ஒப்பிடுமிடத்து நாட்டின் வெளிநாட்டு நேரடி உட்பாய்ச்சல்கள் கணிசமானளவு தாழ்ந்ததாகவே இருக்கின்றன.** 2017இல் முக்கியமாக மேம்பாடு அடைந்துவரும் பேரண்டப் பொருளாதார சூழல் மற்றும் சாதகமான முதலீட்டாளர்கள் மனப்பாங்குகளின் காரணமாக இலங்கை வரலாற்றிலேயே அதிஉயர்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களினை அடைந்துகொண்டது. எனினும், விடாப்பிடியான உயர்ந்த வரவுசெலவுத்திட்ட மற்றும் வெளிநாட்டு நடைமுறைக்கணக்கு பற்றாக்குறைகளுடன் இரட்டைப் பற்றாக்குறை நாடாகயிருக்கும் இலங்கை காலம்காலமாக இத்தகைய பற்றாக்குறைகளை நிதியிட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்பாடுகளில் தங்கியிருக்கிறது. இதேவேளை வெளிநாட்டுப் படுகடனின் எதிர்கால மீள்செலுத்தல்களின் தொகுதியான முதிர்ச்சி மற்றும் இலங்கை உயர்நடுத்தர நாடொன்றாக நிலைமாற்றம்பெறுவதுடன் சலுகை அடிப்படையிலான நிதியிடலின் வரையறுக்கப்பட்ட கிடைப்பனவு போன்றவை சென்மதி நிலுவை பற்றாக்குறைக்கு தொடர்ச்சியாக வெளிநாட்டுக் கடன் மூலம் நிதியிடல் தொடர்பிலான கரிசணைகளை எழுப்பியுள்ளன. இதற்கு மேலதிகமாக உயர்வடைந்து செல்லும் உலக வட்டிவீதங்களுக்கு மத்தியில் குறிப்பாக அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தணையில் இருந்து சாத்தியமான மூலதனப் பாய்ச்சல்களினால் பாதிப்படையக்கூடியதாக இருக்கின்றது. இந்தவகையில் இத்தகைய நிதியியல் பாய்ச்சல்கள் நிதிகளுக்கான நீண்டகால மூலங்களாகவும் அதன் மூலம் வெளிநாட்டுத் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு ஆதரவளிப்பதனாலும் கடனை உருவாக்காத வெளிநாட்டு நேரடி முதலீட்டு வடிவிலான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை கவர்ந்து கொள்வது அவசியமானது. இதற்கு மேலதிகமாக வெளிநாட்டு நேரடி முதலீடு, சேமிப்பு - முதலீட்டு இடைவெளியை நிரப்புவது மட்டுமன்றி அதனுடன் தொடர்புபட்ட தொழில்நுட்ப முகாமைத்துவ நடைமுறைகளின் பாய்ச்சல் மற்றும் பன்னாட்டு சந்தைகளுக்கான நுழைவு போன்றவற்றுடன் பொருளாதார அபிவிருத்திக்கானதொரு பெரும் உந்துசக்தியாயிருக்கின்றது. எனவே, நாடு அதன் முதலீட்டுக்கொள்கைக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்திக்கொள்கின்ற வேளையில், குறிப்பாக வர்த்தக மற்றும் கைத்தொழில் போன்ற அரசின் ஏனைய அபிவிருத்தி கொள்கைகள் மற்றும் உபாயங்களுடன் முதலீட்டுக் கொள்கையை பொருந்தும்படி செய்வதற்கான தேவையுள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கொள்கையினைக் கவர்ந்து கொள்வதற்கு முன்தேவைப்பாடொன்றான கொள்கை மாறாமையை உறுதிப்படுத்துவதற்கு இந்தக்கொள்கையை அமுல்செய்வதிலும் முகவராண்மைக்கிடையிலான கூட்டிணைவு சமஅளவு முக்கியத்துவம் வாய்ந்தது.

**நடைமுறைக்கணக்கு பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கு மத்திய கிழக்கிலிருந்து தொழிலாளர் பணவலுப்பல்களில் மிகையாக தங்கியிருப்பது மாற்றியமைக்கப்பட வேண்டும்.** வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்கான நாட்டில் இருந்தான வருடாந்த புறப்பாடுகளில் 90 சதவீதத்திற்கு மேலாகவும் மொத்த பணவலுப்பல்களின் பெறுகைகளில் அரைவாசிக்கு மேலதிகமாக மத்திய கிழக்கு பிராந்தியம் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களது முதனிலைச் சந்தையாக தொடர்ந்தும் இருக்கிறது. தாழ்ந்த எண்ணெய் விலை மற்றும் பிராந்தியத்தில் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துவரும் அமைதியின்மை போன்றவற்றினால் மத்திய கிழக்கிற்கான தொழிலாளர் புலம்பெயர்வில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சி அவதானிக்கப்பட்டு உள்முக பணவனுப்புதலிலிருந்தான வருவாய்களை தளர்வடையச் செய்திருக்கின்றன. இலங்கையின் கடந்த சில ஆண்டுகளாக அனுபவிக்கப்பட்ட மெதுவடைதலை ஒத்ததாக சில பிராந்திய பொருளதாரங்களான இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேசம் போன்றவற்றையும் தொழிலாளர் பணவனுப்பல்களின் வீழ்ச்சிகளைச் சான்றுகூறியுள்ளன. ஆதலால் பணவனுப்பல்களின் பிரதான மூலமாக மத்திய கிழக்கில் இருந்து தேர்ச்சியற்ற வீட்டுப் பணிப்பெண்களிடமிருந்தான அனுப்பல்கள் காணப்படுமாயின் தொழிலாளர் பணவனுப்பல்களின் ஒரு தொடர்ச்சியான வளர்ச்சியை இலங்கை எதிர்பார்க்க முடியாது. மத்திய கிழக்குப் பிரதேசத்தில் இருந்து பணவனுப்பல்களின் வீழ்ச்சியுடன் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களை தேர்ச்சியற்ற மற்றும் வீட்டுப்பணிப்பெண் வகையிலிருந்து பகுதியளவில் தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சிமட்டங்களுக்கு மாற்ற வேண்டிய அதிகரித்த தேவைப்பாடு காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக புதிய தொழிலாளர் சந்தைகளைத் தேடி மாற்றுச் சேரிடங்களை கண்டுபிடித்தல் மற்றும் ஏனைய அபிவிருத்தியடைந்த ஆசிய மற்றும் ஐரோப்பிய பொருளதாரங்களுடன் இருபுடை உடன்படிக்கைகளில் புகுந்து செயலாற்றத்திற்கான தேவையுள்ளது. தனியொரு பிராந்தியத்தில் இருந்து இலங்கையின் வெளிநாட்டு பணவனுப்பல்கள் உருவாக்கப்படுவதனால் உருவான பாதிப்படையக்கூடிய தன்மையை இது குறைக்கும். பன்னாட்டு நியமங்களுக்கு அமைய மொழி மற்றும் தொழிற்பயிற்சிகளை வழங்குவதனூடாக புலம்பெயர் தொழிலாளர்களின் திறமை முன்னேற்றகரமாக திறன் அபிவிருத்தியின் முதலீட்டு செய்வது தொழிற்சந்தை பன்னாட்டு கேள்வி மற்றும் இலங்கையின் வழங்கல்

திறமைகளுக்கிடையிலான பொருந்தாத தன்மைக்கான தீர்வாக இருப்பதுடன் உயர்ந்த வருவாய்களுடன் தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதிலும் பயனளிக்கும். எனினும் தேர்ச்சிபெற்ற தொழிலாளர் மற்றும் தொழில்வல்லுநர்களின் புலம்பெயர்வு குடும்பமும் பின்தொடர்கின்ற இணைக்கப்பட்ட புலம்பெயர்வுடன் பெருமளவில் தொடர்புபட்டு சேரும் நாடுகளில் நிரந்தரக் குடியமர்வுகளிற்கு வழிவகுப்பதனையும் அவதானிக்கமுடிகிறது. அதன்விளைவாக இலங்கையுடனான பலவீனமான இணைப்புக்கள், வெளிநாட்டு செலாவணி பணவனுப்புதல்களை மட்டுப்படுத்துவதுடன் மூளை வெளியேற்றத்தினையும் உருவாக்கும். இதேவேளை, இலங்கையிலுள்ள வெளிநாட்டு தொழிலாளர்களது எண்ணிக்கையும் உயர்வடைந்து செல்வதனைக் காணக்கூடியதாகவிருப்பது அண்மைய எதிர்காலத்தில் வெளிநாட்டு பணவலுப்புதல்களில் வெளிப்பாய்ச்சல் அதிகரிப்பதனையும் சென்மதி நிலுவையில் இரண்டாம்தர வருவாய் கணக்கின் மிகை குறைவடைவதையும் சமிக்சை காட்டுகின்றது. இப்பின்னணியில், உள்நோக்கிய தொழிலாளர் பணவனுப்புதல்களை உச்சப்படுத்துவதற்கான பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்கின்ற வேலையில் வெளிநாட்டு நடைமுறைகளை கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியிடுவதற்கானதொரு முக்கிய வெளிநாட்டு செலாவணி உழைப்பாளர்களாக பணவனுப்பல்களில் மாத்திரம் கவனத்திற்கொள்ள வேண்டும். எனவே வெளிநாட்டு நேரடி முதலீடு போன்ற கடனை உருவாக்காத உட்பாய்ச்சல்களை வெல்வதற்காக முன்னுரிமையளிக்கப்படவேண்டியிருப பதுடன், நீண்ட காலத்தில் மிகவும் நிலைத்திருக்கும் வெளிநாட்டு செலாவணி பாய்ச்சல்களை உருவாக்கும் நோக்கில் அத்தகைய நிதிகளை ஏற்றுமதியை நோக்கிய தொழில்முயற்சிகளில் திசைதிருப்ப வேண்டும். மத்திய கிழக்கில் தற்காலிக புலம்பெயர்வில் ஏதாவது குறைவுக் காணப்பட்டால் உயர்ந்த பெறுமதியுடைய தொழில்களில் உள்நாட்டில் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொழிலாளர்களை இந்ததொழில்முயற்சிகள் உள்ளீர்த்துக்கொள்ள முடியும்.

**வரிச் சீர்திருத்தங்களின் ஊடாக அரசிறையை அதிகரிப்பதற்கென கடப்பாடு விளைவுகளை பெற்றுத்தந்துள்ள வேளையில், வரி ஏய்ப்பாளர்களை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடாக வரி வலைக்குள் கொண்டுவருவதற்கு வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதனை நேர்வரி இறையை உயர்த்துவதற்கும் இன்னமும் இடமிருக்கின்றது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நேர்வரியினைக் குறைவடைவதற்கு தனிநபர்களினதும் நிறுவனங்களினதும் வரிஏய்ப்பு பிரதான காரணிகளின் ஒன்றாக காணப்படுகின்றது. வரிபொறுப்புக்களைக் குறைத்துக்கொள்வதற்காக வரி ஏய்ப்பாளர்கள் வரிஅதிகாரியொருவருக்கு வேண்டுமென்றே தமது உண்மையான தேறிய மதிப்பினைக் குறைவாக அறிக்கையிட்டு அல்லது அறிக்கையிடாமல் விடுகின்றனர். வரிஏய்ப்பினை தீர்ப்பதற்கான வினைத்திறனான முறையாக உயர்பெறுமதியுடைய நுகர்வினால் உந்தப்படும் கொடுக்கல்வாங்கல்களை கவனமாக கண்காணிப்பதாகும். இது வருவாய் வெளிப்படுத்தல்களுடன் சொகுசு கார் விற்பனை மற்றும் ஆவண விற்பனை போன்ற உயர்பெறுமதி கொண்ட கொடுக்கல்வாங்கல்களிலிந்து வெளிப்பட்ட தரவுகளை ஒப்பீட்டு பார்ப்பதனை வேண்டிநிற்கின்றது. உண்ணாடட்ரசிறைத் திணைக்களம் இத்தகைய பரிசிப்புக்களை மேற்கொண்ட போதிலும் பகுதியளவில் தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகளுடன் பின்பற்றிய போதிலும் தொடர்புபட்ட நிறுவனங்களை வழிமுறையுடன் இணைக்கின்ற ஒரு அனைத்தையும் உள்ளடக்கிய இலத்திரனியல் முறைமை வரிஏய்ப்பினை எதிரிடுவதற்கு அத்தியாவசியமானது. அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் அறிமுகம் உள்ளடங்கலாக அண்மையில் வரிநிருவாகத்தினை மேம்படுத்துவதற்கான ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு வரிசீர்திருத்தங்களுடன் இத்தகைய தன்னியக்க செய்முறை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வினைத்திறனான வரி ஒத்திசைவிற்காக மத்திய வங்கி, உரிமம் பெற்ற வங்கிகள், இலங்கைச் சுங்கம், மோட்டார் வாகனப் பதிவாளர், கூட்டுதான முகாமைத்துவ அதிகார சபை, கொழும்பு பங்குப் பரிவர்தனை மற்றும் காணி பதிவகம் உள்ளடங்கலாக 20 ஏனைய வெளியக நிறுவனங்களுடன் முறைமையை இணைப்பது அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் முழு அமுலாக்கத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. பெருமளவு வேண்டப்படுகின்ற இந்த முறைமையினை அமுல்படுத்துவதற்குத் தொடர்ந்து இருக்கின்ற உட்கட்டமைப்பு மற்றும் மனிதவள சிக்கல்களைத் தீர்ப்பது வரிஏய்ப்பினை செயற்திறனாக கையாளுவதற்கும் உயர்பெறுமதியுடைய பொருளாதார செயற்பாட்டின் வளர்ச்சிக்கும் வீழ்ச்சியடைந்து செல்லும் மொ.உ.உற்பத்தியிலான நேர்வரியரசிறை விகிதத்திற்கு இடையிலான பொருத்தப்பாடுயின்மையை தீர்ப்பதற்கு அதிகாரிகளுக்கு இயலச் செய்யும்.

**முதிர்ச்சியடையும் வெளிநாட்டு நாணய படுகடன்களுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளை முகாமை செய்வதற்குப் பொறுப்பு முகாமைத்துவ செயற்பாடுகளின் விரிவான அமுலாக்கம் தவிர்க்க முடியாததாகின்றது.** 2000ஆம் ஆண்டுகளில் பிற்பகுதியில் நாடு நடுத்தர வருமான மட்டத்திற்கு முன்னேற்றமடைந்ததை அடுத்து வெளிநாட்டுக் கொடை மற்றும் சலுகை அடிப்படையிலான கடன்களின் கிடைப்பனவு வீழ்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மற்றும் வரவுசெலவு திட்ட பற்றாக்குறைகளுக்கு நிதியிடுவதற்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் போன்ற வர்த்தக கடன்களை உலக மூலதனச் சந்தையில் இருந்து அரசாங்கம் திரட்டவேண்டியதனை தேவைப்படுத்துகின்றது. அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைதிரட்சியை அமுல்படுத்துவதற்கான அரசின் தற்போதையக் கடப்பாடு நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் படுகடன் மட்டத்தினை நிலைநிறுத்துகின்ற மட்டமொன்றில் மட்டுப்படுத்துவதற்கு

பங்களிப்புச் செய்யும் வேளையில் படுகடன் மீள்செலுத்தல்களின் குறுங்கால தொகுதியான முதிர்ச்சி மற்றும் படுகடன் பட்டியலில் மீள்நிதியிடல் இடர்நேர்வுகளை தணித்துக்கொள்வது இன்றியமையாதது. திரும்ப கொள்வனவு செய்யும் தெரிவுகள், நிலைமாற்றங்கள், முன்கூட்டி நிதியிடல் ஒழுங்குகள் போன்ற பொறிமுறைகள் ஊடாக தற்போதுள்ள படுகடன் இருப்புக்களை மீள்கட்டமைப்பு செய்வதன் மூலம் எதிர்படுகடன் பனிக்கொடுப்பனவுகளை சுமூகமாக்கிக் கொள்ளும் நோக்கில் பொறுப்பு முகாமைத்துவ பிரயோகங்களை அமுல்படுத்துவதற்கு தேவையான சட்டக் கட்டமைப்பினை அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட தீவிர பொறுப்பு முகாமைத்துவச் சட்டம் வழங்குகின்றது. பொறுப்பு முகாமைத்துவ கட்டமைப்பினை வெற்றிகரமாக அமுல்படுத்துவது தொடர்ந்துவரும் காலங்களில் நாட்டின் வெளிநாட்டு பாதிப்படையக்கூடிய தன்மையினைக் குறைக்கும். 2019- 23 வரை வெளிநாட்டுப் படுகடன்களின் தொகுதியான முதிர்ச்சி தொடர்புடைய சுழற்சி இடர்நேர்வினை குறைத்துக்கொள்வதற்கு ஒரு அனைத்தையும் உள்ளடக்கிய முகாமைத்துவ உபாயத்தினை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

**முன்மொழியப்பட்டுள்ள நெகிழ்ச்சியான பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் வெற்றிக்கும் நிலைத்திருக்கும் தன்மைக்கும் முன்மொழியப்பட்டுள்ள இறைதிரட்சி பாதையினை கடுமையாக பின்பற்றுவதன் ஊடாக இறை ஒழுக்காற்றிக்கான அரசாங்கத்தின் கடப்பாடு மிக பிரதானமாகும்.** கடந்த பல தசாப்தங்களாக இலங்கை உயர் இறை பற்றாக்குறையுடன் அரச படுகடனின் பெருஞ்சுமையுடன் நிலைத்திருக்குமாயிருந்தது. உயர்ந்த இறை பற்றாக்குறைகளும் அரசபடுகடனும் பணவீக்கத்தினை கட்டுப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் இயலுமைக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் என்பதால் இறையின் நிலைத்திருக்கும் தன்மை அடையப்படும் வரை இறைதிரட்சி தொடரவேண்டியது அவசியம். விரிவான இறைக்கொள்கை பணவீக்க அழுத்தங்களை தூண்டுவது தவிர்க்க முடியாது. இது வட்டிவீதங்களிலும் நாணயத்திலும் அழுத்தங்களை உருவாக்குகின்றது. இதற்கு மேலதிகமாக பற்றாக்குறைக்கு நிதியிடுவது உள்நாட்டு சந்தைகளில் அரசின் அதிக தங்கியிருத்தல் உற்பத்தித் திறன் வாய்ந்ததும் செயற்றிறனுமான தனியார் முதலீட்டினை ‘ நெருங்குகின்ற நிலைக்கு’ விட்டுச் செல்லக்கூடும் என்பதனால் ஒரு கரிசனைக்குரியதாகும். இது நடுத்தர மற்றும் நீண்ட காலத்தின் பொருளாதார வளர்ச்சியின் எதிர்க்கணியமாக தாக்கம் செலுத்தும். குறிப்பாக ஒரு பணவீக்க இலக்கிடல் முறைமையின் கீழ் பணக்கலுக்கெதிராக தீவிரமாக போராடுகின்ற நாணய அதிகாரங்களின் கடுமையான கடப்பாட்டிற்கு மாறாக நாணயம் மற்றும இறை அதிகாரங்களுக்கிடையில் கடப்பாடும் கூட்டிணைவும் இருந்தால் ஒழிய பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடும் நிலைத்திருக்கும் வளர்ச்சியும் அறியப்படமுடியாது. எனவே புதிய நாணயக்கொள்கை முறைமையின் வெற்றிகரமாக நிலைமாற்றத்திற்கு மாத்திரமன்றி நடுத்தரம் மற்றும் நீண்ட காலத்தில் பொருளாதார முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கும் இறையின் நிலைத்திருக்கும் தன்மை மிக பிரதானமாகும்.

**இலங்கையின் நிதியியல் துறை காலம்தோறும் கணிசமானளவு முன்னேற்றம் கண்டுள்ளபோதும் சாதனங்களினது உள்ளடக்கத்தின் நியதிகளில் இதன் ஆழமற்றதன்மை நாட்டின் முழு மொத்த பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு முட்டுக்கட்டையாக இருக்கின்றது.** குறிப்பாக உள்நாட்டு கலவரத்தின் முடிவில் இருந்து துறையின் சொந்தச் சொத்துக்களிலானதொரு வளர்ச்சியினால் பிரதிபலிக்கப்பட்டவாறான நிதியியல் துறையின் விரிவாக்கம் குறிப்பிடத்தக்கதாகவுள்ளது. இந்தகாலப்பகுதியில் நிதியியல் துறையின் மொத்தச் சொத்துக்கள் மூன்று மடங்கிற்கு மேலாக அதிகரிப்பதுடன் கிளை வலையமைப்பு மற்றும் தன்னியக்க கூற்றுப்பொறி என்பவற்றின் நியதிகளில் அதன் பரம்பல் முத்திரை பதிப்பதாகவிருந்து நிதியியல் உள்ளடக்கத்தினை விரிவாக்கியுள்ளது. நிதியியல் நிறுவனங்கள் தமது நாளாந்த சாதனைகளிலும் பணிகளிலும் புத்தாக்கத்தினையும் புதிய தொழில்நுட்பத்தினையும் தொடர்ந்து கொண்டுவருகின்ற போதிலும் புதிய நிதியியல் சாதனங்களானது அறிமுகம் மூலம் நிதியியல் சந்தையினை ஆளப்படுத்துவதற்கான அவற்றின் முன்னேற்றம் குறிப்பிடத்தக்களவில் மந்தமாகவே இருந்துவந்துள்ளது. இடர்நேர்விற்கான காப்பு ஏற்பாடாக நிதியியல் பெறுமதிகளும் பெறுதிகள் சார்ந்த கருவிகளும் சாதனங்களாக ஒரு சில வங்கிகளில் மாத்திரமே கிடைக்கக்கூடியதாகவிருக்கின்றது. காப்புறுதிச் சாதனங்கள், குறிப்பாக முறைபாற்றுத் திட்டங்களில் இத்தகைய திட்டங்கள் நெகிழ்வற்றதாகவும் குறைந்தளவு தனியாள் மயப்படுத்தப்பட்டதாகவும் பெருமளவில் காணப்படுவதால் இவை வெற்றியடைவது மெதுவாகவே இருக்கின்றது. இலங்கையின் பங்குச் சந்தை பிரதானமாக பாரம்பரிய கருவிகளினால் தோற்றப்படுத்தப்படுகின்ற அதேவேளை பங்குப்பெறுதிகள் வியாபாரம் செய்யப்படுவதற்கான சாத்தியம் பெருமளவில் ஆராயப்படாமலே இருக்கின்றது. நிதியியல் அறிக்கையின் இந்தப் பிரிவிற்கு புத்துயிர் அளிப்பதற்கான பல வழிமுறைகளுக்கு மாறாக கம்பனிப் படுகடன் சந்தை தொடர்ந்தும் மந்தமாகவே இருக்கின்றது. எனினும் தொழில்நுட்பம் மற்றும் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பில் அவதானிக்கப்பட்ட குறிப்பிட்ட அபிவிருத்தியின் நிதியியல் சந்தையை அகலப்படுத்துவதற்கும் நிதியியல் உள்ளடக்கம் மற்றும் உறுதிபாட்டினையும் பொருளாதார அபிவிருத்தினை கொண்டு வருவதற்காகவும் ஊக்கங்களாக நிதியியல் பணிகளை வழங்குபவர்களால் பயன்படுத்தப்பட முடியும் இதேவேளை, பாவனையாளரின் பார்வையில் தற்போதுள்ள நிதியியல் சாதனங்கள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் நம்பிக்கையின்மை புதியவற்றை புறம் தள்ளுவதுடன் நிதியியல் சந்தையில்

1

ஆழப்படுத்துவதற்கானதொரு முக்கிய பின்னடைவை தொடர்ந்தும் இருக்கின்றது. விழிப்புணர்வினையும் நிதியியல் அறிவினையும் உயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் புதிய நிதியியல் சாதனங்களுக்கான கேள்வியினை உருவாக்குவதுடன் நிதியியல் நிறுவனங்கள் புதுமையான கருவிகளையும் திட்டங்களையும் அறிமுகப்படுத்துவதற்கு ஊக்கமளிக்கும். தனித்து வடிவமைக்கப்பட்ட காப்புறுதி மற்றும் இளைப்பாற்றுத் திட்டங்கள் இத்தகைய சாதனங்களில் பொதுமக்களின் உயர்ந்த விருப்பத்தினை உருவாக்குவதுடன் சேமிப்பு மற்றும் முதலீட்டினையும் உயர்வடையச் செய்யும். செலவு மற்றும் தொடர்புபட்ட கட்டுப்பாடுகளினால் சந்தைப் பங்கு பற்றுநர்களினால் அறிதாகப் பயன்படுத்தப்படும் எல்லை வியாபாரத்தினை பிரபல்யமாக்குவதன் ஊடாக பங்குச் சந்தைச் செயற்பாடுகள் தூண்டப்படக்கூடிய அதேவேளையில் ஒழுங்கான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல்களுடன் குறுகிய விற்பனைக்கு வசதியளிக்கலாம். ஒட்டுமொத்தமாக, பொருத்தமான நிதியியல் சாதனங்கள் மற்றும் சந்தைகளின் அபிவிருத்தியின் ஊடாக அடையப்படும் நிதியியல் ஆழப்படுத்துதல் திரவத்தன்மை, வெளிப்படைத்தன்மை, பரம்பல் போன்றவற்றை மேம்படுத்துவது மாத்திரமன்றி அதிர்வுகளுக்கு எதிரான நாட்டின் தாக்குப் பிடிக்கும் தன்மையினையும் அதிகரிக்கும் மேலும் நிதியியல் நிறுவனங்களுக்கிடையில் ஆரோக்கியமான போட்டியில் ஊக்குவிப்பது செலவு வினைத்திறன் வாய்ந்ததும் புத்தாக்கமுடையதுமான சாதனங்களை உருவாக்கி நிதியியல் சந்தையினை வினைத்திறனாக ஆழமாக்குவது மறுபுறத்தில் நாணயக்கொள்கை ஊடுகடத்தலின் வினைத்திறனையும் வேகத்தினையும் மேம்பாடடையச் செய்யும்.

**விரிவடைந்து செல்லும் இலத்திரனியல் பொருளாதாரத்தினால் முன்வைக்கப்படும் எண்ணற்ற சந்தர்ப்பங்கள் உயர்த்தப்பட வேண்டியதுடன் அதனுடன் தொடர்புடைய சவால்கள் தற்போதைய ஒழுங்குபடுத்தல் மற்றும் சட்டக்கட்டமைப்பினூடாக வலுப்படுத்தப்பட வேண்டும்.** உலகம் முழுவதும் இணையத்தள கொடுக்கல்வாங்கல்கள் வளர்ந்துவரும் அசைவுகளுடன் இணையத்தளங்களுக்கிடையில் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்குவதனையும் விற்பதனையும் தோற்றம்பெற்றுவரும் பொருளாதாரங்களுக்கான பங்கு ஒரு குறிப்பிட்டளவிலான முன்னேற்றமுள்ளது. பன்னாட்டுப் பெறுமதிச் சந்தையில் பங்கேற்றல் உயர்ந்த சந்தை நுழைவு மற்றும் பரம்பல் மேம்படுத்தப்பட்ட உள்ளக மற்றும் சந்தை செயற்றிறன் மற்றும் தாழ்ந்த கொடுக்கல்வாங்கல் செலவுகள் போன்ற உறுதிசெய்யப்பட்டதும் உள்ளார்ந்த நன்மைகள் வியாபாரங்களுக்கிடையிலான வியாபாரங்களுக்கும் நுகர்வுகளுக்குமிடையிலான வர்த்தகம் இலத்திரனியல் வர்த்தகம் போன்றவற்றில் இருந்து கிடைக்கப்பெற முடியும். இணையத்தினூடாக விற்பனை செய்யவதுடன் தொடர்புபட்ட கணிசமானளவு உற்பத்தித் திறனும் நன்மையாக இருப்பதாலும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் பணிகளில் துறையிலுள்ளோரும் அதிகம் நன்மைபெறுவதாகவும் ஆராய்ச்சி காட்டுகின்றது. கையடக்க தொலைபேசி ஊடுருவலின் வலுவான வளர்ச்சியினால் காரணம்காட்டப்படக்கூடியதாக இலங்கையின் இலத்திரனியல் வர்த்தகத் துறையின் விரிவான விரிவாக்கம் காணப்பட்ட போதிலும் பிராந்தியத்திலுள்ள சகாக்களுடன் ஒப்பிடுமிடத்து இலத்திரனியல் வர்த்தக ரீதியான விற்பனைகள் ஒப்பீட்டளவில் தாழ்ந்தவையாகவுள்ளன. மேலும் இந்தத்துறையானது தொழில் உருவாக்கம் மற்றும் உற்பத்தி திறன் நன்மை போன்றவற்றினை உருவாக்கக்கூடிய புதிய வழிகளை திறந்துவிடுகின்றமையினாலும் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கரிசனையையும் இது ஏற்படுத்துகின்றது. இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல் நுகர்வோர் பாதுகாப்பு அந்தரங்கம் மற்றும் தரவானது பாதுகாப்பு மற்றும் இணைய குற்றம் போன்றவை தொடர்பான சட்டங்கள் வலுப்படுத்தப்படுவது இலத்திரனியல் பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களையும் பாதுகாத்துக்கொள்வதற்கு இன்றியமையாதது. எனினும் இத்தகைய வலுப்படுத்தல்கள் இலத்திரனியல் வர்த்தகத்தின் மாற்றமடையும் தன்மையை கவனத்தில்கொள்ள வேண்டும். இணையகுற்றங்களின் அதிகரித்த நிகழ்வுகள் மற்றும் உலக இலத்திரனியல் பொருளாதாரத்துடன் இலங்கையின் விரைவான இணைப்பு போன்றவற்றினை கருத்திற்கொண்டு சட்டஅமுலாக்கம் மற்றும் அவசர பதிலிறுத்தும் குழுவின் தொழில்நுட்ப இயலளவினை தொடர்ச்சியாக வலுப்படுத்துவதற்காக ஒன்றுதிரட்டப்பட்ட முயற்சிகள் தேவைப்படுத்தப்படுகின்றன. மறுபுறத்தில் நேரந்தவறாததும் பாரிய தரவுகளினைப் பயன்படுத்தி தொடர்புபட்ட காட்சிகளை ஆதாரமாகக் கொண்ட கொள்கை உருவாக்கத்திற்குமான பல்வேறு சந்தர்ப்பங்களையும் இணையத்தளம் வெளிப்படுத்துகின்றது. இந்தத்தரவு விஞ்ஞானம் நுகர்வோர் நடத்தை பற்றி பெறுமதி மீதான முன்னறிவினை வழங்குவதற்கு உதவுகின்ற அதேவேளை இடர்நேர்வுகளின் உன்னிப்பான கண்காணிப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் இணங்குதலினையும் இயலச் செய்யும். மெய்நிகர் சொத்துக்கள் போன்ற முன்னேற்றகரமான இலத்திரனியல் நிதியியல் சொத்துக்கள் போன்றவற்றுடன் இலங்கை இன்னமும் நன்கு பழக்கப்படவேண்டும். மெய்நிகர் சொத்துக்கள் மற்றும் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்கள் இலங்கை பொருளாதாரத்தில் இன்னமும் வலுவான நுழைவினை உருவாக்கவேண்டிய அதேவேளை அதிகரித்த உலகளாவிய சூழ்நிலையில் அவை வழங்கப்படுகின்ற பெயர் தெரியாத தன்மை பணத்தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பில் ஒரு உத்தியாக பயன்படுகின்றமை போன்ற நியதிகளில் இத்தகைய சொத்துக்களுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளை நாடு பாதிப்படையக்கூடியதாக தொடர்ந்திருக்கின்றது. இத்தகைய புதுமையானதும் மாற்றமடையக்கூடியதுமான சவால்களை மதிப்பிடுவதற்கும் இலத்திரனியல் பொருளாதாரத்தினால் முன்வைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களை அதிகரிக்கின்ற வேளையில் இலத்திரனியல்

மற்றும் பாரம்பரிய பொருளாதாரங்கள் இரண்டிலும் ஆர்வளர்களைப் பாதிக்கின்ற பொருத்தமான ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை தொழில்நுட்பங்களை அடையாளம் காண்பதற்கு ஒன்றுதிரண்ட கொள்கை முயற்சிகள் தேவைப்படுகின்றன.

**கொள்கைத் தீர்மானங்களை அடிக்கடி மறுதலைப் படுத்துவதனை தவிர்த்துக்கொள்வது பொதுக் கொள்கை உருவாக்கத்தின் மீதான நம்பிக்கையை பலப்படுத்துவதற்கும் சமூகப்பொருளாதார வடிவங்களின் உறுதியினை வலுப் படுத்துவதற்கும் இன்றியமையாதது.** அண்மைக்காலங்களில் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் வடிவங்களில் கொள்கைகளின் பொருத்தப்பாட்டின்மை கொள்கை மறுதலைகள் போன்றவற்றை இலங்கை சான்றுபகின்றுள்ளது. முதலீட்டு ஒப்புதல்கள் வெளிநாட்டவரின் காணி வசப்படுத்தல் அஸ்பெஸ்டர்ஸ் பயன்பாடு பொலித்தீன் பயன்பாடு கலைநீக்கல்களின் பயன்பாடு வளமாக்கி உதவுதொகை வழங்குதல் நீண்டகால வசதிஉருவாக்க திட்டமிடுதல் தனியார் மருத்துவக் கல்வி வழங்கல் மதுசாரக்கொள்வனவில் பெண்களின் உரிமை மற்றும் தொடர்புபட்ட வேலைகள் போன்றவற்றுடன் தொடர்பான கொள்கைகளின் சில உதாரணங்கள் ஆகும். சனநாயக அரசியலின் பொதுக்கொள்கை உருவாக்கமென்பது எண்ணிலடங்காத போட்டியிடும் தேவைகளுக்கு இடையில் அரிதான வழங்கலை பகிர்ந்தளிப்பதற்கு போட்டியிடும் இலக்குகள் போட்டியிடும் விருப்பாளர்கள் போட்டியிடும் ஆர்வளர்கள் மற்றும் போட்டியிடும் தந்திரோபாயங்கள் என்பவற்றிலும் ஒரு சமநிலையை அடைவதற்கான முயற்சியுடைய ஒரு செயன்முறையாக இருக்கின்றது. எனவே விடாமுயற்சியுடனான பொதுமக்கள் கலந்துரையாடலுக்குப் பின்னரும் ஒரு பிரச்சனைக்கு அனைத்து ஆர்வலர்களையும் திருப்திபடுத்துகின்ற ஒரு தீர்வு அரிதானதாகும். எனினும் எடுக்கப்பட்ட பின்னர். அடிக்கடி தீர்மானத்தை மாற்றுவது பொதுமக்களின் திருப்தியின்மையையும் அரசாங்கத்தின் நம்பகத்தன்மையையும் குறைவடையச்செய்யும் அதேவேளையில் தொடர்ச்சியான மாற்றங்களுக்கு உள்ளான சீர்குழைக்கும் நுழைவாயிலையும் அழைத்துவரும்.

**மேலும், பொருளாதார முன்னேற்றத்தில் எதிர்நோக்கங்கள் ஒரு மத்திய பங்கு வகிப்பதனால் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் நீடிப்புக்காலம் தொடர்பான நிச்சயமற்றதன்மை தனியார்துறையின் பொருளாதாரத் தீர்மானங்களினைப் பாதித்து பொருளாதாரத்திலும் நீடித்திருக்கும் விளைவுகளை கொண்டிருக்கலாம்.** எனவே கொள்கை பின்பற்றப்படுவதற்கு முன்னர் சான்றினை அடிப்படையாகக் கொண்ட தீர்மானமெடுத்தல் மற்றும் தீர்மானமெடுப்பவர்களுக்கிடையில் ஒருமைப்பாட்டினை உறுதிப்படுத்தல் மூலம் கொள்கை நிச்சயமற்றதன்மை கலாச்சாரம் உருவாகுவதை தவிர்க்கின்ற அதேவேளை, ஒரு மீளாய்விற்கு முன்னர் கொள்கையொன்று தொழிற்படுவதற்கு போதுமான நேரம் அனுமதிக்கப்படவேண்டும்.

**மேலேயும் கடந்தகாலத்தில் ஏற்பட்ட எண்ணிலடங்காத நிகழ்வுகளிலும் வெளிப்படுத்தியதனை போன்று நடுத்தர காலத்திலும் அதற்கப்பாலும் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைத்திருக்கும் பொருளாதார அபிவிருத்திகளை நாடு அடைந்துகொள்வதற்கு தற்போதுள்ளதும் தோற்றம்பெற்றுவருவதுமான பல்வேறு சவால்கள் தீர்க்கப்பட வேண்டும்.** முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதில் அரசின் கடப்பாடு அவசியமானதாகயிருக்கும் அதேவேளையில், ஒரு நடுத்தர வருவாய் கொண்ட பொருளாதாரமாக நாட்டின் முன்னேற்றத்திற்கு உற்பத்தி திறன் வாய்ந்த பொருளாதார செயற்பாட்டில் அதிகரித்த தனியார் துறை பங்கேற்கும் மிக முக்கியமானதாகும். நேரந்தவறாமலும் அதிகரித்த நிலைமாறா தன்மையுடனும் குறிக்கோளுடனும் எடுக்கப்படும் முன்கூட்டிய கொள்கை வழிமுறைகளின் அமுலாக்கம் வளங்களின் வினைத்திறனுடனானதும் நிலைத்து நின்றதுமான பயன்பாட்டினை இயலச்செய்து நாட்டின் பொதுமக்களின் மேம்பட்ட நலன்களுக்கு வசதியளிக்கும்.